Registered as a Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 37 கதிர் : 100 | ஞாயிற்றுக்கிழமை 06 மார்ச் 2022 | மாசி 22 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16+16 | விலை: 40/=

# எரிபொருள் தாராளம்!

## வரிசை வேண்டாம் மக்களே!!

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் கோரிக்கை
வடக்குக்கும் சீரான விநியோகம்

**கொழும்பு, மார்ச் 6**

**இலங்கைக்கு போதியளவு எரிபொருள் கிடைக்கப்பெற்றுள்ளது. நாடு முழுவதற்குமான விநியோகம் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்துள்ளார். இதேவேளை - வடக்கு மாகாணத்துக்கு போதுமானளவு டீசல், மண்ணெண்ணெய், பெற்றோல் என்பனவற்றை ஏற்றிக்கொண்டு கொழும்பிலிருந்து புறப்பட்ட 33 ஆயிரம் லீற்றர் கொள்ளளவுடைய பவுஸர்கள் சில நேற்றிரவு யாழ்ப்பாணத்தை வந்தடைந்துள்ளன.** 15

## அபிவிருத்திக் குழுவுக்கே கீதநாத் நியமிக்கப்பட்டார்!

பிரதமர் அலுவலக அறிக்கையால் அங்கஜனின் முகத்தில் கரி!

விரிவு 15ஆம் பக்கம்

## சுதந்திரக் கிண்ணத்தை கைப்பற்றியது வடக்கு

பியூஸ்லஸ'க்கு அர்ப்பணம்

யாழ்ப்பாணம், மார்ச் 6
இலங்கை உதைபந்தாட்ட சம் மேளனம் நடத்திய மாகாணங்களுக்கு இடை 15

## அதிகளவு போதை மாத்திரையால் பறிபோனது இளைஞனின் உயிர்

அதிகளவான போதை மாத்திரைகளை உட்கொண்ட இளைஞன் ஒருவன் கட்டுவனில் உயிரிழந் 15

## மணற்காடு சுவீகரிப்பு மக்கள் கடும் எதிர்ப்பு!

பின்வாங்கியது வனவளத்திணைக்களம்

யாழ்ப்பாணம், மார்ச் 6
மக்களின் எதிர்ப்பால் மணற்காடு சவுக்கம் தோப்புப் பகுதியை வனவள 15

## ஆளுங் கட்சியின் 16 எம்.பிக்கள் சபையில் சுயாதீனமாக இயங்குவர்

எதிர்வரும் தேர்தல்களில் மொட்டுடன் சுதந்திரக் கட்சி கூட்டு வைக்காது

கொழும்பு, மார்ச் 6
அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்ட விமல் வீரவன்ஸ மற்றும் உதய 15

# கூட்டமைப்பு உறுப்பினர் மற்றும் சகோதரி மீது இளவாலைப் பொலிஸார் காட்டுமிராண்டித்தனம்

- தாக்குதலில் மயக்கமடைந்த பல்கலைக்கழக மாணவி
- பிரதேசசபை உறுப்பினர் மீதும் கடும் தாக்குதல்
- தாக்குதல் நடத்தும்போது சிரித்துச் சிரித்து வீடியோ எடுத்த பொலிஸார்
- அரசியல் தரப்பின் ஏவலாளிகளாக பொலிஸ்?
- வீட்டின் மீது மீண்டும் தாக்குதல்



யாழ்ப்பாணம், மார்ச் 6
மானிப்பாய் பிரதேச சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் அ.ஜோன் ஜிப்றிக்கோ, அவரது தாய், சகோதரிகள் இருவர், மாமா உட்பட 5 பேரை இளவாலைப் பொலிஸார் நேற்று மாலை கைது செய்துள்ளனர். பொலிஸ் நிலையத்தில் வைத்து பிரதேசசபை உறுப்பினர் மீதும் அவரது சகோதரி மீதும் காட்டுமிராண்டித் 15




hoolaham.org | aavanaham.org

# இலங்கையின் செயற்பாட்டில் சர்வதேச நாடுகள் அதிருப்தி!

## ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் சுட்டிக்காட்டு

**கொழும்பு, மார்ச் 6**

**இலங்கையில் நல்லிணக்கச் செயற்பாடுகளில் போதியளவு முன்னேற்றம் இல்லை என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் சுட்டிக் காட்டி யுள்ள சர்வதேச நாடுகள், பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளன.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நேற்றுமுன்தினம் இலங்கை தொடர்பாக நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய நாடுகளின் பிரதி நிதிகள் இவ்வாறு வலியுறுத்தினர்.

நெதர்லாந்து நாட்டின் பிரதிநிதி உரையாற்றியபோது, இலங்கை யில் ஜனநாயக ரீதியான நிறுவ னங்கள் வலுவிழக்கப்படுகின்ற மற்றும் சுயாதீனமான நீதித்துறை யில் போதுமான திருப்தியின்மை காணப்படுகின்றது. அதேபோன்று கடந்த காலத்தவறுகள் தொடர்பான விடயங்களில் பொறுப்புக்கூறல் போதுமானதாக இல்லை. இது தொடர்பாக நாம் கரிசனையை வெளிப்படுத்துகிறோம் - என்று குறிப்பிட்டார்.

நோர்வே நாட்டின் பிரதிநிதி உரை யாற்றும்போது, சிவில் சமூகம் மீதான தன்னிச்சையான கைது கள் மற்றும் அச்சுறுத்தல்கள் கண் காணிப்புக்களை இலங்கை அர சாங்கம் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். பொறுப்புகூறல் நல்லி ணக்க செயற்பாட்டில் போதுமான முன்னேற்றம் இன்மை தொடர்பாக நாம் பெரியளவில் கரிசனை செலுத்தியிருக்கின்றோம் - என்று கூறினார்.

பிரிட்டன் பிரதிநிதி உரையாற்றும் போது, காணாமற்போனோர் தொடர்பான அலுவலகத்தின் செயற்பாடுகள் மிகவும் தாமத மான, மந்தகதியான முறையில் செல்கின்றமை பொறுப்புக்கூறலில் முன்னேற்றத்தை வெளிக்காட் டாமை என்பது தொடர்பாக நாம் கரிசனை செலுத்துகின்றோம். பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள திருத்தச்சட்டத்தில் மாற்றங்கள் மிக வும் வரையறுக்கப்பட்டதாகவே காணப்படுகின்றன. இது ஒரு நீண்ட கால கரிசனையை வெளிப் படுத்திநிற்கின்றது என்று தெரிவித் தார்.

ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதி உரை யாற்றும்போது, சர்வதேச தரத் துக்கு அமைவான முறையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை கொண்டுவர வேண்டும். தற்போது இலங்கையில் சிவில், சமூக அமைப்புக்கள்மீதான சித்திர வதை கள் மற்றும் கண்காணிப்புக்களை நாங்கள் மிக வன்மையாகக் கண் டிக்கிறோம் - என்றார்.

சவூதிஅரேபியா பிரதிநிதி உரை யாற்றும்போது; இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாக்க முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் பாராட்டத்தக்கவை. மனித உரிமை கள் பேரவையுடன் இலங்கை இணைந்து செயற்படுவது வரவேற் கத்தக்கது என்று கூறினார்.

ஜேர்மனியின் பிரதிநிதி உரையாற் றும்போது, பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பாக அதிகளவான, பரந்துபட்டரீதியிலான மறுசீர மைப்பு அவசியமாகின்றது என்று கூறினார். (எ-7)

---

# காணிகளை அபகரிக்க வட்டுவாகலில் முயற்சி

## து.ரவிகரன் குற்றச்சாட்டு



முல்லைத்தீவு, மார்ச் 6

முல்லைத்தீவு, வட்டுவாக லில் உள்ள தமிழ் மக்க ளுக்குச் சொந்தமான பூர்வீகக் காணிகளை விடுவிக்கும் எண்ணம் கடற்படையினருக்கு இல்லை. தமிழ்மக்களின் காணிகளைப் பறிக்கவே தொடர்ந்தும் முயற்சிக் கின்றனர். இவ்வாறு வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் குற்றஞ்சாட்டி யுள்ளார்.

இதுதொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

முள்ளிவாய்க்கால்கிழக்கு, வட்டுவாகல் அக்கரை என்று அழைக்கப்படும் பகுதியில் 617 ஏக்கர் காணி கள் கடற்படைத்தளத்துக்காக அபகரிக்கப்பட்டுள் ளன. 2009ஆம் ஆண்டுவரையில் இந்தக் காணி கள் தமிழ் மக்களின் பயன்பாட்டில் இருந்தன.

மக்கள் போரால் இடம்பெயர்ந்து, மீள்குடியமர்ந்த போது இந்தக் காணிகள் அபகரிக்கப்பட்டு, கோத்தா பய கடற்படைமுகாம் என்ற பெயரில் கடற்படை முகாம் அமைக்கப்பட்டது. அவற்றில் 379 ஏக்கர் 2 ரூட் 4 பேர்ச் தனியார் காணிகளும், 291 ஏக்கர் ஒரு ரூட் 6 பேர்ச் அரச திணைக்களத்தால் வழங்கப்பட்ட காணிகளுமாக மொத்தம் 670 ஏக்கர் 3 ரூட் 10 பேர்ச் காணியில் 617 ஏக்கர் காணி அபகரிக்கப்பட்டு கடற்படை முகாம் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் காணிகளுக்கு அருகில் மீனவர்களின் கரைவலைப் பாடுகளும் உள்ளன. தற்போது அங்கு மீன்பிடியில் ஈடுபடக் கடற்படையினர் தடைகளை ஏற்படுத்து கின்றனர்.

இந்தக் காணிகள் எமது மக்களின் பூர்வீக வாழ்வா தாரக் குடியிருப்புக் காணிகளாகும். எமது மக்களின் வருவாய்களை முடக்கும் வகையில் இந்தக் கடற் படை முகாம் அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் காணி களை விடுவிக்கக்கோரி மக்கள் பல தடவைகள் போராட்டம் நடத்தியுள்ளனர், நடத்தி வருகின்றனர். மக்கள் போராட்டங்களில் ஈடுபடும்போது அவற்றை அடக்கி ஒடுக்கவே முயற்சிக்கப்படுகின்றது.

இந்தக் காணிகளை கடற்படைக்கு வழங்க வேண்டும் என்று அறிவித்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன. இந்தக் காணிகள் விடுவிப்பில் முழு ஈடுபாட்டுடன் செயற்ப டாத சிலர், பணமாவது கிடைக்கும் என்ற எண்ணத் துடன் மாவட்டச் செயலரைச் சந்தித்துள்ளனர். ஆனால், பெரும்பாலானவர்களுக்கு காணிகளைக் கொடுக்கும் எண்ணமில்லை. எமது மக்களின் பூர் வீகக் காணிகள் அவர்களுக்கே மீளக் கொடுக்கப்பட வேண்டும் - என்றார். (எ-246)

---

*கோதுமை மா பற்றாக்குறையால் யாழில்*

# வெதுப்பகங்களை மூடும் நிலைமை!

## நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 6

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள வெதுப்பகங் களை மூட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்று மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர் சங்கம் தெரி வித்தது.

நேற்று யாழ்ப்பாணத்தில் சங்கத்தின் பிரதிநிதிகளால் ஊடக சந்திப்பு ஒன்று நடத்தப்பட்டது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர்கள் இந்தத் தகவலைத் தெரி வித்தனர்.

அவர்கள் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது:-

யாழ்ப்பாணத்தில் வெதுப்பக உற்பத்திகளுக்காக விநி யோகிக்கப்படும் மாவின் அளவு குறைக்கப்படவுள்ளது என்று வடக்குக்கான பிறிமா மா விற்பனை முகவர் களுடன் நேற்று நடந்த சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது. எமக்கு வழங்கப்படும் மாவின் அளவைக் குறைக்கக் கூடாது என்று கோரியிருந்தோம். ஆயினும் அவர்கள் எதிர்வரும் நாள்களில் மாவின் அளவு குறைக்கப்படும் என்று தெரிவித்தனர்.

மா விநியோகிக்கப்படும் அளவு குறைக்கப்பட்டால் வெதுப்பகங்களை மூடவேண்டிய நிலைமை ஏற்படும். தற்போது காணப்படும் எரிபொருள் தட்டுப்பாட்டாலும் எமக்கு நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. போதியளவு மா இல்லாத காரணத்தால் வெதுப்பக உற்பத்திப் பொருள்களின் உற்பத்தி அளவைக் குறைக்கத் தீர் மானித்துள்ளோம். இந்த விடயம் தொடர்பில் யாழ். மாவட்டச் செயலருடன் கலந்துரையாடி எமது பிரச்சி னைக்குத் தீர்வு கோரவுள்ளோம். இது தொடர்பாக மாவட்டச் செயலருக்குக் கோரிக்கை கடிதம் ஒன்றை யும் அனுப்பியுள்ளோம் - என்றனர். (எ-26,27)

---

# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

வவுனியா பிரதேச செயலகத்தின் 2022 ஆம் ஆண் டுக்கான கலாசார பேரவை பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 11 ஆம் திகதி வெள் ளிக்கிழமை பி.ப.3 மணிக்கு வவுனியா பிரதேச செயலகத்தின் குணநாயகம் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் பிரதேச செயலகத் துக்குட்பட்ட கலைஞர்களை தவறாது கலந்துகொள் ளுமாறு பிரதேச செயலாளர் நா. கமலதாசன் அறி வித்துள்ளார். (ச-110)

---

# பியூஸ்லஸின் உடல் மன்னாரில் அஞ்சலிக்கு



மன்னார், மார்ச் 6

மாலைதீவில் உயிரிழந்த இலங்கை தேசிய கால்பந்தாட்ட வீரர் டக்சன் பியூஸ்லஸின் உடல் நேற்றுமுன்தினம் வெள்ளிக் கிழமை மன்னார் பனங்கட்டுக் கொட்டிலிலுள்ள அவரது இல்லத் துக்குக் கொண்டுவரப்பட்டது.

இதன்போது யாழ்ப்பாணத்திலி ருந்து மன்னார் வரும் வழியில் அவருக்கு பூநகரி, முழங்காவில், தேவன்பிட்டி, விடத்தல்தீவு, ஆண் டாங்குளம், அடம்பன் ஆகிய இடங் களைச் சேர்ந்த கால்பந்தாட்டக் கழக வீரர்கள், ஆயிரக்கணக்கான மக்கள் அஞ்சலி செலுத்தினர். [illegible] வீரர்கள், வர்த்தகர்கள், மன்னார் மாவட்ட முச்சக்கரவண்டி உரிமை யாளர்கள், பொதுமக்கள், அரசி யல் பிரதிநிதிகள் என பல ஆயிரக் கணக்கானவர்கள் ஒன்றிணைந்து பியூஸ்லஸின் உடலைப் பவனி யாக எடுத்து வந்தனர்.

உடல் அஞ்சலிக்காக மன்னார் பனங்கட்டுக் கொட்டிலுள்ள அவ ரது இல்லத்தில் வைக்கப்பட்டு நாளை மாலை மன்னார் பொது மயானத்தில் அடக்கம் செய்யப்பட வுள்ளது. (ம-14,213,56)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொறுப்புக்கூறல்களில் இலங்கை பின்னடைவு

## மிச்செல் பச்லெட் சுட்டிக்காட்டு



கொழும்பு, மார்ச் 6

**இலங்கையின் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்க செயற்பாடுகள் பின்னடைவு மிக்கனவாகவே காணப்படுகின்றன. இலங்கையின் சர்வ தேச உபாய முறைகளைத் தொடர்ச்சியாகப் பயன்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இலங்கை தொடர்பான விவாதம் நடைபெற்றது.

அதில் தனது எழுத்துமூலமான அறிக்கையை வெளியிட்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையில் சுயாதீன நீதித்துறை பலப்படுத்தப்படுவதுடன் இராணுவத்தில் தங்கியிருத்தல் தவிர்க்கப்பட்டு, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக மாற்றி அமைக்கவேண்டியது அவசியமாகும்.

இலங்கையில் குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கப்படாத கலாசாரம் நீடித்துக் கொண்டிருக்கின்றது. அதைத் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

வன்முறைகள் இடம்பெறாத வகையில் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை வழங்குவது தொடர்பில் உணரக்கூடிய வகையிலான செயற்பாடுகள் இடம்பெறாத நிலைமை நீடித்துக் கொண்டிருக்கின்றது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை இலங்கையின் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்காகச் சர்வதேச உபாய முறை களை தொடர்ச்சியாகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இலங்கையில் புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையுடன் இலங்கை இணைந்து செயற்பட முன்வந்துள்ளமை, மறு சீரமைப்புக்கான சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளமை என்பனவற்றை நாங்கள் அங்கீகரிக்கின்றோம்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முற்றாக மாற்றி அமைக்க வேண்டியது அவசியமாகும்.

பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்ச்சியாக தமது நீதிக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால், அதுமறுக்கப்படுகின்றது. நம்பிக்கை, உண்மை மற்றும் நீதி தொடர்ச்சியாக மறுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இவை தொடர்பாக ஆழ்ந்த கவலை கொண்டுள்ளேன் - என்றார். (எ-7)

# இலங்கையைக் கைவிடும் சீனா

## கடன்கள் வழங்காதிருக்க தீர்மானம்?



கொழும்பு, மார்ச் 6

இலங்கைக்கு மேலும் கடன்களை வழங்காமல் விலகியிருப்பது தொடர்பில் சீனா தீவிரமாகப் பரிசீலித்து வருகின்றது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

சீனாவின் உயர்மட்டக்குழுவொன்று தற்போது கொழும்பில் உள்ளது. இவர்கள் இந்தத் தீர்மானம் தொடர்பாக சீனாவின் உயர்மட்ட அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளனர் என்று கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. பீஜிங் இரண்டு காரணங்களின் அடிப்படையில் கொழும்புக்கு மேலும் கடன்கள், உதவிகளை வழங்காதிருக்கத் தீர்மானித்துள்ளது.

மத்திய அதிவேக வீதியின் மூன்றாம் கட்ட நிர்மாணப் பணிகளில் பிரச்சினைகள் எழுந்துள்ளமையே பிரதான விவகாரமாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டாவது காரணம் கருத்து வேறுபாட்டுக்குரிய சீனாவின் உரக்கப்பல் கொழும்புக்கு வந்தபோது திருப்பி அனுப்பப்பட்டமை ஆகும்.

அதேவேளை, சீனா இதற்கு முன்னர் 16 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான கடனை இலங்கைக்கு வழங்கியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-ரி1)

# இலங்கையின் சுயநிலை தெரியாமல் அறிக்கை!

## ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 6

இலங்கையின் சுயநிலைமைகள் தெரியாமல் ஆதாரமற்ற விடயங்களை ஆணையாளரின் அறிக்கை உள்ளடக்கியிருக்கின்றமை ஆழமான கவலைக்குரிய விடயமாகும் என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஜெனிவா மனித உரிமைகள் சபையில் நேற்றுமுன்தினம் இலங்கை தொடர்பான விவாதம் நடைபெற்றது. ஆணையாளர் சமர்ப்பித்த எழுத்துமூல அறிக்கைக்கு இலங்கை சார்பில் பதிலளித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை தொடர்பாக 2021 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 46/1 என்ற பிரேரணையை இலங்கை நிராகரிக்கின்றது. அது ஏற்றுக்கொள்ளப்பட முடியாத விடயங்களை உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது.

முக்கியமாக ஆதாரங்களைத் திரட்டுகின்ற பொறிமுறையைக் கொண்டிருக்கின்ற இந்தப் பிரேரணையின் 6ஆவது பந்தியை நாம் கடுமையாக எதிர்க்கிறோம். இலங்கையின் சுயநிலைமைகள் தெரியாமல் ஆதாரமற்ற விடயங்களை அறிக்கை உள்ளடக்கியிருக்கின்றமை ஆழமான கவலைக்குரிய விடயமாகும்- என்றார். (எ-7)

# 6 நாடுகளிடம் அரசாங்கம் கடன் பெறுவதற்கு முயற்சி

## சாடுகின்றது ஜே.வி.பி.

இலங்கை அரசாங்கம் 6 நாடுகளிடமிருந்து 2.5 பில்லியன் டொலரைக் கடனாகப் பெற முயற்சித்துள்ளது.

ஆனால் அந்தக் கடனை எவ்வாறு மீளச்செலுத்துவது என்ற திட்டம் எதுவும் அரசாங்கத்திடம் இல்லை.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸா நாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார். (எ-ரி1)

# பெண்ணின் மீது தாக்குதல்; பொலிஸில் முறைப்பாடு

வவுனியா கற்பகபுரம் பகுதியில் பெண் ஒருவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட நிலையில், தாக்குதலுக்கு இலக்கான பெண் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை நடந்துள்ளது என்று கூறப்படுகின்றது. பெண்ணுக்கும், அவரது உறவினருக்கும் இடையே இருந்த முரண்பாட்டின் தொடர்ச்சியாகவே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதலுக்கு இலக்கான பெண் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் பூவரசங்குளம் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-110)

"பெண்ணின் பெருந்தக்க யாவுள"

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின்
கிளிநொச்சி மாவட்ட மகளிர் அணி நடாத்தும்

தமிழ்த் தேசிய மகளிர் நாள்- 2022

காலம் : 2022.03.07ஆம் திகதி திங்கட்கிழமை
இடம் : கிளிநொச்சி பசுமைப்பூங்கா வளாகம்
நேரம் : மாலை 3 மணி

தலைமை
திருமதி கௌசலா ஜெயக்காந்தராசா
(தலைவி, கிளிநொச்சி மாவட்ட மகளிர் அணி)

முதன்மை அதிதி
திருமதி. பானு பிரகாஷ்
(அரசியல் ஆலோசகர், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகரகம், கொழும்பு.)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
மகளிர் அணி,
கிளிநொச்சி மாவட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேலைக்கு ஆட்கள் தேவை**

யாழ். நகரில் புதிதாக ஆரம்பிக்க உள்ள Super Market இற்கு ஆண்கள், பெண்கள் தேவைப்படுகின்றனர்.
1) முன் அனுபவம் விரும்பத்தக்கது.
2) யாழ். நகரை அண்டியுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
3) முழுநேரமாகவும், பகுதி நேரமாகவும் வேலை செய்யக் கூடியவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்பு: 077 355 1631

**வேலை வாய்ப்பு**

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள நிகழ்வுகளிற்கான அலங்காரங்கள் செய்யும் நிறுவனத்தில் வேலைவாய்ப்பு.
1. ஆண்கள் :- (முழு நேரம்) - 25000/=
2. பெண்கள் (முழு நேரம்)
   I. வரவேற்பாளர் - 16000/=
   II. Store வேலை - 18000/=
3. Cleaning - ஆண் / பெண் - 20000/=
4. பெண்கள் (பகுதி நேரம்) - 5.00 pm-8.30 pm வரவேற்பாளர்

ஆர்வம் உள்ளவர்கள் நேரில் வரவும்.
தொடர்புகளுக்கு:
077 775 0318
No.120, பலாலி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(CR 8004) 1-6

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



பிறப்பு 30 . 11 . 1948

இறப்பு 30 . 01 . 2022

கடந்த 30.01.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

## அமரர் சரஸ்வதி குஞ்சிதபாதம்

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (06.03.2022) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பத்தானை வீதி,
தாவடி தெற்கு, கொக்குவில்.

குடும்பத்தினர்
077 707 9185

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 04 . 04 . 1952

மறைவு 01 . 03 . 2017

## அமரர் சுந்தரமூர்த்தி பாலச்சந்திரன்

திதி: பூர்வபக்க சதுர்த்தி (06.03.2022)

எங்கள் அன்புத் தெய்வமே!
பாசத்தை பொழிந்து பண்பினை ஊட்டி
பார் போற்ற எம்மை வளர்த்த அப்பாவே!
கண்ணின்று நீர் வழிந்தோட
கலங்க வைத்த எம் குலவிளக்கே!
தாத்தா என்று அழைக்கும் போதெல்லாம்
நீங்கள் இல்லாது கலங்குகிறது எம் இதயம்
தன்னந்தனியே தவியாய் தவிக்க விட்டு
ஆண்டுகள் ஐந்து உருண்டோடி மறைந்தாலும்
எம் நெஞ்சை விட்டு அகலாது
உங்கள் அன்பு முகம்
வையகத்தில் நாம் வாழும் காலம்வரை
நெஞ்சத்தில் உங்கள் நினைவு நிழலாடும்
உங்கள் ஆத்மா சாந்திபெற
கண்ணீர் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்,
மருமகன், மருமகள், பேர்த்திகள்.

நெருஞ்சியோலை,
பன்னாலை,
தெல்லிப்பழை.

(cs.18716) (2.6)

# விமல், கம்மன்பிலவை தக்கவைக்க வேண்டும்

### திலும் அமுனுகம வலியுறுத்து



கொழும்பு, மார்ச் 6

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ, பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில ஆகிய இருவரையும் அரசில் தக்கவைத்துக்கொள்ள வேண்டும். அதற்கான சமரசப் பேச்சு ஆரம்பிக்கப்படவேண்டும் என்று அமைச்சர் திலும் அமுனுகம நேற்றுத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை மட்டும் கருதி, சில தரப்புக்களால் முன்வைக்கப்படும் யோசனைகளையெல்லாம் ஏற்று செயற்படமுடியாது. சுதந்திரக்கட்சி அரசிலிருந்து வெளியேறுவதாக இருந்தால் வெளியேறட்டும். அதை நாம் தடுக்கவில்லை. ஆனால் விமல், கம்மன்பில போன்றவர்களைத் தக்க வைத்துக்கொள்ளவேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழமைபோல தனது வேலையை விமல், கம்மன்பில போன்றவர்களுக்கும் காண்பித்துவிட்டார். மாநாட்டுக்கு வந்த அவர், பங்காளிக்கட்சிகள் நடத்திய ஊடக சந்திப்புக்கு வரவில்லை. நம்ப வைத்து காலைவாரிவிட்டார் - என்றார். (எ-44)



### பொன்விழாவை முன்னிட்டு

# தேசிய சேமிப்பு வங்கியால் சாவகச்சேரியில் உதவிகள்

சாவகச்சேரி, மார்ச் 6

தேசிய சேமிப்பு வங்கி தனது பொன்விழா வருடத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பிக்கவுள்ளது. அதன்படி முதற்கட்டமாக சர்வதேச மகளிர் தினத்தையொட்டி சாவகச்சேரி தேசிய சேமிப்பு வங்கிக் கிளையால் 'ஸ்திரி' ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்ட நிகழ்வு நேற்று சனிக்கிழமை சாவகச்சேரி சிவன் கோவில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

கிளை முகாமையாளர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக வங்கியின் உதவிப் பொதுமுகாமையாளர் அகமட் லெப்பை. அப்துல் கலீம், சிறப்பு விருந்தினராக வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் ந.பகீரதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது வாடிக்கையாளர்களாக இணைந்த 88 மகளிருக்கு வங்கிப்புத்தகங்கள் வழங்கப்பட்டதுடன் வங்கி நடைமுறைகளுக்கு அமைவாகச் செயற்படும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க அங்கத்தவர்களுக்கு உதவிக் கடன் தொகையாக தலா 2 லட்சம் ரூபா வீதம் வழங்கும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டன. (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த சிந்தனை

# வழிதவறுவோர்க்கு விழிகளாவோம்

ஓர் ஆச்சிரமத்தில் வாழும் தவயோகியிடம் மூன்று சீடர்கள் பயிற்சிப் பணியில் ஈடுபட்டு வந்தனர். குருவின் சட்ட திட்டங்களையும் அறிவுரைகளையும் பின்பற்றி சீடத்துவத்துக்கு எடுத்துக்காட்டாக நன்மதிப்பைப்பெற்று பயின்று வந்தனர். ஒரு சீடன் அமைச்சலின்றி பொய்யுரைபேசி ஏமாற்றுத் தனத்துடன் தீய வழிகளில் நடந்து ஆச்சிரமத்தின் பெயரைக் கெடுத்துவந்தான். உடன் சீடர்கள் குருவிடம் முறைப்பட்டனர். குருவோ எதுவும் பேசாதிருந்தார்.

மீண்டும் மீண்டும் முறைப்பட்டபோது 'அவன் இருக்கட்டும்' என்றார். அவனது உருட்டும் புரட்டும் அதிகரித்துச்சென்றன. ஒருநாள் நேர்மையான சீடர்கள் குருவே அந்தச் சீடனால் ஆச்சிரமத்துக்கும் உங்களுக்கும் மக்கள் மத்தியில் அவமரியாதை ஏற்படுகின்றது. அவனை ஆச்சிரமத்தை விட்டு நீக்கிவிடுங்கள் இல்லையேல் நாம் சென்றுவிடுகின்றோம் என்றனர். விரும்பினால் நீங்கள் செல்லலாம். இங்கே தொடர்ந்து இருக்க வேண்டியவன் அந்தச் சீடனே. ஏனெனில் அந்த சீடனுக்குத்தான் நல்வாழ்வுப் போதனை தேவைப்படுகின்றது என்றார்.

தண்ணீரில் மூழ்கி உயிர்ப்போராட்டத்தில் தத்தளிப்பவர்களுக்கே மீட்புப்படகு தேவை. பாதுகாப்பாய் நேர்வழியில் பயணிப்பவர்களுக்கு அல்ல. இயேசு மண்ணுலகுக்கு வந்ததன் நோக்கமும் இதுதான்.

எஸ்.யேசுதாஸ், கொழும்புத்துறை




Ideal Finance உம், Mahindra Finance உம் கைகோர்த்து Mahindra Ideal Finance என்ற புதிய அமைப்பாக உருவெடுக்கின்றன. இவ்வமைப்பு இலங்கையில் புதிய நிதித் தயாரிப்புக்களையும், சேவைகளையும் தந்து, உயரும் வாடிக்கையாளர்களை வலுவூட்டும்

- பரந்த கிளை வலைப்பின்னல்
- Fitch தரப்படுத்தல் AA- (நிலையான உறுதிப்பாடு)
- மாறாத நம்பிக்கை மற்றும் உயர்ந்த சேவை

## எமது தயாரிப்புகள்

| | | | |
|---|---|---|---|
| தங்கக் கடன்கள் | தனிப்பட்ட கடன்கள் | நுகர்வோருக்கான நிலையான கடன்கள் | வாகன லீசிங் |

இலங்கை – BFSI இல் மிகச்சிறந்த 10 வேலைத்தளங்களில் ஒன்றாக (GPTW, 2021)

www.mahindraifl.lk | Hotline Number: 011 7 724 724

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 இல. 42 நிதி வர்த்தக சட்டத்தில் அனுமதிப்பத்திரம் பெற்றது ஓ அனுமதி இல. (042) | கூட்டிணைவு சான்றிதழ் இல. PB 4963 (திகதி – 24/1/2021)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## பழி அரசிடம் பாவம் மக்களிடம்

இலங்கை முன்னெப்போதும் இல்லாத பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டிருக்கின்றது. உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட கொரோனாத் தொற்று இலங்கையின் இந்த நிலைமைக்குக் காரணம் என்கின்றது அரசாங்கம். கொரோனாத் தொற்றால் ஏற்பட்ட பாதிப்புக்களை விடவும், அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களே நாட்டை இத்தனை நெருக்கடியில் தள்ளியிருக்கின்றன என்று கூறுகின்றனர் பொருளாதார நிபுணர்கள். ஆனால், அரசாங்கம் அதைத் தொடர்ச்சியாக மறுதலித்தே வருகின்றது.

இப்போது சர்வதேச நாணய நிதியம் இலங்கை தொடர்பாக மேற்கொண்ட ஆய்வின் அறிக்கையில் அரசாங்கத்தின் செயற்பாடுகள் கடுமையாக விமர்சிக்கப்பட்டிருக்கின்றன. அரசாங்கம் நெருக்கடிகளைச் சமாளிப்பதற்காகத் தான்தோன்றித்தனமாகச் செயற்பட்டு, நாட்டை இன்னும் இன்னும் நெருக்கடிக்குள் தள்ளியிருக்கின்றது என்பதை அந்த மீளாய்வு அறிக்கை புடம்போட்டுக் காட்டுகின்றது.

இலங்கையால் இனியும் கடன் சுமையை சுமக்க முடியாது என்று கூறியுள்ள சர்வதேச நாணய நிதியம், பணம் அச்சிடுவதை உடனடியாக நிறுத்தவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது. அதேநேரம் இலங்கையின் எதிர்காலம் இருண்டதாகவே இருக்கப்போகின்றது என்பதையும் அது தொட்டுக்காட்ட மறக்கவில்லை.

2019ஆம் ஆண்டில் நாட்டின் வரிகளைக் குறைத்து 'உற்பத்திப் பொருளாதாரத்தை' உருவாக்குவதற்காக, நிதி அச்சடிப்பில் ஈடுபட்டமையே நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமைக்குக் காரணம் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கின்றது. 2021ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கம் 1.2 டிரில்லியன் ரூபாவை அச்சிட்டுள்ளது. இதனால் ஏற்பட்ட பணவீக்கம், நாட்டின் பொருளாதாரத்தைப் படுகுழிக்குள் அமிழ்த்தியிருக்கின்றது.


அரசாங்கத்தின் முன்யோசனையற்ற செயற்பாடுகளால் நாட்டின் பொருளாதாரம் படுகுழிக்குள் வீழ்ந்து கொண்டிருக்க, அதன் பிரதிபலிப்புக்கள் அனைத்தும் பழி ஓரிடம் பாவம் ஓரிடம் என்பதைப்போன்று சாதாரண மக்களின் தலையிலேயே வீழவுள்ளன. நிலைமை எல்லை தாண்டிச் சென்றுள்ள நிலையில், இலங்கை மத்திய வங்கி எரிபொருள், மின்சாரக் கட்டணங்களை உடனடியாக உயர்த்த வேண்டும் என்று ஒற்றைக்காலில் நிற்கின்றது. நாட்டில் பண ஸ்திரமின்மையைத் தடுக்க வட்டி வீதங்கள் மற்றும் வரிகளை உடனடியாக உயர்த்தவேண்டும் என்று சர்வதேச நாணய நிதியமும் பரிந்துரைத்திருக்கின்றது. ஏற்கனவே நாட்டில் பொருள்களின் விலைகள் உச்சம் தொட்டுள்ள நிலையிலேயே இந்தப் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

நாட்டின் மீட்பர், ஏழு மூளைக்காரர் என்று பதவிகளுக்குக் கொண்டுவரப்பட்ட ராஜபக்சக்கள் நாட்டிலுள்ள பிரச்சினைகளுக்கும், தங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லாதது போன்று செயற்படுகின்றனர். நாட்டு மக்களைப் பற்றியோ, நாட்டின் எதிர்காலம் பற்றியோ கிஞ்சித்தும் கவலை கொள்ளாது, தங்களதும், தங்கள் வாரிசுகளினதும் அரசியலுக்காக நாடகங்களை நடத்திக் கொண்டிருக்கின்றனர். தங்களின் சொல்லுக்குத் தலையாட்டுபவர்களைத் தேடிப் பதவிகளில் நிரப்பிக் கொள்வதிலேயே அக்கறை காட்டுகின்றது ராஜபக்ச குடும்பம். நிர்வாகத்தில் சூரப்புலி என்று கொண்டுவரப்பட்டவர் குடும்பத்தினரின் செயல்களுக்குத் தலையாட்டும் பொம்மையாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்.

அரசாங்கம் கூறுவதைப்போன்று மாதங்களில் முடிந்துவிடுகின்ற பிரச்சினை இதுவல்ல. இவற்றின் பிரதிபலிப்புக்கள் ஆண்டுக் கணக்கில் தொடரத்தான் போகின்றன. இப்போது நடப்பவை வெறும் ஆரம்பம் என்பதே உண்மை. நாயின் வேலையைக் கழுதையிடம் கொடுத்தால் அதனால் ஏற்படும் விளைவுகளையும் அனுபவிக்கவேவேண்டும். அவற்றையே இப்போது இலங்கை மக்கள் அனுபவிக்க ஆரம்பித்திருக்கின்றனர்.

### நாளொரு நல்வார்த்தை

"மாற்றம் மட்டுமே வாழ்க்கையில் நிலையானது. அந்த மாற்றங்களுக்கு ஏற்ப மாறும் திறன் உங்கள் வாழ்க்கையின் வெற்றியை தீர்மானிக்கும்" – பெஞ்சமின் பிராங்க்ளின்



# '13' ஆவது திருத்தத்தின் ஊடாக அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு!

## ஐ.நா.வில் தெரிவித்தது இந்தியா

**கொழும்பு, மார்ச் 6**

**இலங்கையில் '13' ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வை மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். தமிழ் மக்கள் சம உரிமையுடன் ஐக்கிய இலங்கைக்குள் வாழ்வதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் - இவ்வாறு இந்தியாவின் ஜெனிவாவுக்கான பிரதிநிதி வலியுறுத்தியுள்ளார்.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை அமர்வில் இலங்கை தொடர்பான விவாதம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. ஆணையாளரின் உரையின் பின்னர் நாடுகளின் பிரதிநிதிகள் உரையாற்றினர். அப்போது உரையாற்றும்போதே இந்தியாவின் பிரதிநிதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையில் அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வை மேற்கொள்வதற்காக 13ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இலங்கையில் தமிழ்மக்கள் சமத்துவம், நீதி, சமாதானம், கௌரவத்துடன் ஐக்கிய இலங்கைக்குள் வாழ்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இலங்கையில் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்கு சமத்துவம், நீதி மற்றும் சமாதானம், கௌரவம் என்பது உறுதிப்படுத்தப்படவேண்டும் - என்றார். (எ-7)

# சுதந்திரக்கட்சியினரை சந்திக்கிறார் கோத்தா

## மஹிந்த, விமல், கம்மன்பில சந்திப்பு ஒத்திவைப்பு

கொழும்பு, மார்ச் 6

சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கும், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கும் இடையிலான சந்திப்பு நாளைமறுதினம் 8 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்தத் தகவலை சுதந்திரக்கட்சி உறுப்பினரான இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன உறுதிப்படுத்தியுள்ளார்.

அரசின் செயற்பாடுகளை கடுமையாக விமர்சித்த விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோரை அமைச்சரவையில் இருந்து ஜனாதிபதி வெளியேற்றியுள்ளார். எனினும், பங்காளிக்கட்சிகளின் கூட்டத்தில் பங்கேற்ற சுதந்திரக்கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதனால், சுதந்திரக்கட்சியினருக்கு இறுதி எச்சரிக்கை விடுக்கும் நோக்கிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெறக்கூடும் எனத் தெரியவருகின்றது.

இதன்போது தமது தரப்புக் கோரிக்கைகளையும் சுதந்திரக்கட்சி முன்வைக்கும்.

அதேவேளை, விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில மற்றும் வாசுதேவ நாணயக்கார ஆகியோருக்கும், பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கும் இடையில் நடைபெறவிருந்த பேச்சு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்பு நேற்றுமுன்தினம் இரவு நடைபெறவிருந்தது. (எ-44)

நாளை 07.03.2022 திங்கட்கிழமை மாசி 23

சுபநேரம் : 12.25 - 01.55


ராகுகாலம்: 07.55 - 09.25

இணுவில் சிவகாமியம்மை கொடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 27 - 03 - 1997




மறைவு 03 - 03 - 2022

## அமரர் சிறீதரன் ரேவிதன்

**( மேற்பார்வை உத்தியோகத்தர் J.J.Mills ஆடைத்தொழிற்சாலை - மன்னார் )**

வவுனியா இறம்பைக்குளத்தைப் பிறப்பிடமாகவும் வெளிக்குளம் முதலாம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட சிறீதரன் ரேவிதன் அவர்கள் 03.03.2022 வியாழக்கிழமை அன்று அகால மரணமடைந்தார் .

அன்னார் சிறீதரன் பிறேமநந்தினி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும் விவேகன் . லக்சனா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார் .

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 06.03.2022 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக வெளிக்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**இல .34 9D, 1 ஆம் ஒழுங்கை**
**வெளிக்குளம் வவுனியா.**

**தகவல்**
**குடும்பத்தினர்**
**0766460885, 0777031113**

(CS 00972) (4/6)

# மரண அறிவித்தல்

## ஜெயபதி மகேஸ்வரி

**தோற்றம் : 04.06.1939** **மறைவு: 05.03.2022**



பாலாவோடை, இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயபதி மகேஸ்வரி அவர்கள் நேற்று (05.03.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பசுபதி இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், ஜெயபதியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மயில்வாகனம், தில்லைநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரி, ஸ்ரீபதி, சாந்தீஸ்வரி மற்றும் கமலேஸ்வரி, சத்தியேஸ்வரி, குணசீலன், பராசக்தி ஆகியோரின் அன்பு மைத்துனியும், கபிலன், விமலன், மயூரன், கிரிதரன், திவ்யா ஆகியோரின் அன்பு மாமியும், சசிகுமார், நிஷாந்தியின் அன்பு பெரியம்மாவும், தருநிஷாவின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2022) ஞாயிற்றுக்கிழமை பி.ப 12.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பாலாவோடை,**
**இணுவில் மேற்கு,**
**சுன்னாகம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 4598 221**

(CS 18737) 1-6

# மரண அறிவித்தல்



## திருமதி நடராசா இராசமணி

யாழ்ப்பாணம் உடுவிலைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா இராசமணி அவர்கள் நேற்று (05.03.2022) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலங்சென்றவர்களான திரு.திருமதி நாகலிங்கம் பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலங்சென்றவர்களான திரு.திருமதி சுப்பையா சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நடராசாவின் (கார் EY 2745) அன்பு மனைவியும், சாந்தினி, விஜயதாசன் (லண்டன்), ரவிதாசன், ரஞ்சினி (ஜேர்மன்), பாஸ்கரன், பகீரதன், கௌரி (யா/கொக்குவில் இந்து கல்லூரி), சிறீதாசன், அமரர்களான சிறீபாலன், மகேஸ்வரன் மற்றும் பாலமுகுந்தன், உஷா, முரளிதரன் (யா/வசாவிளான் ம.வி) ஆகியோரின் அன்புத் தாயாரும், அமிர்தநாயகம், ரஜீவி (லண்டன்), சதர்சினி, பத்மலிங்கம் (ஜேர்மன்), பாரதி, மகேந்திரராஜா (அதிபர், கிளி/ செல்வாநகர் அ.த.க. பாடசாலை), விஜித்திரா (குடும்பநல உத்தியோகத்தர்), ம.சுபாசினி, பா.சுபாசினி, ஜெகதரபவன், அனிந்திதா (யா/மண்டைதீவு ம.வி) ஆகியோரின் அன்பு மாமியாரும், மௌலிகா, சுபீட்சன், யதுர்சிகா, யதுர்சனா, மகிழினி, தமிழினி, சிந்துஜன், தனுஜன், நிரோஜன், கீர்த்தனா (யாழ். பல்கலைக்கழகம்), அபிநயா, மதுவந்தி (ஊவா வெல்லஸ பல்கலைக்கழகம்), ஆரபி, கவின்மாறன், நிவிக்கா, தேனுசா, கரிகாலன், துளசிகா, நர்த்தனா, காருண்யா, சரண், அகரன், ஆருத்ரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலங்சென்றவர்களான சிவராசா, சிவபாலசிங்கம், சிவமலர், இரத்தினம், சிவானந்தம் மற்றும் அன்னம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலங்சென்றவர்களான செல்லத்துரை, மாணிக்கம், இரத்தினம், அன்னலம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் (53/9.4ம் ஒழுங்கை, பலாலி வீதி, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்) இன்று (06.3.2022) ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.00 மணியளவில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**
**077 354 9643**
**077 6176 122**

(CS 18735) 1/6)

# மரண அறிவித்தல்

பிறப்பு 13 - 10 - 1949



இறப்பு 02 - 03 - 2022

## திருமதி நாகலிங்கம் சரஸ்வதி

இணுவில் பாரதி வீதியை பிறப்பிடமாகவும் சண்முகம் வீதி சாங்கத்தானை சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகலிங்கம் சரஸ்வதி அவர்கள் கடந்த (02.03.2022) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு கனகம்மா அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஆண்டி வள்ளிப்பிள்ளை அவர்களின் மருமகளும், நாகலிங்கம் (ஆறுமுகம்) அவர்களின் அன்பு மனைவியும், சுமதி (லண்டன்), சுதன் (இத்தாலி), சுபாஸ் (இத்தாலி), சுமன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், அருள், துஷானா, நிஷா, கௌதமி ஆகியோரின் அன்பு மாமியாரும், சாலினி, சாமினி, பானுஜன், தனுஜன் (லண்டன்), அகில், அஜனா (இத்தாலி), நிகாஸ், நிரூஜா (இத்தாலி) சஸ்விக், எமிக்கா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2022) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் பிற்பகல் 11.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**சண்முகம் வீதி,**
**சாங்கத்தானை,**
**சாவகச்சேரி.**

**தகவல்**
**குடும்பத்தினர்**
**074 235 1713**

(CS 18717) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு



கடந்த 21.01.2022 அன்று பிரான்சில் இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி

அமரர்
## சடாட்சரம் ஜெகசோதி மலர்


அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (06.03.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் 195 A ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள நியூ லட்சுமி மண்டபத்தில் நடைபெறும். அத்தருணம் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக வும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS 43372) 1-6

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



அன்னை மடியில் 20.05.1940

ஆண்டவன் அடியில் 04.03.2022

## நாகலிங்கம் விசயரத்தினம்

யாழ். நீர்வேலி அச்செழுவைப் பிறப்பிடமாகவும், பின்லாந்து Helsinki ஐ வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் விசயரத்தினம் அவர்கள் நேற்று முன்தினம் (04-03-2022) வெள்ளிக்கிழமை அன்று யாழ்ப்பாணத்தில் சிவபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், தேவமலர் (பின்லாந்து) அவர்களின் அன்புக் கணவரும், நந்தகோபன் (கோப்), துஷ்யந்தி (பின்லாந்து), தமயந்தி (லண்டன்), கார்த்திகா (கனடா), வேணுகோபன், உதயகோபன் (பின்லாந்து), பிருந்தா (லண்டன்), ஸ்ரீரங்கன (லண்டன்), யதுநந்தன் (பின்லாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற வர்களான மகேஸ்வரி, லட்சுமிப்பிள்ளை, கோபாலசிங்கம், சுப்பிரமணியம் மற்றும் மங்கையற்கரசி, வெற்றிவடிவேல் ஆகியோரின் அன்புச் சகோ தரரும்,ஜெயந்தி, கேசவேந்திரன், மோகன், ஜெயாழினி, டயானா, மணி மாறன், சர்மிளா, விதுஷிகா ஆகியோரின் அன்பு மாமனாரும், விஷ்ணு காந்த், அஷிவிகா, திருஷ்னா, தாயகன், வேங்கையன், வையகன், சானுகா, சானிலா, சாயிரா, சுஜீரா, கருண், கானகி, யாழகி, யாதவன், விசாகன், இலக்கியா, இயல்யா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (07.03.2022) திங்கட்கிழமை அச்செழு மத்தியிலுள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நண்பகல் இறுதிக்கிரியை நடைபெற்று பூதவுடல் அச்செழு இந்து மயானத் தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோபு : 077 930 4307
வேணு : 077 303 1037

தகவல் :
குடும்பத்தினர்

(CS 18719) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Join The DIMO Tribe

80 ஆண்டுகால பாரம்பரியத்தைக் கொண்டுள்ள DIMO நிறுவனம் 100க்கும் மேற்பட்ட சர்வதேச வர்த்தக நாமங்களுடனான கூட்டாண்மையின் வாயிலாக இலங்கையிலும், அதன் எல்லைகளுக்கு அப்பாலும் 15க்கும் மேற்பட்ட துறைகளில் தனது ஆதிக்கத்தினை நிலைநிறுத்தி வருகின்றது.

எமது நிறுவனத்தின் ஊழியர் மதிப்பு முன்மொழிவின் பிரகாரம் **"மகிழ்ச்சியான மற்றும் தகுந்த அங்கீகாரமளிக்கும்"** நட்புறவான ஒரு பணிச்சூழலை உருவாக்குவதன் வாயிலாக எமது ஊழியர்களின் தனிப்பட்ட மற்றும் தொழில்சார் முன்னேற்றத்திற்கு நாம் உதவுகின்றோம். பன்முகத்தன்மையான தீராத வேட்கையுடைய ஒரு நிறுவனத்தின் அங்கத்தவர்களென்ற வகையில், தொடர்ச்சியான கற்றல் திறன்அபிவிருத்தி மற்றும் ஊக்கப்படுத்தலின் வாயிலாக எமது ஊழியர்களின் ஒவ்வொரு வளர்ச்சிப் படியிலும் நாம் துணை நிற்கின்றோம்.

எமது இந்தப் பயணத்தில் நீங்களும் இணைந்து கொள்வதற்கான அழைப்பு இதோ!

**காசாளர் - யாழ்ப்பாணம் (நிதி மற்றும் கணக்கியல்)**

பணிக்கான கடமைகள்:
தன்னியக்கச் சூழலில் சிறப்பாகவும், துரிதமாகவும் காசாளர் பணியினை மேற்கொள்ளுதல்.

பணிக்கான தகுதிகள்:
- க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் கணிதம் மற்றும் ஆங்கிலத்தில் சிறப்புச் சித்தி.
- க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தி.
- இதே துறையில் தொழில் அனுபவம் இருப்பின் மேலதிக தகுதியாகக் கொள்ளப்படும்.
- சிறந்த கணனி அறிவு அவசியம்.
- சிங்கள மற்றும் ஆங்கில மொழி ஆற்றல் மேலதிக தகுதியாகக் கொள்ளப்படும்.
- தனிப்பட்ட ஆளுமைத் திறன்கள் வரவேற்கப்படும்.

உங்கள் விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முறை:
இந்த விளம்பரம் வெளியான திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் உங்களது சுயவிபரக் கோவையை careers@dimolanka.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். மின்னஞ்சல் தலைப்பில் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடவும்.

DIMO ஒரு சமவாய்ப்பு வழங்கும் நிறுவனமாகும்.

DIMO
Chief Human Resources Officer
DIESEL & MOTOR ENGINEERING PLC
65, Jethawana Road, Colombo 14
011 244 9797 | www.dimolanka.com
www.facebook.com/careersDIMO

# யானைகளைக் கட்டுப்படுத்துவதற்கு அகழிகளை அமைக்கப் பரிசீலனை

**கிளிநொச்சி, மார்ச் 6**

**யானைகளைக் கட்டுப்படுத்துவதற்கு அகழிகள் அமைப்பது தொடர்பாகப் பரிசீலிக்கப்பட்டது. கிளிநொச்சி - அக்கராயன்குளத்தின் கீழான நாகதம்பிரான் கமக்கார அமைப்பின் புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் ஸ்கந்தபுரம் பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போதே யானைகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் பரிசீலிக்கப்பட்டது.**



அக்கராயன் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் எ.பார்த்தீபன் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் இது தொடர்பான கருத்துரைகள் முன்வைக்கப்பட்டன.

கடந்த காலபோகத்தின் போது, யானைகளால் பெருமளவு நெற்பயிர்கள் அழிக்கப்பட்டன. இனிவரும் காலபோக அறுவடையில் இவ்வாறான இழப்புக்களை எதிர்நோக்கமுடியாது. எனவே யானைகளைக் கட்டுப்படுத்துவதற்கு வயல் நிலங்களுக்கு அருகில் அகழிகள் அமைப்பது தொடர்பான தீர்மானங்களை முன்னெடுக்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் குறித்த நிர்வாகத் தெரிவில், அமைப்பின் புதிய தலைவராக சி.கனக சபாபதி, செயலாளராக இ.ரவிக்குமார், பொருளாளராக சி.சிவகுமார், உப தலைவராக சிவராசா சிவகுமார், உப செயலாளராக ச.செந்தில்நாதன் ஆகியோருடன் 6 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

(ம-14,13)

# அருளாசியுரையும் வேதபாராயணமும்

**யாழ்ப்பாணம், மார்ச் 6**

**இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், ஆனைக்கோட்டை கண்ணகிபுரம் இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ கு.கிஸ்ணராஜக்குருக்களின் அருளாசியுரையும் வேதபாராயணமும்** நாளை காலை 6.30 மணிக்கு இடம்பெறவுள்ளன.

(ம-14)

# நிர்வாகத்தெரிவு

யாழ்ப்பாணம், மார்ச் 6

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் புதிய நிர்வாகத்தெரிவு கடந்த 4 ஆம் திகதி கொத்தணி கலையரங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது தலைவராக தி.இந்திரசித்து, செயலாளராக ப. தவராசா, உபதலைவராக த. சண்முகலிங்கம், நிர்வாக உறுப்பினர்களாக செ.செல்வராஜா, நா.கணேசன், இ.குணசீலன், தி.ஜெயச்சந்திரன்,த.றசிபன், த. தயாகரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

(ம-14,63)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 08 . 06 . 1937

மறைவு 16 . 02 . 2021

கடந்த (16.02.2021) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் ஐயம்பிள்ளை அப்புக்குட்டி

அவர்களின் முதலாம் ஆண்டு திவச ஆத்ம சாந்திக் கிரியைகள் நாளை (07.03.2022) திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகௌ்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்

காந்திஜீ வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(cs 18707 (2.6)

# மரண அறிவித்தல்



தோற்றம் 10 . 08 . 1947

மறைவு 05 . 03 . 2022

## மார்க்கண்டு யோகராசா

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் தொட்டியடி விசுவமடுவை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு யோகராசா நேற்று (05.03.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் மார்க்கண்டு கமலமலர் நாயகத்தின் அன்பு மூத்த மகனும், யோகராணியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான தேவராசா, மகேந்திரராசா மற்றும் இராஜேஸ்வரி, நாகராசா (செல்லக்கண்டு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கனகேஸ்வரி (கண்ணம்மா), ஞானரூபி (ரூபி), காலஞ்சென்ற சிவபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும், குலேந்திரன் (குலன் - புளியங்கூடல் வேலணை) இரவீந்திரன் (ரவி - புளியங்கூடல்), ஞானேந்திரன் (ஞானம் - தமிழ் நம்பி சுத்திகரிப்பு நிலையம் - கைவேலி புதுக்குடியிருப்பு), தவேந்திரன் (தவம் - புதிய தமிழ் நம்பி ரயர்கடை - கைவேலி புதுக்குடியிருப்பு), யோகாம்பிகை ( அம்பிகா - விசவநாதர் ஆரம்பப் பாடசாலை - ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயகலா (கவிதா), வரதா (வனசா), வாசுகி, தவரூபி, விஜயதீபன் (தீபன்) ஆகியோரின் மாமனாரும், தினுஷன், றொஷான், அனுஷன், விதுஷா, யுகந்தன், அகிலஜா, ஒளியரசன், நேரினி, யாழிசை, கஜீபன், பிரவீனா, தமிழ்ச்சுடர், சஜித், அன்பரூபி, தர்மிகா, திஷாளி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக 12 ஆம் கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குளவீதி, தொட்டியடி,
விசுவமடு.

(CS 43374) (4/6)

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



அன்னையின் மடியில் 07.11.1930

இறைவன் அடியில் 02.03.2022

## கந்தையா கந்தப்பிள்ளை

**இளைப்பாறிய ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரி.**

யாழ் தாவடியை பிறப்பிடமாகவும், உயரப்புலம் ஆனைக்கோட்டை (உத்துங்க விநாயகர் கோயில் முன்பாக) மற்றும் பிரித்தானியாவைப் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கந்தப்பிள்ளை அவர்கள் கடந்த (02.03.2022) சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி கந்தையா தம்பதிகளின் இளைய மகனும், காலஞ்சென்றவர்களான திரு திருமதி தாமோதிரம்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இளைப்பாறிய ஆசிரியை பகவதிதேவியின் அன்பு கணவரும், அனபாயன் (ஜீவா, கனடா), காலஞ்சென்ற வாசுகி, Dr. பார்த்திபன் (இலண்டன்), சுமதி (இலண்டன்), Dr. பதுமினி (இலண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான இராசலக்சுமி, கனகம்மா, கமலாதேவி, கந்தசாமி ஆகியோரின் அன்பு சகோதரனும், காலஞ்சென்றவர்களான கந்தையா, மயில்வாகனம் , தியாகராஜா, சகுந்தலா ஆகியோரின் மைத்துனரும், சிறிரஞ்சன் (இலண்டன்), நிலானி (கனடா) , அன்பழகன் (இலண்டன்), சங்கர் (இலண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், லக்சுமன், ரூபன், மயூரி, அபிராமி, வைதேகி, கௌதம், பீஷ்மர், வைசாலி, ராகுல், வைஷ்ணவி, மாதுளன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக Asian Funeral Care, 35 Kenton Park Parade, Kenton Road, Harrow, HA3 8DN இல் நேற்று (05.03.2022) சனிக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் 6 மணி வரையும், இன்று (06.03.2022) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 12.30 மணி தொடக்கம் 3.30 மணி வரையும் வைக்கப்படும். இறுதிக் கிரியைகள் நாளை (07.03.2022) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில், 73, The Ridgeway, Kenton, HA3 0LW முற்பகல் 9 மணி தொடக்கம் 11 மணி வரை நடைபெற்று தகனக் கிரியைகள் பிற்பகல் 12 மணியளவில் Hendon Crematorium, Holders Hill Rd, London NW7 1NB இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு**

| | |
|---|---|
| திரு. அனபாயன் ( ஜீவா ) | : + 1 6473889173 |
| Dr. பார்த்திபன் | : + 44 7971486921 |
| திரு. சிறிரஞ்சன் | : + 44 7841522514 |
| திரு. அன்பழகன் | : + 44 7932030261 |
| திரு. சங்கர் | : + 44 7909269426 |
| திருமதி. நிலானி | : 01 4167799173 |
| திருமதி.சுமதி | : + 44 7951003583 |
| Dr. பதுமினி | : + 44 7940841664 |

(CS 18706) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலவச ஆங்கில, கனினி வகுப்புக்கள்

க.பொ.த (உ/த) 2021 பரீட்சைகளிற்கு தோற்றிய மாணவர்களுக்கான விசேட பிரிவுகள்

**பிரிவு 36**

- Diploma in English / Spoken English
- Diploma in ICT
- Diploma in Singala
- Diploma in Political Science
- Diploma in Psychology & Counselling

■காலம்:- 3 மாதங்கள் ■சான்றிதழ் வழங்கப்படும்.

**ஆரம்பம்:**
**12/03/2022 , 10.00AM**

குறிப்பு
- மாணவர்கள் விரும்பியகற்கைகளை தொடர முடியும்.
- அச்சடித்த பாடக்குறிப்புகள்
- மாதாந்த மதிப்பீடுகள்.

(CS 18678) (4/6)

**IPS** to Your Future
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
T.P:- 021 434 0229
076 685 2529

## மணமகள் தேவை

தென்மராட்சியை பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் யாழ். இந்து கௌரவ குடும்பம் 1991.01.24 ஆம் திகதி பிறந்த பரணி நட்சத்திரம் 5அடி 8 அங் உயரம் கொண்ட மொறட்டுவ பல்கலை-கழகத்தில் MSc பட்டம் பெற்று கொழும்பிலும், வெளிநாட்டிலும் Constuction ஆக தொழில் புரியும் மணமகனுக்கு (பட்டதாரி) மணமகளை எதிர்பார்க் கின்றார்கள்.

(CR 37195) (3/6) **077 141 6610**

## மணமகள் தேவை

1983 இல் பிறந்த கொழும்பில் வசிக்கும் BA படித்து சுயதொழில் செய்யும் மணமகனுக்கு 7 இல் செவ்வாய் தோஷம் அற்றது பொருந்தக்கூடிய அழகிய படித்த மணமகளை எதிர் பார்க்கின்றோம் உள்நாட்டு, வெளிநாட்டு. (CR 37196) (3/6)

**075 669 6801 / 011 259 8824**

## மணமகள் தேவை

1983 யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த கார்த்திகை - 4, 35 கிரக பாவம் கொண்ட அரச சேவை மணமகனுக்கு பொருத்தமான சைவபோசன மணமகள் தேவை.

**075 217 8635, 077 239 5894** (CS 18708) (3/6)

## காணி விற்பனைக்கு

கந்தர்மடத்தில் அண்ணளவாக ஒரு பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (வணிகம்/குடியிருப்புக்கு உகந்தது மற்றும் செவ்வக வடிவில் உள்ளது) (ACO 18178) (3/6)

**தொடர்பு : 075 019 4693**

## வவுனியாவில் வீடு தேவை

வவுனியா நகருக்கு அண்மையாக வீடு ஒன்று விலைக்கு தேவை.

(CS 18693B) (3/6) **070 605 9585**

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ். நகரில் இருந்து இரண்டு மைல் சுற்றாடலில் சிறிய வீடு வாடகைக்கும் அதே சுற்றாடலில் சிறிய வீடு விலைக்கும் தேவை.

(CS 43333) (3/6) **076 183 8476, 021 222 7535**

## வீடு வாடகைக்கு உண்டு

கொக்குவிலில் மேல்மாடி வீட்டின் மேற்பகுதி மட்டும் வாடகைக்கு உண்டு. (தரகர் தேவையில்லை) **077 007 1488** (CS 18691) (3/6)

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ். மாவட்டத்தில், யாழ்ப்பாணம் தொடங்கி தெல்லிப்பளை வரையிலான இடைப்பட்ட ஏதேனும் ஒரு பிரதேசத்தில் வயோதிபர் மற்றும் அவரது உதவியாளர் ஆகியோருக்கு உடன் வீடு வாடகைக்கு தேவை. 3 அறைகள், attached bathroom மற்றும் கார் தரிப்பிடம் உள்ளடங்கலாக காணப்படல் வேண்டும். (CS 18694) (3/6)

**021 222 2440, 077 808 4047**

## வீடு வாடகைக்கு தேவை

அரச வேலை பார்க்கும் 3 பேர் அடங்கிய குடும்பத்திற்கு கிளிநொச்சியில் வீடு வாடகைக்குத் தேவை.

**077 139 1159**

## பெயர் மாற்றம்

199 Baring Road, London SE12 OPX இல் வசிக்கும் **யோகநாதன் றெக்ஸ் டேமியன்** ஆகிய நான் எனது பெயரை **யோகநாதன் றொசான்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **யோகநாதன் றொசான்** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசுக்கு அமைவாக உறுதிப் படுத்துகின்றேன்.

(CS 18715) (3/6) **யோகநாதன் றொசான்**

## வாகனம் விற்பனைக்கு

Toyoto Accion G.Plvs 2018 பதிவு 2020 CBL - xxxx, 87000km ஓடியது. முதலாவது உரிமையாளர் wine Red Interior Beighe F/O Electric seat showroom contition
விலை 15.9 Millian (CR 37194) (3/6)

**077 703 3630/ 077 768 0072**

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Yamaha Fazer இல NP BGI XXXX மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு விலை 630 000/=, 9616km

(CS 18724) (3/6) **076 879 7369**

## வாடகைக்கு

யாழ். பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் மாடி வீடு அலுவலக உபயோகத்திற்கு வாடகைக்கு உண்டு. (நிறுவனங்கள் விரும்பத்தக்கது) (CS 43373) (3/6)

**தொடர்பு : 077 968 6050**

## வேலை வாய்ப்பு

எமது தனியார் விளம்பர நிறுவனத்துக்கு தரம்-10, O/L,A/L படித்த ஆண், பெண் இருபாலாரும் வேலைக்குத் தேவை நேர்முகத் தெரிவு மூலம் தெரிவு செய்யப்படும்.

No.109B, புங்கன் குளம் வீதி, யாழ்ப்பாணம்.
**076 865 1408**

## தேவை

பளைப்பிரதேசத்தில் உள்ள பண்ணை ஒன்றைத் தங்கி இருந்து பராமரிக்க சிறு குடும்பம் ஒன்று தேவை. **070 605 9585** (CS 18693 A) (3/6)

## தேவை

**வீட்டுப் பணிப்பெண் தேவை**
தொடர்பு: **077 463 9934**

## வேலைவாய்ப்பு

அனைத்து துறைகளுக்கும் பணியாளர்கள் தேவை
(பயிற்சி பெற்ற அல்லது பயிற்சியற்றவர்கள்)

**WASH / UNDERWASH**
**Rs. 25,000 - Rs. 45,000**

**VEHICLE DETAILER**
**Rs. 40,000 - Rs. 60,000**

உணவு மற்றும் தங்குமிட வசதி இலவசம்!!!

CAREPOINT — மேலதிக கொடுப்பனவு, அதிகூடிய சம்பளம்

சதீஸ் : 0759 400 632
சமந்த : 0777 555 069

## வேலையாள்கள் தேவை

திருநெல்வேலியில் உள்ள ரெஸ்ரோரன்ட் ஒன்றிற்கு வேலையாள்கள் தேவை.
Waiters, Salesmen **077 653 4411** (CS 18710) (3/6)

## வேலைக்கு ஆள் தேவை

யாழ் நகரில் இருந்து 5km தொலைவில் உள்ள நிறுவனம் ஒன்றிற்கு வேலைக்கு ஆள் தேவை கூட்டுப்பண்ணை, தோட்ட வேலை தெரிந்தவர்கள் விரும்பின் தொடர்பு கொள்ளவும்.

**077 202 1415**

## மணி விழா நாயகியை மனதார வாழ்த்துகின்றோம்



Best Wishes

யா/ கொழும்புத்துறை சென் ஜோசப் வித்தியாலயம்
**செல்வி பெலிசிற்றா பாக்கியராணி அருளப்பு றிச்மன்ட்** (ஆரம்பக்கல்வி ஆசிரியர்)
(BA, SLTS - I)


சேவைக்காலம்

| | | | |
|---|---|---|---|
| மு/ மாங்குளம் ம.வி | 15.04.1985 | - | 04.02.1988 |
| யா/ கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி | 05.02.1988 | - | 31.12.1989 |
| மு/ மாங்குளம் ம.வி | 01.01.1990 | - | 19.09.1993 |
| கிளி / வேரவில் இந்து ம.வி | 20.09.1993 | - | 31.12.2002 |
| யா/ புனித சாள்ஸ் ம.வி | 01.01.2003 | - | 14.02.2014 |
| யா/ கெழும்புத்துறை சென் ஜோசப் வித்தியாலயம் | 15.02.2014 | - | 05.03.2022 |

எமது வித்தியாலயந் தனிலே
ஆரம்பக்கல்வி ஆசிரியராக
அர்ப்பணிப்போடு சேவையாற்றி
மாணவர்களுக்கு நல் ஆசிரியராய்
ஆசிரியர்களுக்கு நற்சகோதரியாய் திகழ்ந்து
எல்லோருடனும் உறவாடி
இன்றைய நாளில் மணிவிழாக்காணும்
ஆசிரியப் பெருந்தகை அவர்கள்
சகல செல்வங்களும் பெற்று பல்லாண்டு
வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: யா/ சென்ஜோசப் வித்தியாலயம்
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள்

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மறைவு : 06.03.2011

**அமரர் எஸ்.ஆர்.ஜெயப்பிரகாசம்**
(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர், பிரதேச செயலகம் – உடுவில்)

எமது அருமை அப்பா!
ஆண்டுகள் பல ஓடி மறைந்தாலும் - எம்
நெஞ்சை விட்டு அகலாது உங்கள் நினைவுகள் - அப்பா
எம்மீது அன்பைப் பொழிந்து அரவணைத்து நின்றீர்கள்
கல்வியில் நாம் உயர அயராது உழைத்தீர்கள்
நேர்மையாய் நாம் வாழ வாழ்ந்து காட்டினீர்கள்
உறவுகளோடு பாசத்தைப் பகிர்ந்து வழிநடத்திச் சென்றீர்கள்
உங்களைப் பிரிந்த எமது இதயவலி இறைவனே அறிவார்.

இன்றும் கண்ணீர் வழிந்தோட உங்கள் நினைவுகளுடன் கலங்கி நிற்கின்றோம்
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(CS 18672) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடல் எடை குறைய வேண்டுமா?

◎ எடை கூடுகிறதா?
◎ வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
◎ உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

**பால்மா குளிசை** - வயிறு, மார்பு குறைக்கும் கிறீம் 15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா? ➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா?➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா?
➤பொன்னாங்காணி, கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணைய் குளிசை
இந்த எண்ணையைப்பாவித்து பயனடைய

(cr 37149)

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்பு கூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை, பால்மா என்பன விற்பனைக்குண்டு**

கருமை நிறம் நீங்க வேண்டுமா?

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

## வேலையாள்கள் தேவை

வடமாகாணத்தில் இயங்கும் பிரபல தனியார் Company ஒன்றிற்கு O/L, A/L படித்த பணியாளர்கள் தேவை. (வயது 20 - 30) சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும். தங்குமிட வசதிகள் உண்டு.

(CS 18709) (3/6)

**077 225 6562 / 076 854 8714**

## விலை மனுக்கோரல்

யாழ்நகரில் அமையவுள்ள
3 மாடி (வீடு, 4815 மொத்த சதுர அடி) கட்டடத்திற்கு கட்டட ஒப்பந்தகாரர்களிடமிருந்து விலை மனுக் கோரப்பட்டுள்ளது.

**வர்ணப்பூச்சு, மின்சார இணைப்பு**
என்பவற்றிற்குத் தனித்தனி விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(CS 18695) (2/6)

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

**New Ranganas**
62, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். 077 654 4158

## விற்பனையாளர்கள் தேவை

**யாழ்ப்பாணம்** மற்றும் **கொழும்பில்** அமைந்துள்ள **பிரபல்யமான**
**புடைவையகத்துக்கு**
**விற்பனையாளர்கள்** தேவை. அனுபவமுள்ள மற்றும் அனுபவமற்ற **ஆண், பெண்** இருபாலாரும் தொடர்புகொள்ளவும். சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம்.

(CS 18687) (2/6)

**077 768 4520, 077 465 2744**

## விநியோக முகவர்கள் தேவை
Distribution Agents

இலங்கையர்களின் 60 வருடகால நம்பிக்கையை வென்ற ஆயுர்வேத மருத்துவ துறையின் முன்னோடியான பஸ்யாலே ஆயுர்வேத மருத்துவ தனியார் நிறுவனத்துடன் ஒன்றிணைந்திடுங்கள். ஆயுர்வேத பிரிவிற்கு வடக்கு, வடமத்திய, ஊவா, கிழக்கு மாகாணங்களிலிருந்து விரும்பத்தக்கது.

**பஸ்யாலே ஆயுர்வேத மருத்துவ [தனியார்] நிறுவனம்**
**இல.321/3, தல்பிட்டிய வீதி, மஹர, கடவத்தை.**
**தொலைபேசி இல. 077 453 7489 / 077 106 5272**

## மணமகள் தேவை

யாழ்.ஆதி சைவக் குருமார் 1985ல் அனுச நட்சத்திரத்தில் பிறந்த செவ்வாய்க்குற்றமற்ற மா நிறமான 5 அடி 8 அங் உயரமான உயர் தரம் படித்த இலங்கைப் பிரஜையாக பிரான்சில் PR உடைய மணமகனுக்கு, சைவபோசன அல்லது சைவபோசனமாக வாழக்கூடிய அல்லது போசன விவகாரத்தில் விட்டுக்கொடுத்து இணைந்து வாழக்கூடிய பிரான்சில் அல்லது ஐரோப்பிய நாடுகளில் வதியும் அல்லது பிரான்சில் உயர்கல்வி கற்பதற்கான தகுதியுள்ள இலங்கையில் வதியும் 1986 - 1993 ற்கிடையில் பிறந்த பிரான்சில் சென்று வாழக்கூடிய அழகிய மணப்பெண்ணை எதிர்பார்க்கிறோம்.

(CS 18665) (3/6) **077 959 3393**

## தேவை

மில்வேலை, உதவியாளர், பொதியிடல் என்பவற்றிற்கு ஆண், பெண் ஊழியர் தேவை. தொடர்பு: பிருந்தா மில் 179, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 077 174 6101

## ரோமானியா வேலைவாய்ப்பு

| | |
|---|---|
| 50 - சட்டரிங் காபென்டர் | - 600USD ( Rs.120,600/- ) |
| 50 - மேசன் | - 600USD ( Rs.120,600/- ) |
| 100 - ஸ்ரீல் பிக்சர் | - 650USD ( Rs.130,650/- ) |
| 20 - டோசர் ஒப்பரேட்டர் | - 650USD ( Rs.130,650/- ) |
| 50 - எக்சவேட்டர் ஒப்பரேட்டர் | - 600USD ( Rs.120,600/- ) |
| 50 - எலக்ரீசியன் | - 700USD ( Rs.140,700/- ) |
| 50 - ஓட்டோ பெயின்டர் | - 600USD ( Rs.120,600/- ) |
| 20 - ஆஸ்போல்ட் ஒப்பரேட்டர் | - 650USD ( Rs.130,650/- ) |
| 50 - அலுமினியம் பப்ரிகேட்டர் | - 650USD ( Rs.130,650/- ) |
| 25 -பியூட்ரிசியன் | - 500USD ( Rs.100,500/- ) |
| 25 - சிவில் எஞ்சினியர் | - 1000USD ( Rs.201,000/- ) |
| 50 - வெல்டர் | - 650USD ( Rs.130,650/- ) |
| 50 - பிளம்பர் | - 600USD ( Rs.120,600/- ) |
| 50 - ஜேசிபி ஒப்பரேட்டர் | - 650USD ( Rs.130,650/- ) |
| 50 - லேத்மெசின் ஒப்பரேட்டர் | - 600USD ( Rs.120,600/- ) |
| 50 - கிரேன் ஒப்பரேட்டர் | - 650USD ( Rs.130,650/- ) |
| 50 - டையில் மேசன் | - 600USD ( Rs.120,600/- ) |

- தங்குமிடம்,மருத்துவ வசதி,போக்குவரத்து வசதி,வழங்கப்படும்.
- உணவு வழங்கப்படும்
- 2 வருட ஒப்பந்தம் வேலை நேரம் ஒரு நாளைக்கு 8 மணிநேரம்
- கிழமைக்கு ஒரு நாள் லீவு வழங்கப்படும்
- 2 வருட முடிவின் பின் இரு வழி விமானச்சீட்டு வழங்கப்படும்
- ஏனைய நிபந்தனைகளும்,விதிமுறைகளும் ரோமானியா நாட்டு தொழிலாளர் சட்டத்திற்கு அமைவானது.

1 USD Rs.201.00

max adz

LL.No. : 2427

RODNEY FOREIGN EMPLOYMENT AGENCY றொட்னி வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்
இல. 04, ஐ.பி.சி றோட்,வெள்ளவத்தை, கொழும்பு - 06.
E - Mail : rodneyagency@hotmail.com

0112364777
0112364888
0727200005
0117955466

## காணி விற்பனைக்கு

அளவெட்டி,கீரிமலை றோட்டில் நல்ல சூழலில் அமைந்த 4 1/2 பரப்பு காணி விற்பனைக்கு. (பரப்பு:- 1,400,000/-)
தெல்லிப்பளை வைத்தியசாலையில் இருந்து 400 மீற்றர் தூரத்தில், றோட்டில் இருந்து மூன்றாவது காணி 10 பரப்பு விற்பனைக்கு. (பரப்பு:- 780,000/-)

**தொடர்புகளுக்கு:- 077 423 5458**

## 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் பாலசுந்தரம் அஜந்தன்

குலவிளக்கு அணைந்து
15 ஆண்டுகள் ஆனதுவோ
ஆறவில்லை எம் மனம்
நீங்கள் இல்லா எம் வாழ்வு
இருண்ட பாலைவனம் போல ஆயிற்றே
உங்கள் தன்னலமற்ற சேவையினை
புகழ்ந்து சூட்டிய புகழாரம்
எம் மனதிற்கு இதம் அளித்தாலும்
உயிர் உள்ளவரை நீங்கள் இல்லாமை
உயிரற்ற சடலம் போல உலவுவோம்
ஆறா நெஞ்சோடு கண்ணீர் உகுக்கும்

அன்புத் தாய் திருமதி பாலசுந்தரம்
மனைவி கருணாதேவி அஜந்தன்
மகன் அருளகன்
தங்கை அகிலா அன்னலிங்கம் குடும்பத்தினர்.

(CS 18579) 1-6

Government TVEC Approved



## தாதியர் பயிற்சிப்பாடசாலை FLORENCE NIGHHTINGAL

### தாதியர் பயிற்சி நெறி - 2022

### நுழைவுத்தகைமை

❖க.பொ.த.சாதாரண தரம் குறைந்தது 5 பாடங்கள் சித்தி பெற்றிருத்தல்.
❖விண்ணப்பதாரி 16 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல்.
❖பயிற்சிகால எல்லை 1 வருடம் (பகுதி நேரம்)
❖பயிற்சி முடிவில் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்
❖தனியார் வைத்தியசாலையில் நிரந்தர வேலைவாய்ப்புக்கள்.

### கற்கை நிலையங்கள்

❖மருதனார்மடம்
❖நெல்லியடி
❖சாவகச்சேரி

விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கங்கள்

Viber :- 077 718 6438
WhatsApp :- 077 482 4473
T.P.NO :- 077 718 6438

நிர்வாகம்
புளோரன்ஸ் நைற்றிங்கேல் தாதியர் பயிற்சிப்பாடசாலை

# வெளிநாடு பறக்கவுள்ள எம்.பிக்கள்

கொழும்பு, மார்ச் 6

அரசாங்கத்தின் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று இலங் கையை விட்டு வெளியேறத் தீர்மானித்துள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை-இராஜாங்க அமைச் சர் றொஷான் ரணசிங்க மூன்று மாதங்களுக்கு ஜப்பானுக்கு சென்றுள்ள நிலையில், நிமல் லன்சாவும் வெளிநாட்டுக்குச் சென்றுள்ளார்.

அமைச்சின் செயற்பாடுகளால் விரக்தியடைந்துள்ள நிமல் லன்சா, சில காலங்களாகவே மனஅமைதியை எதிர்பார்த்து வெளிநாடு சென்றுள்ளார் என்று கூறப்படுகின்றது.

அமைச்சுப் பதவி கிடைக்கா ததால் விரக்தியடைந்துள்ள அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று அரசியல் நடவடிக்கைகளை விட்டுவிலகி வெளிநாடு செல்லவுள்ளது என்று கூறப்படுகின்றது. (எ-இ)

# குறுந்திரைப்படங்கள் யாழில் வெளியீடு

யாழ்ப்பாணம், மார்ச் 6

சர்வதேச விருதுகள் பெற்ற விமல்ராஜின் எழில் , சுகந்தி ஆகிய குறுந்திரைப்படங்கள் இன்று பிற்பகல் 3 மணி மற்றும் 4 மணி என இரண்டு காட்சிகளாக யாழ்ப்பாணம் ராஜா திரையரங்கில் திரையிடப்படவுள்ளன. (ஒ-14)

## பாமசிஸ்ற் தேவை

யாழ். நகரப்பகுதிக்கு அண்மையில் இயங்கும் மருந்தகத்திற்கு 'பாமசிஸ்ற்' ஒருவர் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு இலக்கம்: **077 280 8962**

(CS 18729) 1-6

## வீடு வாடகைக்கு

யாழ். நகருக்கு அண்மையில் சகல வசதிகளுடன் கூடிய மேல் வீடு மட்டும் சிறிய குடும்பத்திற்கு உடன் வாடகைக்கு உண்டு. (அரச உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது. முற்றிலும் மாபிள் பதிக்கப்பட்டது)
தொடர்பு:
**076 982 9183, 077 084 5583**

(CS 18730) 1-6

## பண்ணையில் வேலைவாய்ப்புக்கள்

ஓமந்தை பன்றிக்கெய்தகுளம் பகுதியில் இயங்கிவரும் பண்ணை ஒன்றில் பணியாற்றுவதற்கு மாடு வளர்ப்பில் ஆர்வமுள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.
(35,000/= தொடக்கம் 45,000/= வரை ஊதியம் வழங்கப்படும்).

**071 309 0589**

(CS 00971) 1-6

## பணியாளர்கள் தேவை

யாழ். நகரில் அமைந்துள்ள சுப்பர் மார்கட் நிறுவனத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.
1. கணக்கு பதியுனர்
2. விற்பனையாளர்
ஆண், பெண் இருபாலாரும் தேவை.
சம்பளம் 25000/= இற்கு மேல்

தொடர்பு: **077 8730 114**

(CR 8003) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விதுர விக்கிரமநாயக்க மன்னாருக்குப் பயணம்

மன்னார், மார்ச் 6

தேசிய மரபுரிமைகள் அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க நேற்றுமுன்தினம் மன்னாருக்கு பயணம் மேற்கொண்டார். மன்னார் மாவட்டத்தின் தொன்மைவாய்ந்த இடங்களைப் பார்வையிடும் நோக்கிலேயே அவர் குறித்த பயணத்தை மேற்கொண்டார். இதன்போது மன்னார் முசலி மற்றும் மடு பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள தொன்மை வாய்ந்த இடங்களை நேரில் சென்று பார்வையிட்டதுடன் குறித்த இடங்களில் மேற்கொள்ளப்படும் புனரமைப்புப் பணிகளுக்கான மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுப்பேன் என்றும் அவர் தெரிவித்தார். (ம-14-56)






## அனுமதியின்றி நூற்றுக்கணக்கான பனைகள் அழிப்பு

கைதடி, மார்ச் 6

நாவற்குழிப் பிரதேசத்தில் நூற்றுக்கணக்கான பனை மரங்கள் அனுமதியின்றித் தறிக்கப்பட்டு வருகின்றன என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கைதடி பனை அபிவிருத்திச்சபைக்கு முன்னால் உள்ள கடலேரிப் பக்கமாகவுள்ள நாவற்குழி பிரதேசத்திலேயே இவ்வாறு பனைமரங்கள் சட்ட விரோதமாகத் தறிக்கப்படுகின்றன.

மக்கள் தமது வீட்டுத் தேவைகளுக்காக பனை மரங்களைத் தறிக்க முற்படும்போது, அதிகாரிகள் தடுத்து நிறுத்துகின்றனர்.

ஆனால் காணிகளைத் துப்புரவு செய்கின்றோம் என்ற பெயரில் செல்வாக்குகளைப் பயன்படுத்தி, அதிக பனை மரங்களை சிலர் அழிக்கின்றனர். எனவே அதிகாரிகள் உடனடியாகத் தலையிட்டு, சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-4,288)

## கலாசார மத்திய நிலையத்துக்கு வவுனியாவில் புதிய அலுவலகம்

வவுனியா, மார்ச் 6

வவுனியா ஓமந்தை அரச வீட்டுத்திட்ட பகுதியில் அமைக்கப்பட்டிருந்த கலாசார மத்திய நிலையத்துக்கு புதிய அலுவலகம் நேற்றுமுன்தினம் திறக்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்தக் கட்டம் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்படாது காணப்பட்ட நிலையில் குறித்த கட்டடத்தை திறந்து வைக்க வேண்டும் என்று வவுனியா கலைஞர்கள் தேசிய மரபுரிமைகள் அருங்கலைகள் மற்றும் மேம்பாட்டு அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயகவுக்கு கோரிக்கை விடுத்தனர்.

இதற்கமையவே நேற்றுமுன்தினம் அமைச்சர் விதுர விக்ரமநாயகவால் புதிய கட்டடம் திறக்கப்பட்டது. நிகழ்வில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே.கே.மஸ்தான், கு.திலீபன், வவுனியா மாவட்ட கலைஞர்கள், அரச அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஒ-14,110)



## கல்லுமலை ஆலயத்தின் புனரமைப்புக்கு அனுமதி



வவுனியா, மார்ச் 6

தொல்பொருள் திணைக்களத்தால் இடைநிறுத்தப்பட்டிருந்த, சமனங்குளம் கல்லுமலை பிள்ளையார் ஆலயத்தின் மீள் புனரமைப்புக்கு, தேசிய மரபுரிமைகள் அருங்கலைகள் மற்றும் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆலயத்துக்கு கடந்த வியாழக்கிழமை மாலை வருகை தந்திருந்த இராஜாங்க அமைச்சர் தலைமையிலான குழுவினர், ஆலய நிர்வாகத்தினர் மற்றும் மக்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்தனர்.

ஆலயக் கட்டுமானப் பணிக்கான மாதிரி வரைபடத்தை, தொல்பொருள் திணைக்களத்துக்கு வழங்கி, தொல்பொருள்களுக்கு சேதம் ஏற்படுத்தாத வகையில், புனர்நிர்மா ணப் பணிகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் அனுமதி வழங்கினார்.

குறித்த ஆலயம் அமைந்துள்ள மலைப்பகுதியில் தொல்பொருள் சின்னங்களான பண்டைய கற்றூண்கள், பாழடைந்த செங்கல் படிவங்கள், கட்டட இடிபாடுகள் காணப்பட்டதால், கட்டுமானப் பணிகளுக்குத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது . (ஒ-4,18)

# அமைச்சர் கலந்துகொள்ளாமையால் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை



வவுனியா, மார்ச் 6

வனவளத்திணைக்களத்தின் கீழ் உள்ள காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான கலந்துரையாடலில் வனவளத்துறை அமைச்சர் டி.பி. ஹேரத் கலந்துகொள்ளாததால் பல பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் காணப்படுகின்ற வனவளம் தொடர்பான பிரச்சினைகள் பற்றி விரிவாக ஆராய்வதற்கான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் வவுனியா மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதன்போது வன ஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரன, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்டச் செயலர்கள், மேலதிக மாவட்டச் செயலர்கள், பிரதேச செயலர்கள், திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டு பிரச்சினைகளுக்கான தீர்வுகளை முன்வைத்தனர். எனினும் குறித்த கலந்துரையாடலில் வனவளத்துறை அமைச்சர் டி.பி.ஹேரத் கலந்துகொள்ளாமையால் மாவட்டங்களிலுள்ள பல காணிப் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-14,110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச புலவர் திருமண சேவையில் பணியாற்றுவதற்கு பணியாட்கள் தேவை.

பெற்றோர் பிள்ளைகளின் விருப்பங்களை அறிந்து அதற்கு ஏற்ப செயலாற்றிக் கொண்டிருக்கும் சேவை யோடும் பல கிளைகளைக் கொண்ட ஒரே நிறுவனத் தில் பணியாற்று வதற்கு பெண் பணியாளர்கள் தேவை.

(CS18720) (3/6)

இடங்கள்
238, Arasady Road, Kantharmadam, Jaffna.
282/3 Fredrica Road, Wellawatta, Colombo - 06
தொடர்பு எண்: 077 419 5213

யாழ்ப்பாணம், நெல்லியடி வவுனியா மற்றும் கிளிநொச்சி கிளைகளில்

திருமணம் முடித்து Family வீசாவில் UK செல்லவுள்ளவர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட ஆங்கில சான்றிதழுக்கான பாடநெறி

நேரடியாகவும் மற்றும் Online (Zoom) ஊடாகவும் வகுப்புக்கள் நடைபெறுகின்றது

IELTS LIFE SKILLS A1 UK Qualification

பாடநெறி முடிவில் 100% சித்தியடைவதற்கு உத்தரவாதம்.
கடந்த 8 வருடங்களில் 2011 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

மிக விரைவில் A1 பரீட்சைகள் யாழ்ப்பாணம்
idp IELTS TEST CENTRE British College இல் நடைபெறும்.

BRITISH COLLEGE Of Education
More information 0777-695605

23, Kachcherinallur Rd, Jaffna. Tel : 021-4927113
Navalarmadam, Nelliyady. Tel : 021- 7284200
103, Mannar Rd, Vavuniya. Tel :024-4930041
A9, Road, Killinochchi. Tel: 021- 4927114

## தேவை

பிரபல உணவகமொன்றில் பணிபுரிய Delivery ஆட்கள் தேவை.
சம்பளம் - 30,000/= + Allowances
வாகன அனுமதி பத்திரம் அவசியம்.

தொடர்பு: 0777 5961 48

யாழ்ப்பாணம், நெல்லியடி, வவுனியா மற்றும் கிளிநொச்சியில்
புதிய பிரிவுகள் நேரடியாகவும், Zoom ஊடாகவும் ஆரம்பமாகின்றன.

Spoken Diploma in English

- முழுநேர / பகுதி நேர வகுப்புக்கள் நடைபெறுகின்றது.
- மாணவர்கள் சரளமாக ஆங்கிலம் பேசுவதற்கும், Listening, Reading & Writing இல் தேர்ச்சியடைவதற்கும் 100% உத்தரவாதம்.
- மாணவர்களின் ஆங்கிலறிவுக்கேற்ப பாடநெறிகள் Basic, Intermediate & Advanced எனத் தனியாக நடைபெறும்.

மேற்கத்தைய நாடுகளில்
கல்வி கற்க, தொழில் மற்றும் குடியேற

IELTS Academic / General Training

மாணவர்கள் 6.5 band Score பெறுவதற்கு 100% உத்தரவாதம்.
- ஒவ்வொரு மாதமும் Mock Exam மற்றும் One day master workshop
- சகல பரீட்சைகளும் British College இல் நடைபெறும்.

BRITISH COLLEGE Of Education
More information 0777- 695605

23, Kachcheri nallur Rd, Jaffna. Tel : 021-4927113
Navalarmadam, Nelliyady. Tel : 021-7284200
103, Mannar Rd, Vavuniya. Tel : 024 -4930041
A9 Road, Kilinochchi. Tel : 021-4927114

## பணியாளர் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல விநியோக நிறுவ னத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.
- கணக்கு லிகிதர் (ஆண் / பெண்)
- வாகன சாரதி
- விநியோக உதவியாளர்

தொடர்பு : 077 725 1270

(CR 37143) (3/6)


## 'பச்சிலை' சஞ்சிகை வளியீடு

கிளிநொச்சி, மார்ச் 6

'பச்சிலை' சஞ்சிகை வெளியீடு பச்சி லைப்பள்ளிப் பிரதேச சபை மண்டபத் தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற் றது. இதன்போது தேசிய வாசிப்பு மாத போட்டி யில் வெற்றி பெற்றவர்களுக் கான பரிசளிப்பும் இடம்பெற்றது.

பிரதேச சபைத்தவிசாளர் சுப்பிரமணி யம் சுரேன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக நாடா ளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன், மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணை யாளர், பிரதேச சபை உறுப்பினர்கள், உத் தியோகத்தர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஒ-14-113)

## மஹோற்சவம்

வட்டுக்கோட்டை சங்கரத்தை பிட்டியம் பதி உறை வீரபத்திரசுவாமி சமேத பத் திரகாளி ஆலய மஹோற்சவம் நாளை மறுதினம் செவ் வாய்க்கிழமை கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

அதனைத்தொடர்ந்து எதிர்வரும் 17 ஆம் திகதி வியாழக்கிழமை சப்பறத்தி ருவிழாவும் 18 ஆம் திகதி வெள்ளிக் கிழமை தேர்த்திருவிழாவும் 19 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் கொடியிறக்கமும் நடைபெறவுள்ளன. (ஒ-14)



## தேவை

ஆரம்ப பாடசாலையில் கல்வி கற்கும் பிள்ளைக்கு வீட்டில் வந்து பாடங்கள் சொல்லித்தரக்கூடிய, சுண்டுக்குளிக்கு அண்மையாக வசிக்கும் O/L or A/L படித்த பெண்பிள்ளைகள் தேவை.

Send SMS:-077 557 4325


## மரண அறிவித்தல்

தோற்றம் 31 - 10 - 1940



மறைவு 04 . 03 . 2022

### இராஜரட்ணம் ஜெகசோதி (சற்குணம்)

(ஓய்வு பெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் வட்டுத் தெற்கு வட்டுக்கோட்டை, சித்தன்கேணி, அராலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜரட்ணம் ஜெகசோதி அவர்கள் நேற்று முன்தினம் (04.03.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜரட்ணம் சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை பாறுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், லோகநாயகியின் அன்புக்கணவரும், பகீரதன் (ரமேஷ்), காலஞ்சென்ற பார்த்தீபன், தர்சினி, விஜயகுமார், சுபாஜினி ஆகியோரின் அன்புத்தந்தையும், ஜெயந்தினி, பிரபாகரன், தவமலர், சாந்தகுமார் ஆகியோரின் மாமனாரும், தர்மீரா, ராகுல், கோகுல், நுசாலி, விஷ்ணா, விதுஜன், ஷாறுகா ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான மீனலோஜினி, விஜயேந்திரன், அருட்செல்வம், இராஜேஸ்வரி, பரஞ்சோதி மற்றும் திருச்செல்வம் ஆகியோரின் அன்புச்சகோதரனுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.

(CR 8006) (4/6)

தகவல்:
குடும்பத்தினர்
077 639 6953

ஓம் விநாயகர் விக்னேஸ்வரனே நமஹ

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த (10.02.2022) வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர்

அமரர்

### கந்தையா பேரம்பலம் (செல்லத்தம்பி)

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (06.03.2022) ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.00 மணியளவில் அரியாலை சித்தி விநாயகர் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து உடன்வந்து பல உதவிகள் செய்த வர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த உள்நாட்டு, வெளிநாட்டு உறவினர், நண்பர்களுக்கும், பத்திரிகை, துண்டுப்பிரசுரம், பதாகைகள் மூலம் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

98, கலைமகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
077 4035 586, 077 358 6549

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் போராளிக்கு ஆயுள் தண்டனை

கொழும்பு, மார்ச் 6
விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் உறுப்பினர் தங்கவேலு நிமலனுக்கு ஆயுள் தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் தீர்ப்பளித்துள்ளது. 2 கிலோ எடையுள்ள ஆர்.டி.எக்ஸ். வெடிமருந்துகளை வைத்திருந்த குற்றத்துக்கு அவருக்கு இந்தத் தண்டனை விதிக்கப்பட்டது.

அவருக்கு எதிராக 2011ஆம் ஆண்டு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. மேலும், அவர் மீது இன்னும் பல வழக்குகள் விசாரிக்கப்பட்டு வருகின்றன. 2007ஆம் ஆண்டு மே 28ஆம் திகதி இரத்மலானையில் சிறப்பு அதிரடிப் படையினர் பயணித்த ட்ரக் மீது கிளைமோர் தாக்குதல் நடத்தியமை, 2009ஆம் ஆண்டு பெப்ரவரி 7ஆம் திகதியன்று குருநாகல் - மாலிகாபிட்டி மைதானத்தில் தேர்தல் பேரணியின் போது மேடைக்கு அருகில் வெடிகுண்டு வெடித்து அப்போதைய ஜனாதிபதியை படுகொலை செய்ய முயற்சித்தமை, 2009ஆம் ஆண்டு மார்ச் 13ஆம் திகதி அக்குரஸ்ஸ, கொடபிட்டியவில் தேவாலய விழாவில் தற்கொலை குண்டுதாரி மூலம் அமைச்சர் மற்றும் பிரதேசசபை உறுப்பினர் உட்பட 46 பேரை படுகொலை செய்யவும், அன்றைய ஜனாதிபதியை வெடிகுண்டு வீசி படுகொலை செய்ய முயற்சித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் விசாரணைகளில் உள்ளன. (ஒ.இ)



## சுதந்திரக்...

யிலான சுதந்திரக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிப்போட்டியில் தென் மாகாண அணியை 3:1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி வடக்கு மாகாண அணி வெற்றிபெற்றுள்ளது.

துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று மாலை இந்தப் போட்டி நடைபெற்றது.

இலங்கை அணியின் உதைபந்தாட்ட அணி வீரர் யோகேந்திரன் டக்சன் பியூஸ்லஸ் மாலைதீவில் உயிரிழந்த நிலையில் அவரது பூதவுடல் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டு, பின்னர் சொந்த மண்ணான மன்னாருக்கு கொண்டு செல்லப்பட்டு, அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

சாதனை வீரர் பியூஸ்லஸுக்கு மரியாதை செலுத்தும் வகையில் இந்தப் போட்டி யாழ்ப்பாணத்துக்கு மாற்றப்பட்டு நடைபெற்றது. அதனால் பியூஸ்லஸுன் இறுதி அஞ்சலி நிகழ்வும் நாளை திங்கள் வரை ஒத்திவைக்கப்பட்டது. டக்சன் பியூஸ்லஸுக்கு அர்ப்பணமாக வடக்கு மாகாண அணி தேசிய மட்டப் போட்டியில் சம்பியனாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ-ஒ-20)

## எரிபொருள்...

எஞ்சிய பவுஸர்கள் இன்று மதியத்துக்கு முன்னர் யாழ்ப்பாணத்தை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை - பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் மேலும் தெரிவிக்கையில், எரிபொருள் கப்பல்கள் நாட்டுக்கு வந்துள்ளன. எரிபொருளை இறக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. எனவே எரிபொருள் தட்டுப்பாடு என்று நுகர்வோர் பீதியடைய வேண்டாம். வரிசையில் நிற்பதைத் தவிர்த்து எரிபொருளைப் பெற்றுக்கொள்ளமுடியும். நுகர்வோர் சாதாரண வரம்பை விட அதிகமாக எரிபொருள் நிரப்புவதும், 'கான்'கள் மற்றும் பீப்பாய்களில் எரிபொருளை கொள்வனவு செய்து இருப்பு வைப்பதும் தட்டுப்பாட்டுக்கு காரணமாகின்றது. மேலும் நாளையும், நாளை மறுதினமும் மேலும் இரு கப்பல்களிலிருந்து தொடர்ச்சியாக எரிபொருள் இறக்கப்படவுள்ளது-என்றார்.

(அ-ஒ-5-17)

## அபிவிருத்திக்...

யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திக் குழு மற்றும் பிரதேச அபிவிருத்திக் குழுவில் பிரதமர் அலுவலகப் பிரதிநிதியாகவே கீதநாத் காசிலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார் என்று பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர் இ.அங்கஜன் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பில், மாவட்ட அபிவிருத்திக் குழுவில் புதிதாக எவரும் நியமிக்கப்படவில்லை. 'கீதநாத், கூட்டங்களில் மாத்திரம் பிரதமர் அலுவலகப் பிரதிநிதியாகக் கலந்து கொள்வார். அவர் கூட்டங்களில் கலந்து கொண்டு ரீ, வடை சாப்பிட்டு விட்டு போகலாம்' என்று தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் இதற்குப் பதிலடியாக பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில், யாழ். மாவட்ட அபிவிருத்தி குழுவின் பிரதமர் அலுவலக பிரதிநிதியாக பிரதமரின் ஒருங்கிணைப்புச் செயலர் கீதநாத் காசிலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார். அதற்கமைய யாழ். மாவட்ட அபிவிருத்தி குழு மற்றும் பிரதேச அபிவிருத்திக் குழுவில் பிரதமர் அலுவலகப் பிரதிநிதியாக எதிர்வரும் காலங்களில் கீதநாத் காசிலிங்கம் செயற்படுவார்.

மார்ச் மாதம் 2ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் குறித்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது - என்றுள்ளது.

(அ-ஒ-5)

## கூட்டமைப்பு...

தனமாக தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் பெயரைக் குறிப்பிட்டு, பிரதேசசபை உறுப்பினர் ஜிப்றிக்கோவின் பிரான்பற்றிலுள்ள வீட்டின் மீது இரண்டு தினங்களுக்கு முன்னர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அவரது வீட்டாரையும் சந்தேகநபர் தாக்க முற்பட்டிருந்தார். இந்தச் சம்பவம் தொடர்பில் இளவாலை பொலிஸில், பிரதேச ச[illegible] பாடு செய்திருந்தார்.

இந்த நிலையில் தாக்குதல் நடத்தியதாக பிரதேசசபை உறுப்பினரால் குற்றஞ் சுமத்தப்பட்ட நபர், தன் மீது பிரதேச சபை உறுப்பினரின் குடும்பத்தினர் கழுத்து நெரித்து தாக்குதல் நடத்தியதாகத் தெரிவித்து தெல்லிப்பழை மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்ந்துள்ளார். இளவாலை பொலிஸாருக்கும் முறையிட்டுள்ளார்.

இதனையடுத்து 'துரிதமாகச்' செயற்பட்ட இளவாலை பொலிஸார், பிரதேச சபை உறுப்பினரையும் அவரது குடும்பத்தினரையும் கூண்டோடு கைது செய்து இளவாலை பொலிஸ் நிலையத்துக்கு நேற்று மாலை 6 மணியளவில் கொண்டு சென்றனர்.

பிரதேச சபை உறுப்பினர் ஜிப்றிக்கோ மற்றும் அவரது சகோதரியான பல்கலைக்கழக மாணவி மீது பொலிஸார் தாக்குதல் நடத்தியதாகக் குற்றஞ் சுமத்தப்படுகின்றது. சகோதரி மீது பெண் பொலிஸார் மூர்க்கமாகத் தாக்கியதில் அவர் மயக்கமடைந்துள்ளார். சுமார் அரை மணி நேரத்தின் பின்னர் அவரை பொலிஸ் வாகனத்தில் கொண்டு செல்ல முயன்றபோது, பொலிஸ் நிலையத்தில் திரண்டிருந்தவர்கள் 1990 என்ற அவசர இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி அம்புலன்ஸை வரவைத்து அதில் ஏற்றிச் செல்ல முற்பட்டனர்.

இதேவேளை - பிரதேசசபை உறுப்பினரின் மேலாடைகள் கிழிக்கப்பட்டு கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார். பொலிஸார் தன் மீது தாக்குதல் நடத்தும்போது சிரித்துச் சிரித்து அலைபேசியில் வீடியோ எடுத்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

பொலிஸ் நிலையத்துக்கு அம்புலன்ஸ் வந்த பின்னர், மருத்துவப் பரிசோதனைக்காக தெல்லிப்பழை மருத்துவமனைக்கு பிரதேசசபை உறுப்பினர், அவரது குடும்பத்தினர் அனைவரும் கடுமையான பொலிஸ் பாதுகாப்புடன் கொண்டு செல்லப்பட்டனர்.

மருத்துவமனையில் பிரதேச சபை உறுப்பினர் மற்றும் மயக்கமடைந்த சகோதரியான பல்கலைக்கழக மாணவி ஆகிய இருவரும் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வரும் நிலையில் நேற்று இரவு 9.30 மணியளவில், மற்றைய சகோதரி, தாய், மாமா மூவரையும் மல்லாகம் நீதிமன்றுக்கு பொலிஸார் கொண்டு சென்றனர்.

அவர்கள் மூவரும் தலா ஒரு லட்சம் ரூபா ஆள் பிணையில் நேற்றி ரவே விடுவிக்கப்பட்டனர். மருத்துவமனை யில் சிகிச்சை பெறும் ஏனைய இருவரை யும் 24 மணி நேரத்துக்குள் நீதிமன்றில் முற்படுத்துமாறும் நீதிவான் பணித்துள்ளார்.

இதேவேளை - இந்தச் சம்பவம் தொடர்பில் அறிந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சோ.சேனாதிராசா, ஈ.சரவணபவன் ஆகியோர் தெல்லிப்பழை மருத்துவமனைக்குச் சென்று பார்வையிட்டனர். இவர்களுடன் பிரதேச சபைத் தவிசாளர், பிரதேசசபை உறுப்பினர்கள் எனப் பலரும் மருத்துவமனையில் கூடினர்.

தாக்குதல் சம்பவம் தொடர்பிலேயே பிரதேசசபை உறுப்பினரையும் அவரது குடும்பத்தினரையும் கைது செய்ததா இளவாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி குறிப்பிட்டார். நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் அரசியல் அழுத்தம் காரணமாகவே இவ்வாறு செயற்பட்டதாகக் குற்றஞ் சுமத்தப்படுவது தொடர்பில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் கேட்டபோது,' நான் கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்தவன். எனக்கு இங்கு அரசியல் ஆதரவு தேவையில்லை' என்று குறிப்பிட்டார். அத்துடன் பிரதேச சபை உறுப்பினர் மற்றும் சகோதரி தாக்கப்பட்டமை தொடர்பில் கேட்டபோது 'அது பொய்' என்று பதிலளித்தார்.

இதேவேளை - வீட்டார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சமயம் அவரது வீட்டின் மீது மீண்டும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (அ-ஒ-26-125)

## அதிகளவு...

துள்ளான் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கட்டுவன் மேற்கைச் சேர்ந்த சிவகேஸ்வரன் ஜென்சன் (வயது - 19) என்ற கட்டடத் தொழிலாளியே நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்துள்ளார். அவரது சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மயிலங்காடு பகுதியைச் சேர்ந்த போதைப்பொருள் வியாபாரியிடமிருந்து போதை மாத்திரைகளை இருவர் வாங்கியுள்ளனர். தண்ணீரில் நனைந்த போதை மாத்திரைகள் பல ஒன்றோடு ஒன்று ஒட்டியவாறு காணப்பட்டுள்ளன. அவற்றை ஒரேயடியாக உயிரிழந்த இளைஞர் உட்கொண்டார் என்று விசாரணைகளின்போது தெரிவிக்கப்பட்டது.

இரண்டு போதை மாத்திரைகளை உட்கொண்ட மற்றையவரிடமும் வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம்பிறேம்குமார் இறப்பு விசாரணைகளை முன்னெடுத்தார். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-26)

## மணற்காடு...

அமைச்சு சுவீகரிக்கும் திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் வனஜீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சர் சீ.பீ.ரத்நாயக்க தலைமையில் நேற்றுக் காலை கலந்துரையாடல் இடம்பெற்றது.

மணற்காடு சவுக்கம் தோப்பு பகுதியை வர்த்தமானியில் பிரசுரித்து வனவளத் திணைக்களத்தின் கீழ் கொண்டு வருவதற்காக அதனைப் பார்வையிடுவதற்கு மணற்காடு பகுதிக்கு நேற்று பிற்பகல் அமைச்சர் சீ.பீ.ரத்நாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் மற்றும் அதிகாரிகள் சென்றனர்.

அவர்களை வழிமறித்த மக்கள், வனவளத் திணைக்களம் இதனை சுவீகரிப்பதை கைவிடுமாறு கோரினர். அவ்வாறு கொண்டுவருவதால் தமது பல ஏக்கர் காணிகள் மற்றும் எதிர்காலச் சந்ததிகளின் குடியேற்றம் என்பன பாதிக்கப்படும் என வலியுறுத்தினர். இதனை வழமை போன்று பிரதேச செயலகத்தின் கட்டுப்பாட்டில் வைத்து சமூகக் காடாகவே இருக்கும் வகையில் நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்தனர். அதனை கிராமக் காடு எனும் புதிய செயற்றிட்டத்தை உருவாக்கி வர்த்தமானி மூலம் அறிவித்து, நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் தெரிவித்த போது அதனையும் மக்கள் ஏற்க மறுத்துவிட்டனர்.

தொடர்ந்து மக்களுடன் அமைச்சர் பேச்சில் ஈடுபட்டதன் அடிப்படையில் வர்த்தமானி மூலம் சுவீகரிக்காது வனவள அமைச்சு பிரதேச செயலகத்துடன் இணைந்து மணற்காடு மக்களும் மேலும் மரங்களை நட்டு பராமரிக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். இதனையடுத்து மக்கள் கலைந்து சென்றனர். (அ-ஒ-இ)

## ஆளுங்...

கம்மன்பில மற்றும் அரசுடன் இணைந்த 10 கட்சிகளின் 16 உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக இருக்க தீர்மானித்துள்ளதாக அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதேவேளை, எதிர்வரும் தேர்தல்களில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து போட்டியிடுவதில்லையென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்கள் கூட்டத்தில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

விமல் வீரவன்ஸவின் கட்சியைச் சேர்ந்த 6 பேர், உதய கம்மன்பிலவின் கட்சி உறுப்பினர்கள் இருவர், வாசுதேவ நாணயக்காரவின் கட்சியைச் சேர்ந்த இரண்டு பேர், மற்றும் அத்துரலிய ரத்ன தேரர், டிரன் அலஸ், கெவிந்து குமாரதுங்க, ஏ.எல்.எம்.அதாவுல்லா உட்பட 16 நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினர்களாகச் செயற்படவுள்ளனர்.

(ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு
யாழ். கச்சேரியில் வீடு வாடகைக்கு கொடுக்கப்படும். 1 BED Room, HALL, KITCHEN, TOILET
(CS 18685) (3/6) **077 142 2846**

## உடனடி வேலைவாய்ப்பு
யாழ்நகரில் இயங்கும் Guest House ஒன்றிற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.
- Cleaning Staffs (இருபாலாரும்)
- Room Boys (பகுதிநேரம் / முழுநேரம்) (வயதெல்லை 18 -25)

உணவு, தங்குமிடம் இலவசம் (CS 43289) (2/6)
**077 700 3617**

## காணி விற்பனைக்கு
திருகோணமலை நிலாவெளி
10ம் கட்டை Beach Side
40 பேர்ச் காணி
விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு 077 386 7642
(CS 43275) (3/6) 074 264 4885

## வேலையாள்கள் தேவை
புதிதாக ஆரம்பிக்கப்படும் மொத்த சில்லறை விற்பனை நிலையத்திற்கு கணக்காளர் மற்றும் உதவியாளர் தேவை. (CS43326) (3/6)
தொடர்புக்கு: **077 322 2834**

## சிகை அலங்கார நிலையம் வாடகைக்கு உண்டு
பொன்னாலை வீதி மானிப்பாயில் அமைந்துள்ள அனைத்து வசதிகளுடன் கூடிய சிகை அலங்கார நிலையம் (Slon) வாடகைக்கு விடப்படும். **077 909 4771**
(CS 18699) (3/6)

## வாடகைக்கு
திருநெல்வேலி சந்தி பலாலி வீதி யாழ்ப்பாணத்தில் 50 அடி நீளமும் 14 அடி அகலமும் கொண்ட 3 மாடி கடை வாடகைக்கு உண்டு. வாடகை பேசி தீர்மானிக்கப்படும். தரகர் தேவை இல்லை. அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் விரும்பத்தக்கது. (CS 18713) (3/6)
தொடர்புகளுக்கு: **074 278 0099**

## புதிய பிரிவுகள் ஆரம்பம் 12/03/2022

**வங்கியியல் கற்கை நெறிகள்**
**Banking Courses**
**IABF & DABF**
(Tamil & English Medium)
Qualification:- G.C.E. O/L 6 Passes with 5 credits including Maths.

**கணக்காளர் கற்கை நெறிகள்**
**Chartered Accounting Courses**
Business level - I ,II
(Tamil & English Medium)
Qualification:- G.C.E. A/L 3 Passes.

**தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு**
**aat [ Sri Lanka] [AA1, AA2, AA3]**
Qualification:- G.C.E. O/L 6 Passes
Medium - Tamil & English

**G.C.E. A/L பெறுபேற்றினை எதிர் பார்திருப்பவர்களும் கற்கலாம்.**

**Certificate Course in English**
19 Batches have successfully Completed the course.

**கலை, வர்த்தகப்பிரிவு**
1 G.C.E. A/L 2022,2023

Further Details: **Jaffna College**
Undergraduste Dept.
464, Hospital Road,
Jaffna.
021 222 3382
021 222 9149
077 440 5917
(IN 16947) (3/6)

## வேலைக்கு ஆள்கள் தேவை
நெல்லியடியில் இயங்கும் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு பெண் வேலையாள்கள் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். நெல்லியடியில் இருந்து 6km ற்குள் வசிப்பவர்களாக இருத்தல் வேண்டும். (CS 18222) (3/6)
தொடர்புகளுக்கு: **076 308 9417**

## கடை வாடகைக்கு உண்டு
சந்தைக்கு அருகாமையில் 2 Room கொண்ட கடை வாடகைக்கு உண்டு (CS 18722) (3/6) **076 782 2814**

## வேலையாட்கள் தேவை
யாழ். நகரிற்கு அருகாமையில் உள்ள இலத்திரனியல் கடை ஒன்றிற்கு வேலை ஆட்கள் தேவை.
வெளி மாவட்டத்தவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு இலக்கம்: **077 143 7475, 076 8620 528**

## உடனடி வேலை வாய்ப்பு
தையல் அனுபவமுள்ள பெண்கள். சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் (ஆண்கள்). அலுவலக உதவியாளர். வங்கி உத்தியோகத்தர். முகாமைத்துவ உதவியாளர் (CS 18713) (3/6)
தொடர்புகளுக்கு: **076 684 9572**

## காணி விற்பனைக்கு
யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகில் 1 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
(CS 18723) (3/6) **076 962 8423**

## உதவியாளர் தேவை
யாழ் நகரில் உள்ள பொதிகள் சேவை நிறுவனத்திற்கு அலுவலக உதவியாளர் தேவை. (A/L இல் வர்த்தகம் அல்லது வர்த்தக பாடம் தொடர்பான கற்கை நெறி இருத்தல் மேலதிக தகைமை)
**074 200 1212**

## வீடு விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் நல்லூர் மருதடி வீதியில் 2 பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை. (CS 18740) 1-6
தொடர்பு: **076 753 9654**

## வேலையாள்கள் தேவை
யாழ் நகரில் இயங்கும் பிரபல தனியார் விருந்தினர் விடுதிக்கு வரவேற்பாளர் (Receptionist). சமையலாளர் (Cook). சமையல் உதவியாளர் (Kitchen Helper). விடுதிப் பராமரிப்பு (House keeping) ஆகிய வேலைகளுக்கு ஆள்கள் தேவை.
**077 668 1840** (CR 37173) (3/6)

## விற்பனைக்கு
- காரைநகரில் 3 பரப்புக் காணியுடன் சகல வசதிகளும் கொண்ட புதிய வீடு விற்பனைக்கு.
- நவக்கிரி புத்தூர் வீதியில் (நிலாவரைக்கு அண்மையில்) 46 பரப்பு தோட்டக்காணி விற்பனைக்கு.
- அளவெட்டி மாசியப்பிட்டி சந்திக்கு அண்மையில் 2 பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்கு.
- நாவலியில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு.

**Contact Number**
**Divakar Thavavinayagan +94 77 221 6683** (CS 43325) (3/6)

## வேலை வாய்ப்பு
அரசினால் அங்கீகரிக்கப்பட்ட எமது நிறுவனத்தின் கிளை நிறுவனங்களுக்கு வரையறுக்கப்பட்ட நபர்களை வேலைக்கு அமர்த்தவுள்ளோம். **Clerk,Supervisor, Store Keeper, Assistant Manager, Electronics repairmen** போன்ற பதவிகள் உள்ளன.
18 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்ட மற்றும் தரம் **10,O/L,A/L** வரை படித்த இளைஞர்கள் யுவதிகள் தொடர்பு கொள்ளவும். தகுதி காண காலத்தின் போது 15200-42500 வரை வருமானம் பெறலாம். வெளி மாவட்டத்தில் இருந்து வருபவர்களுக்கு இரவு உணவு. தங்குமிட வசதி ஒழுங்கு செய்து தரப்படும். தகுதி கால முடிவின் பின்னர் கம்பனியில் நிரந்தர வேலை வாய்ப்பினையும். **EPF,ETF** போன்ற வாய்ப்பினையும் பெற்றுக்கொள்ள முடியும். ஆர்வம் உள்ளவர்கள் பெயர். முகவரி. தே.அ.அ.இல என்பவற்றை **0773847988** என்ற இலக்கத்திற்கு **Whatsapp** செய்யவும்.
தொடர்புகளுக்கு:- **077 985 8580, 076 636 0924**

## காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் நாவற்குழியில் 33 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் (நிலப்பரப்பு) A9 வீதியில் இருந்து 150M தூரம். லங்காஅசோக் லேடன் வாகனவிற்பனை நிலையத்திற்கு அருகாமையில். நாவற்குழி சந்தியிலிருந்து 500 M தூரம்.யாழ். பஸ் நிலையத்திலிருந்து 8 KM தூரம்
**18 அடிப்பாதையுடன் இயற்கை சூழல், நன்னீர்ச்சூழல்**
தொடர்பு : குரு - **077 6234 204, 077 2880 152, 076 6583 621,077 9116 983**

## வேலையாள்கள் தேவை
நல்லூர் எல்லையில் இயங்கிவரும் **Studio** க்கு வேலை ஆட்கள் தேவை.
போட்டோசொப் அல்லது வீடியோ எடிட்டிங் தெரிந்த பெண்கள் விரும்பத்தக்கது. (CS 43287) (3/6)
**076 583 3275**

## வீடு வாடகைக்கு தேவை
அரச உத்தியோகம் பார்க்கும் குடும்பம் ஒன்றுக்கு கந்தர்மடம். தட்டாதெரு. கலட்டி. பிறவுண் வீதியை அண்மித்த பகுதியில் தேவை. (CS 18712) (3/6) **074 070 2678**

## வீடு வாடகைக்குத் தேவை
யாழ். நகருக்கும் தாவடிக்கும் இடையில் K.K.S றோட்டுக்கு அண்மையாக குடியிருப்பதற்கு உகந்த வீடு வாடகைக்கு தேவை. (CS 18711) (3/6)
தொடர்பு : **074 217 0383**

## காணி/ வீட்டுடன் காணி தேவை
2 பரப்பிற்குள் அமைந்த காணி/ வீட்டுடன் காணி மாலு சந்தி. வதிரி சந்தி. இரும்பு மதவடி உட்பட்ட பகுதிக்குள் உடனடியாக தேவை.
**077 586 3927** (CS 18732) (4/6)

## வீட்டு வேலைக்கு ஆள் தேவை
திருநெல்வேலியில் உள்ள நான்கு பேர் கொண்ட குடும்பத்திற்கு வீட்டுவேலைக்கு ஆள் தேவை.
சம்பளம் - **25,000/=**
தொடர்பு : **076 306 3306**

## வேலைக்கு ஆள்கள் தேவை
**Soundar Outsource (Pvt) Ltd,**
**DSR (Distributor Sale Ref)**
வேலைக்கு ஆள் தேவை.
யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாக கொண்டவர்கள் விரும்பத்தக்கது. சொந்த மோட்டார் சைக்கிள் இருத்தல் வேண்டும். சம்பளம் பேசித் தீர்மானிக்கபடும். (cs 18689) (2/6)
தொடர்புகொள்ளவும்:
077 665 2694, 076 277 0015
077 003 8742

## நீர்க்கசிவு பிரச்சினைகளுக்கு நிரந்த தீர்வு
## Water Proofing
மழை காலங்களில் உங்கள் கட்டடங்கள். வீடுகள். கோவில்கள் போன்றவற்றில் ஏற்படும் நீர்க்கசிவு. ஊறல். சுவர்களில் ஏற்படும் வெடிப்புகள் போன்ற பிரச்சினைகளை உத்தரவாதத்துடன் சீர்செய்து தருகின்றோம்.


உலகத்தரம் மிக்க இரசாயனப்பொருட்களால் 1 சதுர அடிக்கு 120 /=

10 வருட முன் அனுபவமுள்ள ஊழியர்களை கொண்டு உத்தரவாத்துடன் சீர் செய்து தருகின்றோம்.

இரசாயனப் பொருள்களை விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்

**North Star Engineering**
**130, Jummah Mosque Lane, Jaffna.**
**077 300 5583** (cs 43369 A) (2.6)

## ALLIANCE FRANCAISE DE JAFFNA
## af பிரெஞ்சு மொழி
- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf )
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).



**021 222 8093** 17, Kandy Road, Jaffna

## விஸ்டம் தொழில் நுட்பக் கல்லூரி
இல.63, சிவன் கடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 077 248 7774

A/L 2021 எழுத்துப் பரீட்சை நிறைவு செய்த மாணவர்களுக்கான
மாபெரும் செயன்முறை பயிற்சி வகுப்புக்கள்
பொறியியல் தொழினுட்பவியல் | உயிர் முறைமைகள் தொழினுட்பவியல்
- ✓ பரீட்சையில் எதிர்பார்க்கப்படும் செயன்முறைவினாக்களைக் கொண்ட பரீட்சைகள் நடாத்தப்பட்டு மதிப்பீட்டுப் புள்ளிகள் வழங்கப்படும்.
- ✓ ஒவ்வொரு மாணவர்களுக்கும் தனித்தனியாக அனைத்து செயன்முறைகளும் பயிற்றுவிக்கப்படும்.

அனைத்து மாணவர்களும் பங்குபற்றலாம்.
**இன்றிலிருந்து ஆரம்பம்**
077 248 7774 / 021 221 7860 / 076 552 9093
"தரம், தனித்துவம், உயர்ந்த பெறுபேறு" இதுவே எமது இலக்கு

## பாராட்டி வாழ்த்துகின்றோம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற
35 ஆவது பட்டமளிப்பு விழாவில்
**BET (Hons) in Electro Technology First Class** பட்டம் பெற்ற
செல்வன் **ஞானசோதி அல்பிரட் கனிஸ்டஸ்**
அவர்களை உறவுகள் சார்பாக பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*Congratulations*

வாழ்த்துவோர்:
மாமாமார், அத்தைமார், சித்தப்பா, சித்திமார், அண்ணன்மார், தம்பிமார், தங்கைமார், மச்சான்மார் மற்றும் நண்பர்கள்.

**Dear Brother, we are proud of you Congratulations on your Success and Achievement.**



(cs 43302) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.03.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Registered as a Newspaper

பக்கங்கள்: 16


# சஞ்சீவி

sanjeevyuthayan@gmail.com

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2053 மாசி 22 ஞாயிற்றுக்கிழமை (06.03.2022) சிகரம் : 89

பெற்றோல் வாங்க லைனில உருண்டு
பொருளாதாரம் போச்சுதே புரண்டு
இலங்கையை விட்டோடுதோ கரண்டு?
எல்லாத்துக்கும் காரணம் டொலராம் ப்ரெண்டு!

கொரோனாச் சித்தர்



# ரஷ்ய மக்களும் ஈழத்தமிழர்களும்



# 'மூடி மறைக்கப்படும்' இன ஒடுக்கல்



○ நிக்ஸன்

அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் அதாவது அமெரிக்கச் சார்பு நாடுகள் கூறுகின்ற ஜனநாயகம் என்ற கோட்பாட்டுக்குள் ரஷ்யா இல்லை என்ற கருத்தியலின்படியே, உக்ரைன் மீது ரஷ்யா நடத்தும் போரைச் சர்வதேச ஊடகங்கள் வர்ணிக்கின்றன. ஆனால் ரஷ்யாவில் தற்போது கொமியூனிசச் சாயல் மாத்திரமே உண்டு.

ரஷ்யாவும் ஒரு வகையான முதலாளித்துவ முறை (Capitalism) கொண்ட பேரரசுதான். ஜனநாயகக் கட்டமைப்பு இருப்பது போன்றதொரு தோற்றப்பாடும் ரஷ்யாவில் இருக்கவே செய்கின்றது. ஆனால் ரஷ்ய சீன உறவு கொமியூனிச அடிப்படையிலானதல்ல. அமெரிக்கச் சார்பு நாடுகளை எதிர்க்கும் மையம் கொண்ட இராணுவ அரசியல் அது. பொருளாதாரப் பிணைப்புகளும் இந்த இரு நாடுகளிடம் உண்டு.

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு என்று சொல்லப்படுகின்ற இந்தியாவுடன் ,ரஷ்யா வைத்துள்ள உறவு பாரம்பரியமானது. அரசியல், பொருளாதார, மற்றும் அவ்வப்போது இராணுவ நோக்கிலும் அந்த உறவு ஒத்திசைவாகக்கூடியது. ஆனால் இந்தியா , அமெரிக்காவோடு வைத்துள்ள உறவைப் போன்றதல்ல ரஷ்யாவுடனான உறவு. அது இந்தோ=பசுபிக் பிராந்திய நலன் அடிப்படையிலானது.

இந்தவொரு நிலையில் உக்ரைன் மீது ரஷ்யா ஆரம்பித்துள்ள போரை ஈழத்தமிழர்களின் சமூகவலைத்தளங்கள் ஈழப்போர்க் காலத்துடன் ஒப்பிட்டு வர்ணிக்கின்றன. பலர் ரஷ்யாவுக்கு எதிராகவும் வேறு சிலர் உக்ரைனுக்கு ஆதரவாகவும் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். ஆனாலும் பெருமளவு ஈழத்தமிழர்கள் இரண்டு நாடுகளையுமே ஆதரிக்கவில்லை. இருந்தாலும் அமெரிக்கச் சார்புத் தமிழர்கள் சிலர் உக்ரைனை வசைபாடுகின்றனர். ஈழப்போர் தொடர்பாக ரஷ்யா எந்தவொரு கருத்தையுமே தெரிவிக்காமல் அவ்வப்போது இலங்கைக்கு மாத்திரம் ஆதரவு கொடுத்தது என்ற குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் ஒரு தொகுதி தமிழர்கள், ரஷ்யாவையும் ஆதரிக்கவில்லை. ஈழப் போராளிகள் சிலருக்கு உக்ரைன் பயிற்சியளித்தது என்ற கதைகளும் உண்டு. ஆனாலும் போர்க்காலத்தில் இந்த இரு நாடுகளும் இலங்கைக்கு உதவியளித்திருக்கின்றன என்பதையே தமிழர்களின் சமூகவலைத்தளப் பதிவுகள் கூடுதலாகக் காண்பிக்கின்றன.

## உக்ரைனின் இனவழிப்பு

உக்ரைனை ஆதரிக்கும் அமெரிக்கச் சார்பு நாடுகள் தமது ஜனநாயகக் கட்டமைப்பு வட்டத்துக்குள் நின்றுகொண்டு, ஈழத் தமிழர்களின் அரசியல் விடுதலைப் போராட்டத்தை இல்லாதொழிக்க இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கியிருந்தன.

அதேபோன்று, உக்ரைன் டான்பாஸ் பகுதியில் வாழும் சுமார் 60 இலட்சம் ரஷ்ய மக்கள் மீது உக்ரைன் அரசு இன அழிப்பை மேற்கொள்ள எடுத்த நடவடிக்கைக்கு அமெரிக்கச் சார்பு நாடுகள் உடந்தையாகவே இருக்கின்றன.

உக்ரைனில் உள்ள, டன்ஸ்பாஸ் என்ற பிரதேசத்தில் இப்போதும் உள்நாட்டுப் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையிலேயே ரஷ்யா, உக்ரைன் மீதான தாக்குதலை ஆரம்பித்திருக்கிறது. சுமார் அறுபது இலட்சம் ரஷ்ய இன மக்கள் வாழும் உக்ரைன்- டன்ஸ்பாஸ் பகுதியில் ரஷ்ய இன போராளிக் குழுக்களுக்கும், உக்ரைன் இராணுவத்துக்கும் இடையே கடந்த ஏழு ஆண்டுகளாக நடைபெற்று வரும் உள்நாட்டுப் போரில் இதுவரை 14 ஆயிரம் ரஷ்யர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

### ஏன் போர் மூண்டது?

உக்ரைனில் ரஷ்யாவுக்கு ஆதரவாகச் செயற்பட்ட ஜனாதிபதி விக்டர் யனுகொவிச் (Viktor Yanukovych) 2014 ஆம் ஆண்டு பதவியிலிருந்து திடீரென நீக்கப்பட்டார். அதற்குப் பதிலடியாகவே உக்ரைன் நாட்டின் கிழக்குப் பகுதியில் உள்ள கிரேமியாவை ரஷ்யா கைப்பற்றியது. அன்றில் இருந்தே உக்ரைனில் உள்நாட்டுப் போரும் ஆரம்பித்தது. உக்ரைனில் ரஷ்ய மக்கள் வாழும் டன்ஸ்பாஸ் பகுதியையும், ரஷ்யா தனிநாடென்று பிரகடனப்படுத்தியுமுள்ளது.

ஆகவே உக்ரைனில் வாழும் ரஷ்ய மக்களின் சுயநிர்ணய உரிமை என்ற அடிப்படையிலேயே ரஷ்யா, உக்ரைன் எல்லைகளில் படைகளைக் குவித்தது. இதனால் ரஷ்ய மக்கள் வசிக்கும் டன்ஸ்பாஸ் பகுதிகள் மீது உக்ரைன் இராணுவ ஆதரவுக் குழுக்கள் கடுமையான தாக்குதல்களை நடத்தின.

இந்நிலையில் 2015 ஆம் ஆண்டு உக்ரைன் அரசுடன், ரஷ்யா பேச்சுவார்த்தை நடத்தி ஜேர்மனி, பிரான்ஸ் முன்னிலையில் ஒப்பந்தம் செய்தது. இந்த ஒப்பந்தத்தின் மூலம் ரஷ்ய இனமக்கள் மீதான தாக்குதல் நிறுத்தப்பட்டு, டன்ஸ்பாஸ் பகுதியில் வாழும் ரஷ்ய மக்களின் தன்னாட்சிக் கோரிக்கையை உக்ரைன் ஏற்க வேண்டுமெனவும் கூறப்பட்டிருந்தது. ரஷ்ய இனமக்கள் பாதுகாப்புடன் வாழும் வகையில் உக்ரைன்-ரஷ்ய எல்லைப்புறக் கொள்கையை உருவாக்க வேண்டுமெனவும் ரஷ்யா முன்வைத்த கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. டன்பாஸ், லுகான்ஸ்க் பகுதிகளுக்கான பாதுகாப்பையும் ரஷ்யா-உக்ரைன் நாடுகளுக்கிடையேயான பாரம்பரிய உறவைப் பாதுகாப்பதையும் உறுதிப்படுத்த வேண்டுமென்பதும் ஒப்பந்தத்தின் பிரதான உள்ளடக்கங்களாக அமைந்தன. ஒப்பந்தத்தில் கூறப்பட்ட விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதை ஐரோப்பிய ஒன்றிய நாடுகளால் உருவாக்கப்பட்ட பாதுகாப்பு ஒத்துழைப்புச் சங்கம் (Organization for Security and Cooperation OSCE) எனும் குழு மேற்பார்வை செய்ய வேண்டுமெனவும் பரிந்துரைக்கப்பட்டது.



### காற்றில் பறந்த ஒப்பந்தம்

ஆனால் கடந்த ஏழு ஆண்டுகளாக இந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதை அமெரிக்கா தலைமையிலான நேட்டோ நாடுகள் தடுத்தன. அந்த ஒப்பந்தம் உதாசீனம் செய்யப்பட்டது. உக்ரைன் இராணுவமும், அங்குள்ள உக்ரைன் தேசிய இனவாதக் குழுக்களும் ரஷ்ய இன மக்களுக்கு எதிராகச் செயற்பட்டன.

அதன் பின்னணியில் அமெரிக்கா-பிரித்தானியா போன்ற நாடுகளும் செயற்பட்டதாக ரஷ்யா குற்றம் சுமத்தியது.

இதனால் ரஷ்ய மக்கள் வாழும் டான்பாஸ், லுகான்ஸ்க் பகுதிகளில் உக்ரைன் அரச படைகள் குவிக்கப்பட்டு அந்த மக்களின் கருத்துச் சுதந்திரம் உள்ளிட்ட அனைத்து உரிமைகளும் பறிக்கப்பட்டன.ரஷ்ய மக்கள் ஒடுக்கப்பட்டனர். இன ஒடுக்குமுறை ஒன்று அங்கே இடம்பெறுகின்றது. ஆனால் அதனை அமெரிக்கச் சார்பு சர்வதேச ஊடகங்கள் மூடி மறைத்தன.

இவ்வாறானதொரு நிலையில், அறுபது இலட்சம் ரஷ்ய மக்கள் வாழும் டான்பாஸ், லுகான்ஸ்க் பகுதியைக் காக்கவேண்டுமென ரஷ்யா தொடர்ந்து வலியுறுத்தியது. ஆனால் உக்ரைன் அரசு ரஷ்யாவின் கோரிக்கையை செவிமடுக்கவேயில்லை. அமெரிக்கச் சார்பு நாடுகளின் துணிவோடு, ரஷ்யாவைப் புறந்தள்ளியது. ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் ரஷ்ய இன மக்கள் பற்றி அலட்டிக் கொள்ளவில்லை. இத்தனைக்கும் சோவியத் யூனியன் நாடாக இருந்தபோது ,ரஷ்யாவின் பாரம்பரிய பூமியாகக் கருதப்பட்டுச் சிறப்புச் சலுகைகளோடு உக்ரைன் பிரதேசம் இருந்தது. ஆனால் 1991 ஆம் ஆண்டு சோவியத் யூனியன் உடைந்து 13 தனி நாடுகளாக மாறியபோது உக்ரைனும் தனிநாடாகத் தன்னைப் பிரகடனப்படுத்தியது.

இதனால் உக்ரைனில் இருந்த ரஷ்யாவின் இராணுவ வளங்களும் உக்ரைனுடன் சென்றுவிட்டன. இதன் பின்புலத்தில் கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக உக்ரைன் அமெரிக்கச்சார்பு நிலை எடுத்ததோடு, பிராந்தி யத்தில் அமெரிக்க ஆதிக்கத்துக்கும் வழி வகுத்துச் செயற்பட்டது. இந்த இடத்திலேதான் அமெரிக்காவை மையப்படுத்திய நேட்டோ இராணுவ அணியோடு சேரவுள்ளமை தொடர்பாக உக்ரைன் அறிவித்தது. ஆனால் உள்நாட்டுப் போர் நடைபெறும் நிலையில், நேட்டோவுடன் உக்ரைன் இணைய முடியாதென அமெரிக்காவும் அவ்வப்போது ஒப்பாசாரத்துக்காகக் கூறியிருந்தது.


16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலாந்தன்

# ஐ.நா.வுக்குக் கடிதம் எழுதும் கட்சிகள்?





கடந்த ஆண்டு ஜனவரி 21ஆம் திகதி கூட்டாகக் கடிதம் அனுப்பிய கட்சிகள் இம்முறை ஐ.நா.வுக்கு தனித்தனியாகவும் கூட்டாகவும் கடிதங்களை அனுப்பியுள்ளன. கடந்த ஆண்டு அனுப்பிய கடிதத்தின் விளைவாக என்ன நடந்தது? அந்தக்கூட்டுக் கடிதத்தில் பொறுப்புக்கூறலை ஜெனிவாவுக்கு வெளியே கொண்டு போக வேண்டும் என்று மூன்று கட்சிகளும் கேட்டிருந்தன.

கடந்த ஓராண்டு காலப்பகுதிக்குள் அவ்வாறு பொறுப்புக்கூறலை ஜெனிவாவுக்கு வெளியே கொண்டு போகும் விடயத்தில் உண்மையாக உழைத்த கட்சி எது? இதுவிடயத்தில் தமிழ்க் கட்சிகள் முதலில் தமது மக்களுக்கு பொறுப்புக்கூறுமா?

உக்ரைன் விவகாரம் மீண்டும் ஒரு தடவை ஐ.நா.வின் கையாலாகாத்தனத்தை நிரூபித்துக் கொண்டிருக்கும் ஒரு காலகட்டத்தில், ஏற்கனவே ஐ.நா.வின் கையாலாகாத்தனத்தால் கைவிடப்பட்ட ஈழத்தமிழர்கள், ஐ.நா.வை நோக்கி சலிப்பின்றி கடிதங்களை எழுதிக் கொண்டிருக்கிறார்கள். இம்முறை கூட்டமைப்பு தனியாக ஒரு கடிதம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனியாக ஒரு கடிதம், ஐந்து கட்சிகளின் கூட்டு தனியாக ஒரு கடிதம், என்று மூன்று முக்கிய கடிதங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. இதில் சம்பந்தர் கையெழுத்திட்ட கடிதம் ஏனைய கட்சிகள் எல்லாவற்றுக்கும் முதலில் அனுப்பப்பட்டுவிட்டது. அந்தக்கடிதம் ஊடகங்களிலும் வெளிவந்திருந்தது. ஆனால் கடந்த திங்கட்கிழமை 5 கட்சிகள் இணைந்து ஐ.நா.வுக்கு ஒரு கடிதத்தை அனுப்பியிருக்கின்றன. அந்தக்கடிதத்தில் ஒரு பொது வாக்கெடுப்புக்கான கோரிக்கையும் காணப்படுகிறது. கூட்டமைப்பு அனுப்பிய கடிதத்தில் அவ்வாறான கோரிக்கைகள் எவையும் கிடையாது.

ஆனால் மேற்கண்ட கடிதத்தை அனுப்பிய ஐந்து கட்சிகளில் இரண்டு இப்பொழுதும் கூட்டமைப்புக்குள் அங்கம் வகிக்கின்றன. கடந்த செப்ரெம்பர் மாத ஐ.நா. கூட்டத்தொடரை முன்னிட்டும் அவை இவ்வாறு ஒரு கூட்டுக் கடிதத்தை அனுப்பின. அந்தக்கடிதத்தை வரையும் முயற்சிகளை தொடக்கத்தில் ஆதரித்த மாவை சேனாதிராஜா கடைசி வேளையில் அதில் கையெழுத்து வைப்பதை தவிர்த்து விட்டார். அதேசமயம் ஏனைய கட்சிகள் தமிழரசுக் கட்சிக்காக காத்துக் கொண்டிராமல் ஒரு கடிதத்தை கூட்டாக அனுப்பி வைத்தன. அது அப்பொழுது ஒரு சர்ச்சையாக எழுந்தது. கூட்டமைப்பு இரண்டாக உடையப் போகிறதா என்ற கேள்விகளையும் எழுப்பியது. எனினும் சம்பந்தர் நிலைமைகளை ஒருவாறு சமாளித்து கூட்டமைப்பை பாதுகாத்தார்.

இப்பொழுது மறுபடியும் அதே பிரச்சினை. முன்பு நடந்தது போலவே இந்த முறையும் மாவை சேனாதிராஜா ஐந்து கட்சிகளின் முயற்சிகளில் ஒத்துழைத்ததாகத் தெரியவருகிறது. ஆனால் அவர் கடிதத்தில் கையெழுத்திடவில்லை. அதேசமயம் சம்பந்தர் கூட்டமைப்பின் சார்பாக ஒரு கடிதத்தை தயாரித்தபோது அதில் பங்காளிக் கட்சிகளின் பங்களிப்பை கேட்டதாக ஒரு செய்தி வெளிவந்தது. முதல் வரைவை வரைந்த பின் அதை பங்காளிக் கட்சித் தலைவர்களிடம் அனுப்பி அவர்களுடைய கருத்துக்களையும் பெற்றுக்கொண்டு இறுதிவரைவை தயாரித்து ஐ.நா.வுக்கும் அனுப்புவது என்று சம்பந்தர் சிந்தித்ததாக கூறப்படுகிறது.

ஆனால் பங்காளிக் கட்சிகளைக் கேட்டால் அவர்கள் வேறுவிதமாக கூறுகிறார்கள். சம்பந்தர், கூட்டமைப்பின் தலைவர் எழுதுவதாக ஒரு கடிதத்தை எழுதிவிட்டு அதைத் தமது பார்வைக்கு அனுப்பியதாகவும், அது பங்காளிக் கட்சித் தலைவர்கள் கையொப்பம் வைப்பதற்கான ஒரு கடிதம் அல்லவென்றும் கூறுகிறார்கள்.

தமிழ் மக்கள் மத்தியில் உள்ள ஒரே கூட்டுக்குள் இருந்து இரு வேறு கடிதங்கள் அனுப்பப்படுவது என்பது கூட்டமைப்பு ஒரு இறுக்கமான கூட்டாக இல்லை என்பதைத்தான் காட்டுகிறது. இந்தியாவுக்கு கடிதம் எழுதும் விடயத்திலும் முதலில் ஒத்துழைக்காத தமிழரசுக் கட்சி கடைசிக் கட்டத்தில் ஒத்துழைத்தது. ஆனால் ஒன்றாகக் கடிதம் எழுதிவிட்டு தனியாக சம்பந்தரும் சுமந்திரனும் இந்தியத் தூதுவரை கொழும்பில் சந்தித்திருக்கிறார்கள். மேலும், ஒரு புலம்பெயர்ந்த தமிழ் அமைப்போடு இணைந்து தமிழரசுக் கட்சி தமிழக முதல்வர் ஸ்டாலினுக்கு கடிதம் எழுதியிருக்கிறது. இது தவிர பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு எதிரான கையெழுத்துப் போராட்டத்தை தமிழரசுக் கட்சி தனியாக முன்னெடுக்கின்றது. அதாவது ஒரே கூட்டமைப்புக்குள் தமிழரசுக் கட்சி தனியாக ஓடுகிறது. ஏனைய கட்சிகள் கூட்டமைப்பில் இருந்து பிரிந்த கட்சிகளோடு இணைந்து வேறு ஒரு தனியோட்டம் ஓடுகின்றன. அதேசமயம் கூட்டமைப்பு என்ற பெயரிலும் கடிதம் அனுப்பப்படுகிறது. இது எதனைக் காட்டுகிறது? கூட்டமைப்பின் தலைமை இறுக்கமாக இல்லை என்பதைத்தானே? பங்காளிக் கட்சிகள் தனியோட்டம் ஓடும்போது அதனைத் தடுத்து கூட்டமைப்பின் கட்டுக்கோப்பைப் பேண ஏன் சம்பந்தரால் முடியவில்லை?

அவர் உடல் ரீதியாக மற்றவர்களில் தங்கியிருக்கும் ஒருவராக மாறிவிட்டார். கூட்டமைப்பு அவருடைய முழுமையான கட்டுப்பாட்டுக்குள் இல்லை என்பதைத்தான் கடந்த ஓராண்டுக்கு மேலான நிலைமை நமக்கு உணர்த்துகிறது. தலைமை இருக்கத்தக்கதாக ஏனைய முக்கியஸ்தர்கள் கருத்துக் கூறுவதும், தலைமைக்கு எதிராக பகிரங்கமாக கருத்துக் கூறுவதும், பங்காளிக் கட்சிகள் வெளியில் உள்ள கட்சிகளோடு இணைந்து ஒரு கூட்டுக்குப் போவதும், கடிதங்களை அனுப்புவதும் அதைத்தான் நமக்கு உணர்த்துகின்றன.

ஆம். தமிழ் மக்களுடைய அரசியலில் அண்மைக்காலமாக ஏற்படும் குழப்பங்கள் எல்லாவற்றுக்கும் பிரதான காரணம் ஸ்திரமற்ற தலைமைத்துவம்தான். கூட்டமைப்பின் தலைவராக சம்பந்தர் கூட்டமைப்பை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியாதவராக காணப்படுகிறார். அதேபோல மூத்த கட்சியும் பெரிய கட்சியுமான தமிழரசுக் கட்சியின் தலைவரான மாவை சேனாதிராஜாவும் தனது தலைமைத்துவத்தை நிரூபிக்க முடியாதவராகத் தெரிகிறார். கடந்த பொதுத் தேர்தலில் பெற்ற தோல்விக்குப் பின் தன்னை மீளக் கட்டியெழுப்ப முடியாத ஒருவராகவே தொடர்ந்தும் காணப்படுகிறார். குறிப்பாக கடந்த மார்ச் மாதத்திலிருந்து நிகழும் ஒருங்கிணைப்பு முயற்சிகளில் மாவை சேனாதிராஜாவின் இயலாமையும் வழுவழுத்த தன்மையும் வெளிப்படக் காணலாம். கூட்டமைப்புக்கு வெளியே நிகழும் ஐந்து கட்சிகளின் ஒருங்கிணைப்பு முயற்சிகளில் மாவை உறுதியான முடிவுகளை எடுக்கவில்லை. ஒன்றில் தமிழரசுக் கட்சியை தனியாகப் பலப்படுத்துவது என்று முடிவெடுக்க வேண்டும். அல்லது ஐந்து கட்சிகளோடு இணைந்து அந்தக்கூட்டைப் பலப்படுத்த வேண்டும். அவர் இரண்டையுமே செய்யவில்லை.

ஆனால் அதற்காக ஐந்து கட்சிகளின் கூட்டோ அல்லது தமிழ் தேசிய மக்கள் முன்னணியோ கூட்டமைப்புக்கு மாற்றாக பலமடைந்து வருவதாக இந்தக்கட்டுரை கருதவில்லை. ஐந்து கட்சிகளின் கூட்டுக்குள் இணைத் தலைவர்கள்தான் உண்டு. எனினும், அது உருகிப் பிணைந்த ஒரு பலமான கூட்டாகத் தெரியவில்லை. அது கூட்டமைப்புக்கு எதிரான ஓர் ஐக்கியம்.

எதிர்காலத்தில் தமிழரசுக் கட்சி கூட்டமைப்புக்குள் இருந்து பங்காளிக் கட்சிகளை நீக்கக் கூடிய வாய்ப்புக்களை ஊகித்து முன்னெச்சரிக்கையோடு உருவாக்கப்பட்ட ஒரு கூட்டு அது. அதுபோலவே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் தன்னை ஒரு பிரதான கட்சியாக வளர்த்தெடுக்கும் வழிவரைபடத்தைக் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. மணிவண்ணனின் வெளியேற்றம் அந்தக்கட்சியை எவ்வளவு தூரம் பாதித்திருக்கிறது என்பது இனிவரும் தேர்தல்களில்தான் தெரியவரும். அந்தக்கட்சி எப்பொழுதும் பிரதான நீரோட்டத்துக்கு எதிராக எதிர்ப்பு அரசியலை செய்யும் ஒரு கட்சியாகத்தான் தொடர்ந்தும் காணப்படுகிறது. தமிழ் மக்களின் அரசியலை நிர்ணயிக்கும் ஒரு மிகப் பலமான கட்சியாக வளர வேண்டும் என்ற வழி வரைபடம் அந்தக்கட்சியிடம் இருக்கிறதா? ஏனைய கட்சிகள் காலப்போக்கில் சிதையும்போது தான் படிப்படியாக பலமடையலாம் என்று அந்தக்கட்சி நம்புகின்றதா?

கடந்த நாடாளுமன்றத் தேர்தலையொட்டி கூட்டமைப்புக்கு மாற்றாக ஒரு அணியைப் பலப்படுத்த முயற்சித்த செயற்பாட்டாளர்களுக்கு அது நன்கு தெரியும். ஒரு மாற்று அணியை அப்பொழுது மிகப் பலமாகக் கட்டியெழுப்பக் கூடிய வாய்ப்புக்கள் கிடைத்தன. அவ்வாறு ஒரு மாற்று அணி மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கும் விதத்தில் ஒரு பலமான அணியாக கட்டியெழுப்பப்பட்டு இருந்திருந்தால் கடந்த பொதுத் தேர்தலில் கூட்டமைப்பு பெருமளவுக்கு தோற்கடிக்கப்பட்டிருக்கும். ஆனால் அவ்வாறு நடக்கவில்லை. கூட்டமைப்பு இழந்த ஆறு ஆசனங்களில் மூன்றைத்தான் மாற்று அணி பெற்றது. ஏனைய மூன்றும் தமிழ்த்தேசிய நிலைப்பாட்டைக் கொண்டிராத கட்சிகளிடம் சென்றன. இவ்வாறு வாக்குகள் சிதறியதற்கு பிரதான காரணம் மாற்று அணி ஒரு பலமான கூட்டாகத் திரட்சியுறாமைதான்.

எனவே இப்பொழுது படம் மிகத் தெளிவாகத் தெரிகிறது. கூட்டமைப்பின் தலைமையும் பலமாக இல்லை, தமிழரசுக் கட்சியின் தலைமையும் பலமாக இல்லை. ஐந்து கட்சிகளின் கூட்டும் உருகிப்பிணைந்த ஐக்கியமாகத் தெரியவில்லை. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மேற்படி நிலைமைகளை வெற்றிகரமாக கையாண்டு தன்னை ஒரு பெரும் கட்சியாக வளர்த்துக்கொள்ளும் என்று நம்பத்தக்கதாக கடந்த 10 ஆண்டுகளும் அமையவில்லை. தொகுத்துப் பார்த்தால் கடந்த 12 ஆண்டுகளில் தமிழ்க் கட்சிகள் உடைந்து கொண்டே போகின்றன. இப்பொழுது ஏற்பட்டிருக்கும் ஐந்து கட்சிகளின் கூட்டு இனிமேல்தான் அதன் பலத்தை நிரூபித்துக்காட்ட வேண்டும்.

இது மிகப் பலவீனமான ஒரு நிலைமை. கூட்டமைப்புக்குள் ஏற்பட்டிருக்கும் குழப்பம் தொடர்ந்து நீடித்தால், மிகக்குறிப்பாக சம்பந்தர் முழுமையாகத் தலைமை தாங்க முடியாத ஒரு நிலைமை தோன்றினால், கூட்டமைப்பு சிதையக்கூடிய வாய்ப்புகளே அதிகமாகத் தெரிகின்றன. தமிழரசுக் கட்சி தனியாகவும் பங்காளிக் கட்சிகள், ஐந்து கட்சிகளின் கூட்டுக்குள்ளும் இணைந்து செயற்படக்கூடிய வாய்ப்புக்களே அதிகரித்து வருகின்றன.

அதாவது அரங்கில் உள்ள தமிழ்த் தேசிய கட்சிகள் எவையும் தமிழ் மக்களை இப்போதைக்கு ஒரு தேசமாக திரட்டப்போவதில்லை என்று பொருள்.

**இம்முறை கூட்டமைப்பு தனியாக ஒரு கடிதம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனியாக ஒரு கடிதம், ஐந்து கட்சிகளின் கூட்டு தனியாக ஒரு கடிதம், என்று மூன்று முக்கிய கடிதங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. இதில் சம்பந்தர் கையெழுத்திட்ட கடிதம் ஏனைய கட்சிகள் எல்லாவற்றுக்கும் முதலில் அனுப்பப்பட்டுவிட்டது.**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



1898, 1899 ஆம் ஆண்டுகளில் இரண்டு தடவைகள் யாழ்ப்பாணத்தில் மிக நீண்ட உயர்நீதிமன்ற வழக்காக நடைபெற்று முடிந்த அழகம்மா கடத்தல் வழக்கு அந்தக்கால யாழ்ப்பாணத்தின் பண்பாட்டையும் நிலைமைகளையும் விளங்கிக் கொள்ள இன்றும் உதவுவதாக உள்ளது.

# அழகம்மா

# கடத்தல் வழக்கு

O தி.கோபிநாத்

அழகம்மா கடத்தப்பட்ட வழக்கில் குற்றவாளிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்று பலரும் விரும்பியிருந்த போதும் அப்படி விடுவிக்கப்படுவார்கள் என்ற நம்பிக்கை எவருக்குமே இருக்கவில்லை. அவ்வகையில் வழக்கின் தீர்ப்பு எல்லாத் தரப்பினருமே எதிர்பாராததாக அமைந்து விட்டது. அத்துடன் பல தரப்பிலிருந்தும் அதிருப்திகள் வெளிப்படலாயின.

வழக்கின் தீர்ப்பினை நேரடியாக எதிர்க்காத 'இந்து சாதனம்' போன்ற பத்திரிகை கூட வழக்கின் தீர்ப்பு சரியானதல்ல என்பதனைப் பூடகமாகப் பதிவு செய்திருந்தது.

'கொழும்பு ஒப்சேவர்' 'பத்திரிகையானது குறித்த வழக்குத் தொடர்பான காட்டமான கண்டனத்தினை விரிவாகப் பதிவு செய்தது. 1898 ஒக்ரோபர் 17ஆம் திகதி, 'கொழும்பு ஒப்சேவரில்' வெளியான குறித்த பதிவின் தமிழாக்கம் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியான உதயதாரகைப் பத்திரிகையிலும் பிரசுரமானது. குறித்த கண்டனத்தில் யாழ்ப்பாணத்து யூரிமார் மீது பல காலமாகவே இத்தகைய அதிருப்தி இருந்து வந்ததைப் பதிவு செய்த 'ஒப்சேவர்', நீதிபதி பிறவுண் தெளிவாகவே இராசையா குற்றவாளி என்பதனைக் குறிப்பிட்டிருந்தும் யூரிமார் விடுவித்தமை நீதியற்ற செயல் என்று சாடியிருந்தது.

மனிதாபிமானமுள்ள எவருக்கும் மன வருத்தத்தையும் அனுதாபத்தையும் உண்டாக்கக்கூடிய இந்த வழக்கு இப்படியாக முடிந்ததையிட்டுக் கவலையையும் வெளியிட்ட ஒப்சேவர் "அரசாங்கமானது நீதிபதியிடம் சிறப்பு அறிக்கை பெற வேண்டும் என்றும் இனிமேலும் இப்படியான அநியாயமான தீர்ப்புகள் வழங்கப்படுவதைத் தடுக்க வேண்டும் என்றும் வடமாகாணத்தில் நீதியைப் பலப்படுத்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று" வேண்டுகோள்களையும் முன்வைத்திருந்தது.

அழகம்மா நீதவான் தம்புவிடம் செல்கையிலேயே கடத்தப்பட்டார் என்ற அளவில் வழக்கின் தீர்ப்பினை இட்டுத் தம்பு தரப்பிலிருந்தும் அதிருப்தி வெளியானது. குறிப்பாக அரசாங்கம் அவருக்கு வழங்கியிருந்த பணியிலிருந்து வேறு பணிக்கு மாற அவர் முயற்சிகளும் எடுத்தார். இதேவேளை குறித்த வழக்கின் நீதிபதி பிறவுண் சார்பாகவும் அதிருப்தி முன்வைக்கப்பட்டதை ஊகிக்க முடிகிறது.

இவ்வாறாகப் பல்வேறு தரப்புகளிலிருந்தும் அழுத்தம் வந்தமையால் குறித்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டோரை ஒரேயடியாகத் தப்பிச் செல்ல விடக் கூடாது என்ற முடிவுக்கு அரச தரப்பு வர வேண்டியதாக இருந்தது. வழக்கு விவரங்களை ஆராய்ந்த போது இராசையா தரப்பில் அழகம்மா இராசையாவுக்கு எழுதியதாக முன்வைக்கப்பட்ட கடிதம் ஓர் ஆவண மோசடி என்பது தெளிவாகத் தெரிந்த வகையில் மேலதிக விசாரணை தொடங்கப்பட்டது.

குறித்த கடிதமானது அழகம்மா விடுவிக்கப்பட்டு இராசையா முதன்முதலில் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்கப்பட்ட போது இராசையா தரப்பினால் சாட்சிப் பொருளாகச் சமர்ப்பிக்கப்பட்ட ஓர் ஆவணமாகும்.

1897 ஏப்ரல் 22 அன்று கைது செய்யப்பட்ட இராசையா ஜூன் 14 ஆம் திகதி வரை தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு காவல்துறை நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டான். அவ்வாறு விசாரணைக்கு வந்த போது மே மாதமளவில் தனது மருமகனான, அதாவது அக்கா மகனான, வில்பிரட் செல்வநாயகம் அலெக்சாண்டரிடம் தனது பெட்டிகளில் தேடி அழகம்மா எழுதிய கடிதங்களை எடுத்து வரும்படி சொல்லியிருந்தான்.

செல்வநாயகம் அப்போது யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கல்கத்தா நுழைவு வகுப்பில் கல்வி கற்றுக் கொண்டிருந்த மாணவன். அவன் தனது மாமனார் சொன்னபடி அவரது இரு புத்தகப் பெட்டிகளில் தேடிப் பார்த்தான். அந்தப் பெட்டிகளில் கடிதம் எதுவும் கிடைக்கவில்லை என்று அடுத்த தடவை இராசையா வழக்குக்கு அழைத்து வரப்பட்ட போது சொல்லியிருந்தான்.

"ஒழுங்காகத் தேடிப் பார்; கிடைக்கும்" என்று இராசையா சொல்லியனுப்ப மீண்டும் தேடிய செல்வநாயகம் இராசையாவின் உடுப்புப் பெட்டிக்குள் வேறு பல கடிதங்களுடன் ஒன்றாகக் கிடந்த அழகம்மாவின் ஒரேயொரு கடிதத்தைக் கண்டெடுத்தான். அடுத்த தடவை நீதிமன்றத்தில் இராசையாவைச் சந்தித்தபோது ஜூன் முதலாம் திகதியன்று அந்தக்கடிதத்தை அவன் கொடுத்திருந்தான். வேறு ஒரு கடிதமும் கிடைக்கவில்லை என்றும் இராசையாவிடம் சொல்லியிருந்தான். செல்வநாயகம் இப்படிக் கடிதம் தேடுவது பற்றித் தனது குடும்பத்தினருக்குச் சொல்லியிருக்கவில்லை. கைது செய்யப்படுவதற்கு முன்னரேயே குறித்த கடிதத்தை இராசையா வைத்திருந்தானா அல்லது கைதான பின்னர் கடிதம் அங்கு வைக்கப்பட்டுச் செல்வநாயகத்தால் எடுக்கப்பட்டதா அல்லது வேறு யாரும் கொடுத்த கடிதத்தைப் பெட்டியில் இருந்து எடுத்து வந்ததாகச் செல்வநாயகம் பொய்ச் சாட்சி சொன்னானா என்று தெரியவில்லை.

ஏதோ ஒரு வழியில் அழகம்மாவால் இராசையாவுக்கு எழுதப்பட்டதாகக் குறித்த கடிதம் நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அழகம்மா தனக்குப் பல கடிதங்கள் எழுதியிருந்தாள் என்றும் அவற்றை அழித்து விடும்படி அவள் கூறியிருந்ததால், தான் அவற்றை அழித்து விட்டதாகவும் ஏதாவது பிரச்சினை என்று வந்தால் அவளது பெற்றோருக்கு ஆதாரமாகக் காட்டலாம் என்று இந்த ஒரு கடிதத்தை மட்டும் பத்திரப்படுத்தி வைத்திருந்ததாகவும் இராசையா கூறினான்.


கடிதம் சமர்ப்பிக்கப்பட்ட அன்றே அந்தக்கடிதத்தை அழகம்மா இராசையாவுக்கு எழுதினாளா என விசாரிக்கப்பட்டாள். குறித்த கடிதத்தை வாசித்த அழகம்மா அந்தக் கடிதம் தன்னால் எழுதப்பட்டது தான் என்றும், ஆனால் இராசையாவுக்கு எழுதப்பட்டது அல்ல என்றும் விளக்கமளித்தாள். அத்துடன் குறித்த கடிதத்தில் கடைசி வரி வெட்டப்பட்டிருந்தது. குறித்த வரியினைத் தான் வெட்டியிருக்கவில்லை என்றும் சாட்சியம்



ளித்த அழகம்மா சுமார் 15 நிமிடங்கள் சிரமப்பட்டு "ரெத்தினம் போல் பள்ளிக்கூடத்துக்கு வந்ததா?" என்ற வரி வெட்டப்பட்டிருந்ததை அடையாளம் கண்டு கூறியிருந்தாள்.

குறித்த கடிதத்தை வைத்தே இராசையாவைத் தோலுரித்துக் காட்டி விடலாம் என்று புரிந்து கொண்ட நயில்ஸ் குடும்பத்தினர் துரிதமாகச் செயற்பட்டனர். கடிதம் யாருக்கு எந்தச் சந்தர்ப்பத்தில் எழுதப்பட்டது என்பதனை அவர்கள் ஐயம் திரிபற நிறுவ வேண்டியிருந்தது.

அமெரிக்கன் மிசனில் போதகராக இருந்த இளையதம்பி என்பவரது மகளான நல்லம்மா வேம்படியில் மாணவியாக இருந்தவர். நல்லம்மாவும் அழகம்மாவும் நெருங்கிய தோழிகள். இருவரும் பல கடிதங்களை ஒருவருக்கு ஒருவர் எழுதியிருந்தனர். அவ்வாறு பரிமாறப்பட்ட கடிதங்களில் ஒன்றினை ஏதோ ஒரு



13/8/1897.

My dearest Darling friend

My love and kind regards to you

I remain
Your dearest darling friend
Emily A. Niles

அழகம்மா எழுதிய கடிதத்தின் மாதிரி

# அழகம்மாவின் கடிதம்

வகையில் எடுத்துத் திரித்துத் தனக்கு எழுதப்பட்ட கடிதமாக இராசையா சமர்ப்பித்திருப்பது அவர்களுக்குத் தெளிவாகத் தெரிந்தது.

மதிய உணவுக்காக நீதிமன்ற அமர்வு இடைநிறுத்தப்பட்ட போது அழகம்மா தனது இரு சகோதரர்களுடன் வண்ணார்பண்ணையிலுள்ள தனது வீட்டுக்குச் சென்றாள். நயில்ஸ் போதகரும் அவர் மனைவியும் இன்னொரு குதிரை வண்டியை ஒழுங்கு செய்து கடிதம் யாருக்கு எழுதப்பட்டதோ அவரை அதாவது நல்லம்மா இளையதம்பியை அழைத்து வர உடுவிலுக்குப் புறப்பட்டனர்.

9

அழகம்மா தனது வீட்டில் பெட்டியில் வைத்திருந்த வேறு பல கடிதங்களுடன் ஒன்றாக நல்லம்மா தனக்கு எழுதிய கடிதம் ஒன்றை அடையாளம் கண்டு எடுத்துக் கொண்டாள். சிவப்பு மையில் எழுதப்பட்டிருந்த குறித்த கடிதம் 11.08.1897 என – அதாவது அழகம்மாவின் கடிதத்துக்கு இரண்டு நாட்களுக்கு முன்பதாகத் திகதியிடப்பட்டிருந்தது. குறித்த கடிதத்துடன் அழகம்மாவும் சகோதரர்களும் நீதிமன்றத்துக்குத் திரும்பினர்.


உடுவிலில் இருந்து நல்லம்மாவையும் நயில்ஸ் தம்பதியினர் அன்றே அழைத்து வந்துவிட்டனர். நீதிமன்றில் தான் எழுதிய கடிதத்தையும் தனக்கு எழுதப்பட்ட கடிதத்தையும் நல்லம்மா அடையாளம் கண்டு கொண்டார். அழகம்மாவின் கடைசி வரி வெட்டப்பட்டிருக்கவில்லை என்பதையும் உறுதிப்படுத்தினார்.

நல்லம்மாவின் கடிதத்துக்குப் பதில் கடிதம் போலவே அழகம்மாவின் கடிதம் தெரிந்ததால் இராசையா தரப்பினரால் ஏதும் சொல்ல முடியவில்லை. இந்தக்கடிதம் குறித்து உயர்நீதிமன்ற விசாரணையிலும் கவனம் செலுத்தப்பட்டது.

உயர்நீதிமன்ற விசாரணையில் இராசையா தரப்பு வெற்றி பெற்ற நிலையில் குறித்த கடிதம் மீண்டும் தூசி தட்டி எடுக்கப்பட்டது. விசாரணைகள் சூடு பிடிக்கலாயின. கள்ளச் சாட்சியம் சொன்னான் என்றும் ஆவண மோசடி செய்தான் என்றும் இராசையா மீது இன்னொரு வழக்குத் தொடுக்கப்பட்டது. இராசையா மீண்டும் கைது செய்யப்பட்டு மூவாயிரம் ரூபா சரீரப் பிணையில் வெளிவந்து வழக்கினை எதிர்கொண்டான். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம் போட்டி 73



அனுப்புபவர் பெயர்:..............................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

..................................................................

கையொப்பம்:..............................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1. நிர்வாகம் தொடர்பான ஒரு கற்கைத்துறை 6. நெருப்பு 7. நோவு 9. ஒரு யுத்தவகை விளையாட்டு 10. வயிற்றில் சூல் கொண்டால் இப்படிக் கூறுவர் 11. திசையை மாற்று 12. இது சிறிதானாலும் உதவும் 13. கன்னை 14. சைவச் சாப்பாட்டில் இந்தத் தானியக்கறிக்கு முக்கிய இடம் 15. பெண்ணுக்கு இது வேலி. 16. உழைத்துப் பெறு 18.அசுத்தம் நீக்கு. 19. இறுகிய பெரிய கல்.

## மேலிருந்து கீழ்

1. முகத்துக்கு முன்னால் நல்லது கூறுவது 2. தூரத்து வீதியில் தோற்றும் நீர்த்தன்மை 3. ஒரு தூர அளவீட்டு அலகு 4. சுவைகளுள் ஒன்று
5. இது ஒரு வியாதி 8. பெண்களை மரியாதையாக அழைப்பது இப்படி
10. இனிப்பானது 11. ஆந்திராவில் புகழ்பெற்ற புண்ணியத் தலம்
12. இரும்பில் பிடிப்பது 13. நாற்பது திருடர்களின் தலைவன்
14. மென்மையானது 15. தாங்கள் 16. பிழை அல்ல 17. செலுத்தும் வரி.

### சொற்சிலம்பம் போட்டி 72 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1.விவாகரத்து 7.சிதிலம் 8. வாதம் 10.வரம்பு 11. திரும்பவும் 14. ரசி 15. கனி 16. தாம் 17. பிரயாசம் 19. புசல் 20. கபோதி 22. கழுகு 23. குடதிசை

**மேலிருந்து கீழ்**

1.விசித்திரம் 2. வாதி 3. கலகம் 4. ரம் 5. துவாரம் 6. அம்புஜம் 9. தம் 10. வவுனியா 12. ருசி 13. பகரல் 16. தாம்போதி 17. பிசகு 18. சகட 19. புழு 21. திசை.

**சொற்சிலம்பம் போட்டி இல.73**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்,
என்னும் முகவரிக்கு
11.03.2022 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

**போட்டி இலக்கம் 72 இல் வெற்றி பெற்றோர் விபரம்**

**1 ஆம் பரிசு**
ஸ்ரீ.அர்ச்சயன்
அளவெட்டி தெற்கு
அளவெட்டி.

**2 ஆம் பரிசு**
பு.ஷபிகா
இலகடி வீதி,
கரவெட்டி மத்தி கரவெட்டி

**3 ஆம் பரிசு**
ம.மேசிலெற்றீஷியா
இல.1625 இரத்தினபுரம்,
கிளிநொச்சி.

**4 ஆம் பரிசு**
அ.சத்தியரூபன்
ஏழாலை மேற்கு,
ஏழாலை.

**5 ஆம் பரிசு**
[illegible]
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

# யாழ்ப்பாண வரலாறு

○ ந.பரமேஸ்வரன்

1505-1948 வரை



1833 ஒக்ரோபர் 01

பேர்சிவல் அக்லண்ட் டைக் யாழ்ப்பாண அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டார். கோல்புறூக் ஆணைக்குழு இலங்கையில் மேற்கொண்ட சீர்திருத்தங்களையடுத்து கலெக்டர் பதவி, அரசாங்க அதிபர் பதவி என மாற்றப்பட்டது. டைக் பொலிஸ் நீதிவானாகவும், கடமையாற்றினார்.

**சட்டசபை உருவாக்கம்**

Legislative Council என அழைக்கப்பட்ட சட்டசபை உருவாக்கப்பட்டது. (தற்போதைய இலங்கை நாடாளுமன்றத்துக்கு நிகரான அமைப்பு.) சட்டசபையில் ஆளுநரின் (Governor) கீழ் ஒவ்வொரு இனத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஒவ்வொரு பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டனர். சட்டசபைப் பிரதிநிதிகள் ஆளுநராலேயே நியமிக்கப்பட்டனர்.

ஐரோப்பியர் - 03
பறங்கியர் - 01
சிங்களவர் - 01
தமிழர் - 01

ஆரம்பத்தில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்குமென ஒரு பிரதிநிதியே நியமிக்கப்பட்டிருந்தார்; பின்னர் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் தனித்தனி பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டனர்.

அத்துடன் சிங்களவர்களின் பிரதிநிதித்துவம் இரண்டாக (கண்டிச் சிங்களவர்களின் பிரதிநிதி, கரையோரச் சிங்களவர்களின் பிரதிநிதி) அதிகரிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் பொது வேலைத் திணைக்கள (Public Works Department) அலுவலகம் திறக்கப்பட்டது.

**1834**

**அச்சிடும் பணிகள் ஆரம்பம்**

ஆரம்பத்தில் அமெரிக்க மிஷனரியினரின் செயற்பாடுகளுக்கு பல கட்டுப்பாடுகளை விதித்த பிரிட்டிஷ் அரசு , பின்னர் அந்தக் கட்டுப்பாடுகளை தளர்த்தியதைத் தொடர்ந்து அமெரிக்க மிஷனரியினர் நல்லூரில் கரட் போதகர் கைவிட்டுச்சென்ற அச்சியந்திரத்தை மானிப்பாய்க்கு எடுத்து வந்து அச்சிடும் பணிகளை ஆரம்பித்தனர்.

இதனைத்தொடர்ந்து அதுவரை காலமும் பனை ஓலையில் எழுதி விநியோகிக்கப்பட்ட கிறிஸ்தவ மத நூல்கள், துண்டுப்பிரசுரங்கள் என்பன அச்சிட்டு வெளியிடப்பட்டன.

**மது விலக்கு**

இதே காலப்பகுதியில் எவரும் மது அருந்துவதில்லை என சபதமெடுத்துக் கொள்ளும் திட்டத்தை அமெரிக்க மிஷனரியினர் அமெரிக்காவில் அறிமுகம் செய்தனர். இந்தத் திட்டம் ஓரளவு வெற்றியளித்தது. அமெரிக்க மிஷனைச்சேர்ந்த மருத்துவர் ஸ்கடர் (Scuder) யாழ்ப்பாணத்திலும் மதுவிலக்கு சங்கம் ஒன்றை ஆரம்பித்து மதுவால் ஏற்படும் தீமைகள் பற்றி விளக்கக் கூட்டங்களை நடத்தினார்;

**யாழ் மத்திய கல்லூரி ஆரம்பம்**

வெஸ்லியன் மிஷனைச் சேர்ந்த பீற்றர் பேர்சிவல் (Pieter Percival) தம்பதியர் யாழ்ப்பாணம் வந்து ,யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியை ஆரம்பித்தனர். ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனி விடுதிகளும் ஆரம்பிக்கப்பட்டன. பெண்கள் விடுதிப்பாடசாலை பின்னர் வேம்படி மகளிர் கல்லூரியாக மாற்றம் பெற்றது. தற்போது உள்ள இடத்திலேயே இரு பாடசாலைகளும் ஆரம்பத்தில் இருந்து இயங்கின. வேம்படி மகளிர் கல்லூரியின் பெண்கள் விடுதி 1837 ஆம் ஆண்டு ஆறு மாணவிகளுடன் ஆரம்பிக்கப்பட்டது. பிறவுண் சின்னத்தம்பி தலைமை ஆசிரியராகவும் வைமன் கதிரவேற்பிள்ளை, மெக்கன்ஸ்றி கனகரத்தினம், ஜோன் கோச், ஜொனாதன் குறோதர் ஆகியோர் உதவியாளர்களாகவும் நியமிக்கப்பட்டனர்.

அளவைக்கணிதம், அட்சரகணிதம், புராதன, நவீன வரலாறு, அளவையியலினதும் ஒழுக்கவியலினதும் அடிப்படைகள், ஆங்கிலம், தமிழ் ஆகிய பாடங்கள் மாணவர்களுக்கு போதிக்கப்பட்டன .ஆரம்பத்தில் யாழ். மத்திய கல்லூரி சென்னை பல்கலைக்கழகத்துடன் இணைந்திருந்தது.

வண்ணார்பண்ணை,புத்தூர்,கட்டைவேலி போன்ற இடங்களில் இருந்த ஒல்லாந்தத் தேவாலயங்களையும் வெஸ்லியன் மிஷனரியினர் விலைக்கு வாங்கி பாடசாலைகளை ஆரம்பித்தனர். புத்தூரில் வெஸ்லியன் மிஷனரியினரின் மருத்துவமனை இப்போதும் இயங்கி வருகிறது. வண்ணார்பண்ணை பாடசாலை கில்னர் பாடசாலை என ஸ்தாபகரின் பெயரால் அழைக்கப்படுகிறது. இந்தப்பாடசாலைக் கட்டடம் தொல்பொருள் திணைக்களத்தால் மரபுரிமைச்சின்னமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

**1836**

பொறியியலாளர் பார்சன் தலைமையில் நாவற்குழிப் பாலத்தின் கட்டுமானப்பணிகள் ஆரம்பமாகின. நிக்லஸ் புவிராஜசிங்க முதலியார் கட்டுமானப்பணிகளை மேற்பார்வை செய்தார்.

**1838**

ஹென்றி மார்ட்டின் வீதியோரத்தில் மைல் கற்கள் நடுவதற்கான திட்ட வரைபு ஒன்றை அரசாங்க அதிபர் டைக்கிடம் சமர்ப்பித்தா. அரசாங்க அதிபர் டைக்கும் திட்டத்தை ஏற்று நடைமுறைப்படுத்தினார். இதனைத் தொடர்ந்து வடமாகாணம் முழுவதும் வீதிகளில் மைல் கற்கள் நடப்பட்டன.

**1839**

யாழ்ப்பாணத்தில் சனத்தொகைக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது
இதன்படி சனத்தொகை வருமாறு -

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | - 62,317 பேர் |
| வலிகாமம் | - 45,305 பேர் |
| தீவகம் | - 25,902 பேர் |
| வடமராட்சி | - 35,747 பேர் |
| தென்மராட்சி | - 43,927 பேர் |
| மொத்த சனத்தொகை | - 2,12,408 பேர் |

**1840**

இருபாலைச் சேனாதிராய முதலியார் 60 வயதில் காலமானார். நல்லூரில் ஆங்கிலப் பாடசாலையை ஆரம்பித்த நைற் போதகர் தொடர்பில் ஏற்கனவே பார்த்துள்ளோம். நைற் போதகருக்கு தமிழ் கற்பித்தவர் இவரே. அதீத ஞாபகசக்தியுடைய இவர் , மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் ஊஞ்சல், நல்லைக்குறவஞ்சி எனபவற்றை இயற்றியுள்ளார்.

**1840 மார்ச் 01**

H.E.O.Grady யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டார்.

**1840 ஒக்ரோபர் 19**

நல்லூர்க் கந்தசாமி கோவில் நிர்வாகி மாப்பாண முதலியார் காலமானார்.

*(வரலாறு நீளும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ர.சுருதிகா
தரம்- 9
யா/வேம்படி மகளிர் கல்லூரி.



திதோகரன் புகழினி
தரம் 9
வ/குளவிசுட்டான் அ.த.க. பாடசாலை

த.பார்த்தீபன்
தரம் - 9B
யா/மீசாலை வீரசிங்கம் ம.வி.



# விடுகதைகள்

உரித்த முயல் ஊருக்குப் போகுது அது என்ன?
**தேங்காய்**

சித்திரப்பின்னல் கோட்டைக்குள்ளே போக வழியுண்டு. திரும்ப வழியில்லை அது என்ன?
**எலிப்பொறி**

ஐந்து கிளைகள் உள்ள மரம். நிற்கநிழலுமில்லை. பறிக்க இலையுமில்லை. அது என்ன?
**கை**

அறுந்து விழும் கொடி உயிரைப் பறிக்கும்கொடி அது என்ன கொடி?
**மின்னல்**

பறக்கும் ஆனால் பறந்து போகாது அது என்ன?
**கொடி**

**தீ.பூர்வஜன்**, தரம்7
யா/சாவகச்சேரி,
இந்துக் கல்லூரி.

# இளமைப் பெயர்கள்

பசு - கன்று
ஆடு - குட்டி
காகம் - குஞ்சு
குருவி - குஞ்சு
நாய் - குட்டி
கோழி - குஞ்சு
பாம்பு - குட்டி
மீன் - குஞ்சு
நெல் - நாற்று
வாழை - குட்டி
கிளி - பிள்ளை
பனை - வடலி

**அ. கிருஸ்ணி**
யா| கனகரத்தினம்
ம.ம.வித்தியாலயம்.

# கல்வியின் சிறப்பு

ஆறு வயதினில் அடி எடுத்தேன்;
அறிவெனும் கனத்தை நோக்கி,
ஆறில் வைத்த என் கால்கள்
இன்று பதினெட்டில்
நிற்கின்றன.......


பகைத்த நண்பர்கள்,
பழைய தோழர்கள்,
கற்பித்த ஆசிரியர்கள்,
காலம் பல கடந்தாலும்
கல்வி நிலை மாறாது...

பன்னிரெண்டு தனில்
படிக்கும் எனக்கு
பல நண்பர்கள் தந்ததே
பல பல நல் ஆசான்கள் தந்ததே,
இவ் அழகிய பாடசாலை.

இன்னும் ஒரு வருடம்
என் கல்விப் பயணங்கள்....
போதாது இந்த ஒரு வருடம்
ஒரு வருட நிறைவை எண்ண
என் கண்களில்
கண்ணீர்ப் பெருக்கு....

நான் எங்கு சென்றாலும்
என்னை வயிற்றில் சுமந்த தாய்
கல்வியில் சுமந்த என் பாடசாலை
இரண்டும் என்றும்
என் கண்களே....

## எண்ணிக்கை காண்க



# அறிந்துகொள்வோம்

1. உலகில் முதல் முதல் பொலிஸ் சேவையை ஆரம்பித்த நாடு- பெரிய பிரித்தானியா
2. யானைகளை பழக்கி அடக்கும் கருவி- அங்குசம்
3. சூரியகிரகணம் நிகழும் தினம்- அமாவாசை தினம்
4. சந்திர கிரகணம் நிகழும் தினம்- பௌர்ணமி தினம்
5. பச்சையம் இல்லாத தாவரம்- காளான்
6. சீனப்பெருஞ்சுவரைக் கட்டிய மன்னன்- ரிசன்சி
7. விலையுயர்ந்த உலோகம்- பிளாட்டினம்
8. உலகில் குளிர்ச்சியான இடம்- அந்தாட்டிகா
9. இலங்கையின் மிகப் பெரிய தீவு- நெடுந்தீவு
10. இலங்கையில் நிலப்பரப்பு கூடிய மாவட்டம்- அநுராதபுரம்



# நரியும் அதன் நிழலும்

நரி ஒன்று காலை வேளை காட்டுக்குள் வேட்டைக்குச் சென்றது. கிழக்கே இருந்து எழுந்த சூரிய ஒளியில் அதன் நிழல் வெகு பெரியதாக தெரிந்தது. நரிக்கு ஒரேகுஷி. "இந்த காட்டின் ராஜாவாக உள்ள சிங்கத்தை விடவும் நான் பெரியவனாக உள்ளேன்" என தனக்குள் பெருமிதம் கொண்டது. செல்லும் வழியில் நரி ஒரு சிங்கத்தை கண்டது. சிங்கமோ சற்று முன் மானை வேட்டையாடி உண்ட களைப்பில் மெதுவாக நடந்து வந்து கொண்டிருந்தது.

நரியும் தன்னுடைய நிழல் சிங்கத்தை விடவும் பெரியதாக இருப்பதாக நினைத்துகொண்டு சிங்கம் வரும் வழியில் நடந்து சென்றது. சிங்கமும் நரியை ஒன்றும் செய்யாமல் கடந்து சென்றது.

நரிக்கோ பெருமிதம் தாங்கமுடியவில்லை. தான் சிங்கத்தை விடவும் பெரியதாக இருப்பதனால்தான் சிங்கம் தன்னைக் கண்டு பயந்து செல்கிறது என நினைத்துக்கொண்டது.

மாலை நரி காட்டில் உள்ள மிருகங்களை எல்லாம் அழைத்து அனைத்து மிருகங்களிடமும், "இனிமேல் இந்தக் காட்டுக்கு நானே தான் ராஜா" என்றது. யானையோ, "இதை நாங்கள் ஏற்க முடியாது" என்றது. உடனே நரி காலையில் நடந்த சம்பவத்தைக் கூறி சிங்கமே என்னைக் பார்த்து பயந்து சென்றது" என்றது. கூட்டத்தில் இருந்த மான் ஒன்று, "சிங்கத்தை உன் முன் மண்டியிடச் சொல் பிறகு உன்னை இந்தக் காட்டுக்கு ராஜா வாக்குகிறோம்" என்றது.

அடுத்த நாள் நரி அந்தச் சிங்கத்தை தேடிச் சென்றது. செல்லும் வழியில் சிங்கம் தன்னுடைய பாதையை நோக்கி வருவதைக் கண்டு நரி கர்வத்துடன் நின்றது.

சிங்கத்தை பார்த்து, "என் முன்னால் மண்டியிடு" என்று நரி நக்கலாகக் கோரியது. சிங்கமோ மிகவும் கோபம் கொண்டு தரக்குறைவாகப் பேசிய நரியைப் பார்த்து, "உன்னை மன்னித்து விடுகிறேன் உடனே இங்கிருந்து செல்" என்றது.

நரியோ சிங்கம் தன்னைக் கண்டு பயந்துவிட்டது என நினைத்து "முடியாது" என்று பதில் கூறிக் கொண்டே தன்னுடைய நிழலைப் பார்த்தது. அது மதியநேரம் என்பதால் நிழல் சிறியளவில் இருந்தது. சூரிய ஒளியில் தான் தனது நிழல் பெரியதாக தெரிந்தது என்பதை உணர்ந்தது. அதற்குள் சிங்கம் நரியை ஒரே அடியில் கொன்றது.

**நீதி: முட்டாள்தனமாக செயற்பட்டால் இழப்பும் பெரிதாக இருக்கும்.**



**மாணவர்களே!** நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்..

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555
Sanjeevi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்தும் அறியாமலும்

○ சுழியன்

# 'ஒப்பிரேஷன் அவுட்' நடந்தது எப்படி?



மார்ச் 3 ஆம் திகதி அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி செயலகத்தில் இருந்து அவசர தொலைபேசி அழைப்பொன்று பறந்தது.

ஜனாதிபதி செயலகத்தில் விசேட கூட்டமொன்று நடைபெற இருப்பதால் கொழும்பு மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் தற்போது இருப்பவர்கள் உடன் வருமாறு தகவல் வழங்கப்பட்டுள்ளது. இதனையடுத்து என்ன நடக்குமோ, ஏது நடக்குமோ என அமைச்சர்களும், ஏனையோரும் பதறியடித்துக்கொண்டு ஜனாதிபதி செயலகத்துக்கு வந்தனர்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பிரதமர் மஹிந்த ராஜபக்ச, நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச, அமைச்சர் நாமல் ராஜபக்ச ஆகியோரின் பங்கேற்புடன் நடைபெற்ற இந்த அவசரக் கூட்டத்தில் 13 அமைச்சர்கள், 9 இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் 10 க்கும் மேற்பட்ட எம்.பிக்கள் பங்கேற்றனர்.

கூட்டத்தின் ஆரம்பத்திலேயே மார்ச் 02 ஆம் திகதி அரச பங்காளிக்கட்சிகளின் தலைவர்களால் நடத்தப்பட்ட கூட்டம் பற்றியும், அதன்போது முன்வைக்கப்பட்ட யோசனைகள் சம்பந்தமாகவும் ஆராயப்பட்டது. இதன்போது மொட்டுக் கட்சியின் செயலாளர் சாகர காரியவசம், " அமைச்சரவை மற்றும் ஆளுங்கட்சி கூட்டத்தில் மௌனமாக இருக்கின்றனர். வெளியில் இன்று வீரர்களைப்போல கதைக்கின்றனர். அமைச்சரே, எரிபொருள் இல்லை எனக் கூறும்போது, அது அரசுக்குப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். அவர்கள் தொடர்ந்தும் கூட்டுப் பொறுப்பை மீறுகின்றனர். எனவே, கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்" என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

"ஆம். அமைச்சரவையில் எடுக்கப்பட்ட முடிவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்கின்றனர். அவ்வாறு வழக்குத் தாக்கல் செய்தவர்கள் அமைச்சரவையிலும் இடம்பெறும் ஒரே நாடு இலங்கைதான்" என ஜயந்த கெட்டகொட எம்.பி. சுட்டிக்காட்டியுள்ளார்.

" விமல், கம்மன்பில போன்றவர்கள் எந்தநேரத்திலும் காலைவாருவார்கள். அவர்களின் நோக்கம் என்பது வேறு. எனவே, இவர்களை அரசிலிருந்து விலக்க வேண்டும்." என்று இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவும் வலியுறுத்தியுள்ளார்.

இதனையடுத்து கருத்து வெளியிட்ட நிதி அமைச்சர் பஸில்,

" அவர்கள் என்னைக் கடுமையாக தாக்குகின்றனர். அவர்களின் ஊழல்கள் எனக்குத் தெரியும். ஆனால் பொதுவெளியில் அநாகரீகமாக நடந்து கொள்ள நான் விரும்பவில்லை. கம்மன்பில உரிய நேரத்தில் 'இன்வொயிஸ்'களை வழங்குவதில்லை. அதனால்தான் எண்ணெய் வழங்குவதில் தாமதம். அவர்கள் திட்டமிட்ட அடிப்படையில் இதனைச் செய்கின்றனர்." என்று தனது உள்ளக் குமுறலை வெளியிட்டார்

இதனையடுத்து இருவரையும் அமைச்சரவையில் இருந்து நீக்கிவிட்டு, புதியவர்களை நியமிக்கும் முடிவை ஜனாதிபதி எடுத்தார்.

" எரிபொருள் நெருக்கடி பற்றி கலந்துரையாடவே நான் கூட்டமொன்றை அவசரமாக நடத்தினேன். ஆனால் அதில் பங்கேற்ற வலுசக்தி அமைச்சர் கம்மன்பில, வேறு கூட்டம் இருப்பதாக கூறிவிட்டு, இடைநடுவில் சென்றுவிட்டார். இறுதியில் மணமகன் இல்லாமல் திருமணம் நடத்துவதுபோல, கூட்டத்தை நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டது." என்ற விடயத்தையும் இதன்போது ஜனாதிபதி நினைவூட்டியுள்ளார்.

கூட்டம் முடிவடைந்த கையோடு வலுசக்தி அமைச்சராக காமினி லொக்குகேயும், மின்சக்தி அமைச்சராக பவித்ராவும் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர். அதன்பிறகு கைத்தொழில் அமைச்சராக எஸ்.பி திஸாநாயக்க நியமிக்கப்பட்டார்.

# பஸிலின் பயணம் பிற்போனது ஏன்?



நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச பெப்ரவரி 25 ஆம் திகதி டில்லி பறக்கத் தயார் நிலையிலேயே இருந்துள்ளார். அவருடன் நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகலவும் உடன் செல்லவிருந்தார்.

இதற்கான சமிக்ஞைகளை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் முன்கூட்டியே வெளிப்படுத்தியிருந்தார். எனினும், இறுதி நேரத்தில் பஸிலின் பயணம் பிற்போடப்பட்டது. இது தொடர்பில் இராஜதந்திர வட்டாரங்களில் தற்போது பல கோணங்களில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையின் அந்நியச் செலாவணி கையிருப்பு ஆட்டம் கண்டுள்ள நிலையில் கடும் பொருளாதார நெருக்கடியும் ஏற்பட்டுள்ளதால் அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதில்கூட ஆயிரம் முட்டுக்கட்டைகள். டொலருக்காக எல்லாப் பக்கமும் கையேந்த வேண்டிய கையறு நிலைவேறு.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே இந்தியாவிடமிருந்து பெருந்தொகை கடனை பெறுவதற்கு இலங்கை அரசு உத்தேசித்தது. நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சே தானே நேரில் இந்தியா சென்று அந்நாட்டு நிதி அமைச்சர் உட்பட பல தரப்புகளுடன் பேச்சு வார்த்தை நடத்தினார். இதன் பிரதிபலனாக கடன் கொடுப்பதற்கான கதவு திறக்கப்பட்டது. ஆனாலும் சில நிபந்தனைகளும் முன்வைக்கப்பட்டன.

இதற்கமைய கொடுக்கல், வாங்கல்களுக்கான ஒப்பந்தங்கள் தயாரான பிறகு, கடன் தொகை காசாகவும், பொருளாகவும் மாறும் என இந்தியத் தரப்பில் உறுதியளிக்கப்பட்டது. பஸிலும் நம்பிக்கையுடன் நாடு திரும்பினார். மேற்படி கடன் ஒப்பந்தங்களை இறுதிப்படுத்துவதற்காக பெப்ரவரி 25 ஆம் திகதி மீண்டும் டில்லி செல்ல திட்டம் வகுத்தார். எனினும், கடன்தொகையை பெறுவதற்காக செய்ய வேண்டிய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான ஒப்பந்தங்களை இலங்கை உரிய வகையில் இறுதிப்படுத்தாததால் பஸில் டில்லி வருவதை இந்தியத் தரப்பு விரும்பவில்லை இந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டே பஸிலின் பயணம் திடீரென பிற்போடப்பட்டதாம்.

# இலங்கையின் நம்பிக்கை நாமல்!



ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் காலம் இருக்கின்றது. இருந்தாலும் அந்தத்தேர்தலை இலக்குவைத்து முன்கூட்டியே சில நகர்வுகளை பிரதான கட்சிகள் - வேட்பாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

2024 ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து பஸில் ராஜபக்ச தனது ஆட்டத்தை அநுராதபுரம் கூட்டம் ஊடாக ஆரம்பித்துவிட்டார் எனக் கூறப்படுகின்றது.

மறுபுறத்தில் சஜித், சம்பிக்க, பொன்சேகா மற்றும் கருஜயசூரிய போன்ற முக்கியமான அரசியல் பிரமுகர்களும் முன்கூட்டியே, திரைமறைவில் திட்டங்களை வகுத்துவருவதால், கொழும்பு அரசியல் விரைவில் களைகட்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

அதுமட்டுமல்ல கட்சிதாவுதல், காலைவாருதல், கழுத்தறுப்பு செய்தல், குதிரைப்பேரம் என சந்தர்ப்பவாத அரசியலுக்கே உரித்தான அத்தனை அம்சங்களும் இனியே அரங்கேறுமென ஆருடம் கூறப்பட்டுள்ளது.

பங்காளிகளை பந்தாடிவிட்டு, தனிவழி பயணத்துக்கு தயாராகும் பஸிலின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு, பலமான வேட்பாளரைக் களமிறக்க விமல், கம்மன்பில, வாசு உள்ளிட்டவர்கள் திட்டம் தீட்டிவருகின்றனராம். அரசியல் களத்தில் நன்மதிப்பைப் பெற்ற அமைச்சர் டலஸ் அழகப்பெருமவுக்கு ஜனாதிபதி ஆடை அணிவித்து அழகுப்படுத்திப் பார்ப்பதே பங்காளிகளின் ஆசையாம்.

இது மெய்யா, பொய்யா என தேடுதல் நடத்துவதைவிடவும், இப்படியொரு வியூகமும் உள்ளது என்பதை முன்கூட்டியே உங்களுக்கு கூறிவைக்க விரும்புகின்றோம். கம்மன்பில, மற்றும் விமல் தரப்பு அவசரமாக வெளியேற்றப்பட்டதற்கு இதுவும் ஓர் காரணமாக இருக்கலாம் என சொல்லப்படுகின்றது.

மறுபுறத்தில் 2024 ஜனாதிபதித் தேர்தலில் நாமலை களமிறக்குவதற்கான திட்டமும் ராஜபக்சக்களிடம் உள்ளதாம்.

குறிப்பாக நாமல் ராஜபக்சவை முன்னிலைப்படுத்திய பெருமெடுப்பிலான பரப்புரை வேலைத்திட்டமொன்று மார்ச் 25 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப் படவுள்ளது. இதன் ஆரம்ப நிகழ்வு காலி மண்ணில் இடம்பெறவுள்ளது. 'இலங்கையின் நம்பிக்கை' என்ற மகுடத்தின் கீழ்தான் நாமலின் ஆட்டத்துக்கான தொடக்கம் அமையவுள்ளது. இராஜாங்க அமைச்சுகளின் வேலைத்திட்டம் தொடர்பில் நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்தல் என்ற போர்வையிலேயே இந்த அரசியல் நகர்வு மக்கள் மத்தியில் அரங்கேற்றப்படவுள்ளதாம். நாமல் ஜனாதிபதியானால், மஹிந்தானந்த அளுத்கமகேவை பிரதமராக்க வேண்டும் என்ற திட்டமும் மஹிந்தவிடம் உள்ளதாம். இது தொடர்பில் அவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்.

# எதிர்ப்பு



ஐக்கிய தேசியக்கட்சியின் பெரும் எதிர்ப்பு நடவடிக்கையொன்று இம்மாதம் 30 ஆம் திகதி முன்னெடுக்கப்படவுள்ளது.

அரசுக்கு எதிராகவே இந்தப்போராட்டம் அமையவுள்ளது. ஐக்கிய தேசியக்கட்சி பொதுத்தேர்தலில் தோல்வியடைந்த பின்னர், அந்தக் கட்சியால் நடத்தப்படும் பிரமாண்டக் கூட்டமாக இது அமையும் என நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி

தொடர் கதை

# மானத்தி

24

கருணை ரவி



சரியாக இரண்டு மணிக்கு பூபாலு பஸ்ஸைக் கொண்டு வந்தான். பஸ்ஸில் ஆறேழு சனங்கள் இருந்தனர். முன்பு என்றால் சனங்கள் நிறைந்திருப்பார்கள். இருக்க சீற்றும் கிடைக்காது. கண்ணிவெடி வெடித்ததால் சனங்கள் குறைந்து விட்டனர். பூங்கொடி ஏறி முன் சீற்றில் இருந்தாள். பஸ்ஸில் இருந்தவர்கள் இறங்கி கோயிலைக் கும்பிட்டு வந்தார்கள். பின்சீற்றில் இருந்த ஒருத்தி கச்சான் பை ஒன்றை பூபாலுக்கு கொடுத்தாள். பூபாலு அஞ்சாறு கச்சானை உடைத்து வாய்க்குள் போட்டான். பூபாலு கச்சான் சரையை முடித்துக்கொண்டிருந்தான். பூங்கொடிக்கு எரிச்சலாக இருந்தது. கச்சான் கொடுத்த பெண்ணைத் திரும்பிப் பார்த்தாள். அவள் சைற் கண்ணடியில் சாய்ந்துகொண்டு முகப்பருக் குற்றிக் கொண்டிருந்தாள். பூங்கொடிக்கு ஊர் நிலைவரங்களை அறிய வேணும் போலிருந்தது. அவள் வீட்டுக்குப் பக்கத்தில் தான் ஆலடி. ஆலடி அவள் வீட்டுக்கு கூப்பிடுதூரம். ஆலடியைச் சுற்றி எருக்கலைகள். அதுக்குள் மறைந்திருந்து கண்ணிவெடியை வெடிக்க வைத்திருப்பார்கள். பாட்டியிடம் கச்சான் வாங்கியவன்தான் கண்ணிவெடியை வெடிக்க வைத்துவிட்டு வந்திருப்பதாக நினைத்தாள். வீட்டில் நித்தி தனிய இருந்தான். வெடிக்கு என்ன செய்தான்? ஓடினானா? அல்லது ஓடாமல் இருந்தானா? அவர்கள் சுற்றிவளைத்து ஊரவர்களுக்கு அடித்தார்களா? வதிரி இரும்பு மதவடியில் கண்ணிவெடி வெடித்தபோது அவர்கள் ஒன்றும் செய்யவில்லை. பருத்தித்துறையில் இருந்து வந்தவர்கள் வேலிகளைக் கொளுத்தி



னார்கள். வீடுகளை உடைத்தார்கள். தோட்டத்தில்நின்றவர்களை சுட்டுக்கொன்றார்கள். அதுமாதிரி திரும்பிவந்து செய்வார்களா? அவள் அதற்கிடையில் வீட்டுக்குப் போகவேணும் என நினைத்தாள்.

பூபாலு பஸ்ஸை எடுத்தான். சைற் கண்ணாடியால் ஆட்களைப் பார்த்தான். கச்சான் கொடுத்தவள் பூபாலுவைப் பார்த்துச் சிரித்தாள். காலையில் ஊர்ந்ததைவிட பஸ் கொஞ்சம் வேகமாக ஓடியது. தெருக்களில் கொஞ்சச்சனங்கள் போய்க்கொண்டிருந்தார்கள். பஸ்ஸை எவரும் மறிக்கவில்லை. சனங்கள் மறிக்காதபடியால் தெருக்களில் ஏதும் பிரச்சனையோ என நினைத்தாள்.

பஸ்ஸில் இருந்தவர்களில் அவள் மட்டும்தான் சலனப்பட்டுக் கொண்டிருந்தாள். மற்றவர்கள் கலவரமற்று இருந்தார்கள். சிலர் சைற் கண்ணாடிகளை இழுத்து காற்றை அனுபவித்தார்கள். பூபாலு பாட்டு எதனையும் போடவில்லை. பஸ் ஊமையாய் போனது. பஸ் கடற் கரையால் போகாமல் வல்லை வெளியால் போகிறது. கடற்கரை றோட்டில் ஏதும் பிரச்சினைகள் என நினைத்தாள். வீதிகளில் ஏதும் அசம்பாவிதங்கள் நடந்தால் வாகனங்கள் பாதை மாறிப் போகும். கடற்கரையில் கண்ணிவெடி வெடித்ததால், றோட்டில் கிடங்குகள் இருந்தால் வாகனங்கள் போகமாட்டாது. மண்டான் உப்பு வெளியில் கண்ணிவெடிவெடித்து கிணறளவுக்கு கிடங்கு இருந்தது. அதேமாதிரி கிடங்காகத்தான் ஆலடியில் இருக்கவேணும். பஸ் வல்லைச்சந்தியை தாண்டுகிறது. வல்லை வெளியைப் பார்த்தாள். கனகாலத்துக்குப்பிறகு அவள் வல்லையைப் பார்க்கின்றாள். அப்புத்துரையை சுட்டபோது கந்தவிக்கிழவன் அவளைக் கூட்டிக் கொண்டு வந்து செத்துக்கிடந்த இடத்தைக் காட்டினார். அப்புத்துரை கொலை அப்ப பரபரப்பாக இருந்தது. சிறைச் சாலை யில் இருந்து பருத்தித்துறை கோர்ட்டுக்கு கொண்டு வந்து, வழக்கு முடிந்தவுடன் சிறைச்சாலை பஸ்ஸில் அப்புத்துரையைக் கொண்டு போக, வல்லையில் மறைந்திருந்து பஸ் ரயருக்குச் சுட்டு பஸ்ஸை நிறுத்தி விட்டு, அப்புத்துரையை கலைத்து வயல்வெளியில் சுட்டார்கள்.

அப்புத்துரையைப் பார்க்க நிறையச்சனங்கள் வயல் வெளிகளில். அப்ப இருந்த அதே பயம் இப்பவும் அவளுக்கு இருக்கிறது. வல்லை வெளியில் போகிறவர்கள் பயமில்லாமல் செல்ல மாட்டார்கள். வல்லை முனியப்பர் என்றால் முனிக்குப் பயப்படுவார்கள். திருடர் களுக்குப் பயப்படுவார்கள். விபத்துக்குப் பயப்படுவார்கள். வல்லைச் சுடலைக்குப் பயப்படுவார்கள்.

> வல்லையில் மறைந்திருந்து பஸ் ரயருக்குச் சுட்டு பஸ்ஸை நிறுத்திவிட்டு. அப்புத்துரையை கலைத்து வயல்வெளியில் சுட்டார்கள். அப்புத்துரையைப் பார்க்க நிறையச்சனங்கள் வயல் வெளிகளில். அப்ப இருந்த அதே பயம் இப்பவும் அவளுக்கு இருக்கிறது. வல்லை வெளியில் போகிறவர்கள் பயமில்லாமல் செல்லமாட்டார்கள்.

பஸ் வல்லையைத் தாண்டியதும் ஊர்மனைகள் வந்தன. அவளில் ஒட்டியிருந்த பயத்தை ஊர்கள் கிழித்தெறிந்தன. தெருவில் இரண்டு சைக்கிள்கள் போய்க்கொண்டிருந்தன. சைக்கிளுக்கு முன்னால் இராணுவ கவசவாகனங்கள் வரிசையில் வந்துகொண்டிருந்தன. ஊர்மனைகளைகொளுத்தி விட்டு வருகிறார்களா? ஊரவர்களை பிடித்துக்கொண்டு வருகிறார்களா? பஸ்ஸை விலத்திச் செல்ல ஒவ்வொரு வாகனங்களையும் பார்த்தாள். உள்ளுக்கு இருப்பவர்கள் எவரையும் அவளால் பார்க்க முடிய வில்லை.

தொடர் வாகனங்கள் கடந்ததும் அவளுக்கு நிம்மதியாக இருந்தது. வாகனங்கள் எட்டத்தில் வரவே கண்ணிவெடியேதும் வெடிக்கக்கூடாதென கடவுளை நினைத்தாள். அவள் மட்டுமல்ல அந்த பஸ்ஸில் இருப்பவர்கள் எல்லோரும் அப்படித்தான் நினைத்திருப்பார்கள். இராணுவ வாகனங்கள் தெருவில் வந்தால் எங்கையாவது கண்ணிவெடிகளில் அகப்படும்.

சரியாக மூன்று மணிக்கு பஸ் பருத்தித்துறையில் நின்றது. உடனே இறங்கி கடற்கரை பஸ்ஸில் ஏறினாள். கடற்கரையால் போகும் முதல் பஸ் அவள் ஏறிய பஸ் தான். சரியாக பன்னிரண்டு பத்துக்கு கண்ணிவெடி வெடித்தது. ஒன்றரை மணித்தியாலமாக இராணுவத்தினர் வெடித்த இடத்தில் நின்று இப்பதான் போனார்கள் என ரிக்கற் போடுபவன் சொன்னான். அவனும் கண்ணிவெடி ஆலடியில் வெடித்ததாகச் சொன்னான்.

அவள் பஸ்ஸில் இருப்பவர்களைப் பார்த்தாள். எல்லோரும் புதியவர்களாக இருந்தார்கள். ஊரவர்கள் எவருமில்லை. காலையில் என்றால் அந்தோனி சந்தைக்கு மீன் கொண்டுவருவான். பிலிப்பு மரக்கறிகள் கொண்டு வருவான். ஜோசப் தேங்காய் கொண்டுவருவான். யாராவது ஒருவரின் சைக்கிளில் அவள் போவாள். மத்தியான நேரம் ஒருத்தரும் வரமாட்டார்கள்.

அவளுக்கு பசி குடலை வறுத்தது. காலையில் குடித்த தேநீர் மட்டும்தான். அவித்த புட்டையும் சாப்பிடாமல் வந்தாள். புட்டை அடுப்புப் புகட்டில் மூடிவிட்டு வந்தாள். இப்ப காய்ந்திருக்கும். எறும்புகள் மொய்த்திருக்கும். இனிப்போய் சமைக்க அவளால் ஏலாமல் இருந்தது. கிடக்கிற புட்டை தேத்தண்ணியுடன் சாப்பிடவேணும் என நினைத்தாள். நித்திக்கும் நிருபனுக்கும் கனகம் சாப்பாடு கொடுத்திருப்பாள். மாட்டை நினைத்து கவலைப்பட்டாள். வாறமாதம் கன்று போடும்.

பஸ் வெளிக்கிட்டது. வெளிக்கிடும்போது வெளியில் நின்ற ஆண்கள் நிறையப்பேர் ஏறினார்கள். பஸ் இதுவரைக்கும் ஓடாமல் இருந்ததால் பயணிகள் கூடிவிட்டார்கள். ட்றைவர் புட்போட்டில் ஒருவரையும் நிற்கவேண்டாம் என்று சொன்னான். ரிக்கற் போடுபவன் ட்றைவருக்குச் சொன்னான் இனி சனங்களை ஏத்தாமல் போகச் சொல்லி. சன நெரிசலுக்கு அவளுக்கு பஸ் எங்கு போகிறது என்று தெரியவில்லை. சரியாக பதினைந்து நிமிடங்களில் ரிக்கற் போடுபவன் சொன்னான் ஆலடியில் இறங்கிறவர்களை முன்னுக்கு வரச்சொல்லி.

அவள் எழும்பி வாசலுக்குப்போக இரண்டு நிமிடங்கள் ஆனது. கால்கள் வைக்க இடமில்லை. கால்களுக்கு மேல் கால்களை வைத்து அசைந்தாள். பஸ் நின்றது. இறங்கியதும் தெருவைப்பார்த்தாள். தெருக்களில் எவருமில்லை. தனியப் போக அவளுக்குப் பயமாக இருந்தது. எட்டிமிதித்து நடந்து, வீட்டைப்பார்த்தாள். வீட்டைக் காணவில்லை.

(வருவாள்)



நீங்களும் எழுதலாம்

உங்கள் படைப்புக்களும் சஞ்சீவியில் பிரசுரமாக வேண்டுமா?

எதுவானாலும் அனுப்பி வையுங்கள்.
தரமானவற்றை பிரசுரிக்க காத்திருக்கிறோம்.
உங்கள் படைப்புக்களை அனுப்ப வேண்டிய முகவரி

சஞ்சீவி
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

0773165555
Sanjeevi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பகுதி 2

# பயணங்கள் முடிவதில்லை

தே. கோகிலவாணி

உலகத்தரம் வாய்ந்த, நானூறு வருடப் பழமை மிக்க, மிகப்பெரிய ஜப்பானிய விவசாயப் பல்கலைக்கழகமான நொடாய், செற்றகாயாவில் நான் தங்கவிருந்த வீட்டிற்கு அண்மையிலேயே அமைந்திருந்தது. ஆகவே, அன்றைய மாலை வேளையை அங்கு செலவிடுவது பயனுள்ளதெனத் தீர்மானித்தோம். ஜப்பானின் நவீன தொழிநுட்ப, அறிவியலின் அசுரவளர்ச்சியும் பங்களிப்பும் ஆச்சரியம் அளிக்கும் வகையில் அதன் ஒவ்வொரு துறையிலும் விரவிக்கிடக்கின்றது. எனினும் ஒரு தொழிற்சாலையைப் பார்வையிடுவதைவிட, விவசாய நடவடிக்கைகளில் அந்நாட்டின் முன்னேற்றகரமான தொழிநுட்பம் (Advanced tecnology) எவ்வாறு உள்வாங்கப்படுகின்றது, என்பதைப் பார்த்துப் புரிந்து கொள்வது என் போன்றவர்களுக்கு இலகுவானது என முடிவு செய்தோம்.

முதலிலே, பல்கலைக்கழகத்தின் மிக நவீனமான கேட்போர் கூடங்கள், விரிவுரை மண்டபங்கள் ஆய்வுகூடங்கள், ஓய்வறைகள் அவை ஒவ்வொன்றோடும் இணைந்த சிறிய திரையரங்குகள் இவற்றோடு விளையாட்டு, கலை, கலாசார மையங்கள் போன்ற பல்வேறு அமைப்புகளையும், அவற்றின் சிறப்பம்சங்களையும் பார்வையிட்டோம். முக்கியமாக, பல்கலைக்கழகத்தோடு இணைந்த, அதற்குச்சொந்தமான விவசாயப்பண்ணைகளைக் காண்பதே எங்கள் நோக்கம்; எனவே, சில ஜப்பானிய மாணவர்களது வழிகாட்டலோடு அங்கு விரைந்தோம்.

ஜப்பானிய விவசாயப் பல்கலைக்கழகம் என்பதால், அதன் பண்ணைகள் மிகநவீனமாக அமைந்திருக்கும் என்பதே எங்கள் எதிர்பார்ப்பு. ஆனால் அதற்கும் மேலாக, ஜப்பானில் உள்ள விவசாய நிலங்கள் தற்போது, விவசாய தொழிநுட்ப மையங்களாகவே மாற்றப்பட்டு வருவதன் வெளிப்பாடாகவே அந்தப் பண்ணைகள் காணப்பட்டன. பயிரிடுகை, பாதுகாப்பு, பேணுகை, அறுவடையென விவசாயத்தின் ஒவ்வோரு பிரிவுகளிலும் துல்லியமான ஆய்வுகளின் வெளிப்பாடாகச் சொல்லிமாளாத, புதிய நுட்பங்கள் நிறைந்து காணப்பட்டன. அனைத்தையும் வியக்கவும் விபரிக்கவும் தனியான கட்டுரை எழுதவேண்டும். பயணக் கட்டுரை அதற்குப் பொருத்தமானதல்ல. ஆனால் என்னை மிகவும் கவர்ந்த இரண்டு விடயங்களை மட்டும் இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும். விவசாய நடவடிக்கைகளில் இயந்திர மனிதர்களைப் பயன்படுத்துவது அதிலொன்று. சலிப்பில்லை, களைப்பில்லை வருடம் முழுவதும் இருபத்துநான்கு மணிநேர உழைப்பு. நேரே பார்க்கையில் கொஞ்சம் வேடிக்கை போல இருப்பினும் ஓய்வின்றி உழைப்பினை நல்க வேண்டிய விவசாயத் துறைக்கு இவர்களின் பயன்பாடு, மிகப் பெரிய வரப்பிரசாதம். விதந்துரைக்கத்தக்க சிறப்பான நீர்மேலாண்மை இன்னொன்று. பயிரின் தேவைக்கு மேலதிகமாக ஒரு துளி நீரையும் வீணாக்காத நீர்ச்சிக்கனம். நீரைச் சுத்திகரித்து மீள்சுழற்சி செய்து பயன்படுத்தல், நவீன பசுமைக் குடில்கள், நிலத்தைத் துளையிட்டு வேருக்கு மட்டும் நீர்பாய்ச்சுதல், சொட்டு நீர்ப்பாசனம் என்பவை மிகச்சில உதாரணங்கள்.

ஜப்பான், இடைவிடாத இயற்கை அனர்த்தங்கள், வரலாற்றுச் சோகங்கள், பெரும்பாலும், மலைப்பிரதேசங்களைக் கொண்ட குறைவான நிலப்பரப்பு என, விவசாயத்துக்குப் பாதகமான காரணிகளை அதிகம் கொண்டுள்ளது. எனினும் நாட்டு மக்களின் உணவுத்தேவையில் கணிசமான பங்கினைப் பூர்த்தி செய்வதற்கு அடிப்படையாக விளங்குவது, அவர்கள் விவசாயத் தொழினுட்பத்தைத் திறம்படக் கையாள்வதே என்பதிற் சந்தேகமில்லை.

என்னைப் பொறுத்தவரையில், ஜப்பானில் குளிர் கடுமையாக இருந்தது. ஆனால் உண்மையில், அந்தக் காலகட்டம் குளிர்காலம் படிப்படியாக மறைந்து, கோடையின் ஆரம்பமான, வசந்தகாலம் மலரும் வேளை. குறிப்பாக, மாசிமாத நடுப்பகுதியினைத் தொடர்ந்து வருகின்ற பருவகாலமிது. குளிர் காலத்தோடு "பழையன கழியப் புதியன புகும்" காலமாக ஜப்பானியர்கள் இக்காலத்தைக் கருதுகிறார்கள். விவசாயம் முதலாக, பல்வேறுதொழில்கள் இவ்வேளையில் ஆரம்பிக்கப்படுகின்றன. இத்தகைய புதிய ஆரம்பத்தின் நல்லதொரு அடையாளமாக, ஜப்பானின் தேசியமலர்களாக மதிக்கபடும் சகுறா மலர்கள் (Cherry blossoms) இந்தக்காலகட்டத்தில் நாடு முழுவதும் மலர்ந்து சிரிக்கின்றன.

ஒரு சுபமான ஆரம்பமாக மட்டுமல்ல, அழகு, நம்பிக்கை, மகிழ்ச்சி என்பவற்றின் குறியீடாகவும்கூட இம்மலர்களின் மலர்ச்சி அவர்களுக்கு அமைகிறது. மேலும் அழகிற்கு அழகு செய்வன போன்ற இம்மலர்களின் வாழ்நாள், பத்துநாட்கள் மட்டுமே என்பதும் ஓர் ஆச்சரியமான தகவல்; இதற்குள் அரும்பாகி, மொட்டாகிப், பூவாகி, மனிதரை மகிழ்வித்து உதிர்ந்து, சருகாகி என எல்லாம் முடிந்துவிடும். இதனால், பௌத்த மதவிழுமியங்களைப் பின்பற்றும் ஜப்பானியர்கள், மனித வாழ்வின் நிலையாமையினையும் கூட இவை குறிப்பதாகக் கருதுகின்றனர்.



ஜப்பானின் சகுறா மலர்க்காடுகளைப் படங்களிற் பார்த்து வியந்திருக்கிறேன். இவற்றை நேரிற் பார்த்து, அனுபவித்து, மகிழும் அரிய வாய்ப்புக் கிட்டும் என ஒரு போதும் எண்ணியதில்லை. அதுவும் அவை பூத்துக் குலுங்கும் பருவத்தில் வரக்கிடைத்தது ஆச்சரியமே. ஜப்பானின் அனைத்துத் தீவுகளிலும் ஒரே காலத்திற் பல வண்ணங்களில் இப்பூக்கள் பூக்கின்றன. எனினும் ஊதா (நாவல்) நிறப் பூக்களே பரவலாகக் காணப்படும். இந்த ஊதாப்பூக்களைக் காணவேண்டும், என்பதே எனது ஆவலும்.

அன்றையநாள், மலர்க்காட்சி காணும் ஆவலில் பரபரப்பாக விடிந்தது. அதிகாலை 05 மணிக்கே விழித்துத் தயாராகி, 06மணிப் புகையிரதத்துக்காக விரைந்தோம். ஜப்பானிற் காலை ஐந்துமணி எனில் சிறீலங்காவில் அப்போது நள்ளிரவு, 01.30. மூன்றரை மணிநேர வித்தியாசம். ரோக்கியோவிலிருந்து 1.30 மணிநேரப்பயணத்தைத் தொடர்ந்து, 20 நிமிடப் பேருந்துப் பயணத்தில் சகுறா மலர்வனத்தை அடைந்தோம். வியப்பும் குதூகலமும் மேலிட ஒரே உற்சாகம். மலர்க்கூட்டமல்ல அது மலர்க்கொள்ளை. சகுறாமரங்கள் மிக உயரமானவை அல்ல, நடுத்தரமானவை. ஆனால் பூத்திருக்கையில் அடிமரத்தைத் தவிர அத்தனையும் பூக்களாகவே காட்சி தரும் அதனாலேயே, அவை அத்தனை அழகாகக்காட்சியளிக்கின்றன. மீண்டும் கிடைக்காத ஒரு விருந்தை, வாழ்நாள் முழுவதற்கு மாகச் சுவைப்பது போல், சகுறாமலர்களின் அழகை அனுபவித்து மகிழ்ந்தோம். கையோடு எடுத்துச்சென்ற மதிய உணவோடு அன்றைய நாளைப் பூக்களு டனேயே களித்தோம்.

அந்தப்பிரதேசத்தின் இயற்கை அழகையும் அமைதியையும் பேணுதற்காக, அங்கு கடைகள் எவையும் அமைப்பதற்கான அனுமதி வழங்கப்படுவதில்லை. கழிவுகளோ குப்பைகளோ இடுவதற்கான குப்பைத் தொட்டிகளும் கிடையாது. ஆனாற் பூங்கா மிகவும் சுத்தமாகக் காணப்பட்டது. அவரவர் குப்பைகளை அவரவர் எடுத்துச் செல்லவேண்டும். இது நாடு முழுவதற்கும் பொதுவான நடைமுறை. உணவு விடுதிகள் போன்ற சில முக்கியமான இடங்களைத் தவிர குப்பைத் தொட்டிகள் காணப்படமாட்டாது. மக்களும் இந்த ஒழுங்குகளை சரியாகப் பின்பற்றுவதை, பொது இடங்களின் தூய்மை புலப்படுத்துகிறது. ஆங்காங்கு குப்பை போடும் ஒழுங்கு காணப்பட்டாலும், பொது இடங்களை அசுத்தமாக்கும் மக்களையே பார்த்துப் பழகிய என் போன்றவர்களுக்கு இதுவும் கூட வியப்பே.

*(இன்னும் வரும்)*

> குளிர்காலம் படிப்படியாக மறைந்து, கோடையின் ஆரம்பமான, வசந்தகாலம் மலரும் வேளை குறிப்பாக, மாசிமாத நடுப்பகுதியினைத் தொடர்ந்து வரும் பருவம்

> "பழையன கழியப் புதியன புகும்" காலமாக ஜப்பானியர்கள் இக்காலத்தைக் கருதுகிறார்கள்.

> இத்தகைய புதிய ஆரம்பத்தின் நல்லதொரு அடையாளமாக, ஜப்பானின் தேசியமலர்களாக மதிக்கப் படும் சகுறா மலர்கள் (Cherry blossoms] இந்தக்காலகட்டத்தில் நாடு முழுவதும் மலர்ந்து சிரிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோமாளியின் கூத்து!

ஆர்.பிரகாஷ்

அழகாகச் செய்யப்பட்ட ஒரு மாலையை ஒரு குரங்கிடம் கொடுத்துப்பாருங்கள். அந்த மாலையின் பெறுமதியை - கனதியை - அந்தக் குரங்கு அறியாது. தனக்கே உரித்தான குரங்குச் சேட்டையால் அந்த மாலையை அது பாடாய்ப்படுத்தி விடும். பிய்த்து எறிந்துவிடும். பொறுப்புக்கள் மற்றும் பதவிகள் என்பனவும் அவ்வாறுதான். உரியவர்களிடம் உரிய பொறுப்புக்கள் ஒப்படைக்கப்படவேண்டும். தகுதியற்றவர்களிடம் வழங்கப்படும் பதவி கள் மற்றும் அதிகாரங்கள் கூட அதீத ஆபத்தை ஏற்படுத்தக் கூ டியவைதான். அவ்வாறான கோமாளிக் கூத்தொன்று தற்போது ஐரோப்பியாவின் கொல்லைப்புறத்தில் அரங்கேறிக் கொண்டிருக்கின்றது. அரங்கேற்றுபவர் உக்ரைனின் அ ஷெலன்ஸ்கி.



### போருக்கான காரணகர்த்தா

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்புக்குக் காரணம் ரஷ்ய அதிபர் புடின்தான். அவரின் இராணுவச் சிந்தனைதான் இந்த போர்ப் பதற்றத்துக்குக் காரணம் என்பது பொதுவான குற்றச்சாட்டாக இருக்கின்றது. குறிப்பாக சர்வதேச ஊடகங்கள் அத்தகைய குற்றச்சாட்டுக்களை கொஞ்சம் தாராளமாகவே முன்வைக்கின்றன. சர்வதேச ஊடகங்களின் அநேகமானவை அமெரிக்கா மற்றும் பிரிட்டனைத் தளமாகக்கொண்டு இயங்குபவை. அவற்றின் சிந்தனைகள் மற்றும் செய்தி அறிக்கையிடல்கள் அமெரிக்க மற்றும் மேற்கத்திய மனோபாவத்தில் இருந்துதான் வெளிப்படுகின்றனவே தவிர நடைமுறைச் சாத்தியத்தை எடுத்தியம்பவில்லை.

சோவியத் ஒன்றியத்தின் உடைவின் பின்னர், ரஷ்யாவை இராணுவ ரீதியாகப் பலமிழக்கச் செய்வதற்கு அமெரிக்கா மேற்கொண்ட வியூகங்கள் ஏராளம். அதன் ஒரு அங்கம்தான் உக்ரைனை நேட்டோவில் இணைக்கும் முயற்சி. அதற்குரிய சரியான நபர்தான் அமெரிக்காவின் செல்லப்பிள்ளையான இந்த ஷெலன்ஸ்கி. இன்னும் சொல்லப்போனால் இஸ்ரேலுக்கு ஒரு நெதன்யாகூபோல உக்ரைனுக்கு ஒரு ஷெலன்ஸ்கி. எதைச் செய்தால் போர் வெடிக்கும், எவ்வாறான வார்த்தைகள் புடினைக் கோபப்படுத்தும் என்ற 'ஸ்கிரிப்ட்' ஷெலன்ஸ்கியிடம் உள்ளது. அவர் அதைக் கனகச்சிதமாக வெளிப்படுத்தி வருகின்றார்.

### போரில் வலுக்கட்டாயமாக ஈடுபடுத்தப்பட்ட பொதுமக்கள்

போரின் முதல் இரண்டு நாள்களிலும் ரஷ்யப் படைகள் பெரும் முன்னேற்றத்தைக் கண்டன. மூன்றாம் நாளில் ஓர் அறிவிப்பு உக்ரைன் அரசிடம் இருந்து வந்தது. 18 வயதுக்கும் 60 வயதுக்கும் இடைப்பட்ட ஆண்கள் உக்ரைனை விட்டு வெளியேறத் தடை. அவர்கள் ரஷ்ய இராணுவத்துக்கு எதிராகப் போர் புரியவேண்டும் என்பதாக அமைந்தது அந்த 'கட்டாய' அறிவிப்பு. 18 ஆயிரம் இயந்திரத் துப்பாக்கிகள் பொதுமக்களின் கரங்களில் கொடுக்கப்பட்டன. கொடுக்கப்பட்ட என்பதைவிட திணிக்கப்பட்ட என்பதுதான் இங்கு பொருத்தமாக இருக்கும். இப்போது ரஷ்யப் படைகள் பதில் தாக்குதல் நடத்தினால் உயிரிழப்புக்கள் ஏற்படும். அந்த இறப்புக்கள் 'அப்பாவிப் பொதுமக்கள்' என்ற பெயரில் கணக்குக் காட்டப்

### கிளர்ச்சிக் குழுக்கள் தோன்ற வாய்ப்புக்கள்

அமெரிக்கா ஒரு நாட்டில் தன் ஆயுத விற்பனையை - ஆதிக்கத்தை - தலையீட்டை - ஏற்படுத்த வேண்டுமாயின் அந்த நாட்டில் உள்நாட்டுக் கலவரத்தை - கிளர்ச்சியை - ஆயுதக் குழுக்களை - உருவாக்கும். உக்ரைனிலும் அப்படியொரு நிலை ஏற்படுவதற்கு அதீத வாய்ப்புக்கள் இருக்கவே செய்கின்றன. சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டுள்ள கைதிகள் ரஷ்ய இராணுவத்துக்கு எதிராகப் போராட விரும்பினால் அவர்கள் உடனடியாக விடுவிக்கப்பட்டு அவர்களின் கரங்களில் ஆயுதங்கள் வழங்கப்படுகின்றன. இந்த நிலைமையானது ரஷ்யாவுடனான போரில் உடன்பாடுகள் எட்டப்பட்டு உக்ரைனில் தற்காலிக அமைதி திரும்பினாலும், உள்நாட்டில் கிளர்ச்சிக் குழுக்கள் தோன்றுவதற்குரிய வாய்ப்புக்களை ஏற்படுத்தும். பொதுமக்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் ஆயுதங்களும், கைதிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் ஆயுதங்களும் மிகப் பாரதூரமானவை. அபாயகரமான விளைவுகளையே அவை ஏற்படுத்தும். ஐ.எஸ்.ஐ.எஸ்., அல் குவைதா போன்று உக்ரைனிலும் பயங்கரவாதக் குழுக்கள் தோன்றவும் இந்த ஆயுதங்கள் வழிவகுக்கலாம். இதில் வேடிக்கை என்னவென்றால், இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்கு எதிராக பலஸ்தீனத்தில் ஆயுதமேந்தும் பொதுமக்களைப் பயங்கரவாதிகள் என்று சுட்டும் சர்வதேச ஊடகங்கள் ரஷ்யாவுக்கு எதிராக ஆயுதமேந்தும் பொதுமக்களைக் கிளர்ச்சியாளர்கள், வீரர்கள் என்கின்றன. (ஈழத்திலும் உரிமைக்காக ஆயுதமேந்தியவர்களைப் பயங்கரவாதிகள் என்று இதே மேற்குலகு தடைசெய்ததன் விளைவாகவே நாம் இன்று இப்படியொரு கையறு நிலையில் நிற்கிறோம் )இதன் பின்னால் உள்ள ஆபத்தை அவை சிந்திக்கவில்லை. ஆக, பலஸ்தீனர்களுக்கு ஓர் அளவீடு, உக்ரைனியர்களுக்கு ஓர் அளவீடு.

### உணர்ச்சிகரப் பேச்சால் முன்னெடுக்கப்படும் போர்



ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்குமான இந்த மோதலில், இராணுவத் தளபாடங்களை விடவும் பயங்கரமான ஓர் ஆயுதம் உண்டென்றால் அது ஷெலன்ஸ்கியின் உணர்ச்சிகரப் பேச்சுக்கள்தான். ஆரம்பத்தில் உக்ரைனின் இராணுவ நிலைகளே ரஷ்யாவால் இலக்கு வைக்கப்பட்டன. இந்தப் போரில் நேட்டோவையும் ஐரோப்பிய ஒன்றியத்தையும் கூட்டாக எதிர்க்க வேண்டியிருக்கும் என்பதை புடின் முன்பே நன்கறிந்திருந்ததால், இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் இடங்களில் பொதுமக்களின் பாதுகாப்பான வெளியேற்றத்தையும் அவர் மிகச் சரியாகக் கையாண்டார். ஒருமுனையால் ரஷ்யப் படைகள் முன்னேறிக் கொண்டிருக்கையில் மறுமுனையில் பொதுமக்களின் வெளியேற்றமும் சரியாகவே நடந்துகொண்டிருந்தது. இப்படியிருக்கையில் ரஷ்ய இராணுவம் பொதுமக்களைத் தாக்குகின்றது என்ற பிம்பத்தை ஏற்படுத்த முனைந்தார் ஷெலன்ஸ்கி. உணர்ச்சிகரப் பேச்சால் பொதுமக்கள் ரஷ்ய இராணுவத்துக்கு எதிராகப் போராட வேண்டும் என்று வலியுறுத்தினார். உக்ரைன் - ரஷ்ய மோதலை இராணுவரீதியாக அல்லாமல் அதற்கு வெளியே எடுத்துச்சென்றவர் ஷெலன்ஸ்கியே. ஷெலன்ஸ்கி மட்டுமே!

### உலகப்போராக மாற்ற முனைந்தார்

ஷெலன்ஸ்கியின் உரையொன்று ஐரோப்பிய ஒன்றியத்தில் ஒளிபரப்பப்பட்டது. 'உக்ரைனில் பொதுமக்கள் கொல்லப்படுகின்றார்கள், குழந்தைகள் கொல்லப்படுகின்றார்கள். உலகம் இதைப் பார்த்துக்கொண்டு இருக்கக்கூடாது. நீங்கள் (ஐரோப்பியர்கள்) எம்முடன் இருக்கின்றீர்கள் என்பதைக் காட்டுங்கள். நீங்கள் எம்மைக் கைவிடுவதில்லை என்று காட்டுங்கள். அப்படிச் செய்தால் இருளை ஒளி வெல்லும், பொய்மையை உண்மை வெல்லும்' என்பதாக அமைந்தது அந்த உரை. ரஷ்யாவுக்கு எதிராக ஒட்டுமொத்த ஐரோப்பிய ஒன்றியமும் போரைத் தெரிந்தெடுக்க வேண்டும் என்பதாக அமைந்தது அவரின் வலியுறுத்தல். அதைவிட ரஷ்ய இராணுவத்துக்கு எதிராகப் போர்புரிய விரும்பும் பொதுமக்களுக்க நுழைவிசைவு உடனடியாக வழங்கப்படும் என்றும் அறிவித்திருக்கின்றார் ஷெலன்ஸ்கி. ஆக, 'இந்தப் போர் ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையிலானது அல்ல. ரஷ்யா உலகத்துக்கே பொதுவானதொ [illegible] சர்வதேசத் தேவை' என்ற க[illegible] ஷெலன்ஸ்கி முனைந்து வருகின்றார் என்பதன் உச்ச வெளிப்பாடுகளே இவை.

### அமைதியை விரும்பாத உக்ரைனின் ஜனாதிபதி


போருக்கு எதிரானவர் என்றும் பேச்சின் மூலம் ரஷ்யாவுடன் தீர்வைக் காண விரும்புகிறார் என்றும் வெளியில் அடையாளப்படுத்தப்படும் ஷெலன்ஸ்கி, உண்மையில் அமைதிப் பேச்சுக்கு குந்தகம் விளைவிப்பவராகவே தன் மறைமுக நகர்வுகளை மேற்கொள்கின்றார். உக்ரைன் - ரஷ்யாவுக்கு இடையிலான முதலாவது பேச்சின் சில மணிநேரங்களின் முன்னர் ரஷ்ய அதிபரை சரமாரியாக விமர்சித்தார் ஷெலன்ஸ்கி. அத்துடன் நின்றுவிடாது ரஷ்யாவை கோபமுறச் செய்யும் வகையில் ஐரோப்பிய ஒன்றியத்தில் உக்ரைனை இணைக்கும் கோரிக்கைக் கடிதத்தை கையளித்துவிட்டே அந்தப் பேச்சில் உக்ரைன் பங்கெடுத்தது. இரண்டாவது பேச்சுக்கு சில மணிநேரங்களின் முன்னர் உக்ரைனில் உள்ள ரஷ்யப் பொதுமக்களின் சொத்துக்களை முடக்கிவிட்டே பேச்சு மேசைக்கு வந்தது உக்ரைன். ஆக, அமைதி திரும்பக்கூடிய வழிகளை அடைத்துவிட்டு, எதிர்த்தரப்பை கோபப்படுத்தி பரஸ்பரப் புரிதலுக்கான வழிமுறைகளை இல்லாமலாக்கிவிட்டு பேச்சு மேசைக்கு வருவதும் ரஷ்யாவை நோக்கி விரல்நீட்டுவதெல்லாம் கோமாளித்தனம் மட்டுமல்ல, கலப்படமற்ற கபடத்தனமும்கூட.

உக்ரைனை பேரா[illegible]துள்ளது. உக்ரைனியர்களின் வாழ்வை [illegible] எது. ஆனால் இவற்று[illegible] அல்லர். ஷெலன்ஸ்கி கோமாளி மட்டுமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌன மொழி

# கவிதைகள் 73



துப்பாக்கி தனை கீழிறக்கி
அறிவுக்கு விருந்தாகும் நூலகந்தனை நாடி
நூலேந்தி எதைத் தேடுகின்றனையோ?
உயிர்காக்க வேறுவழி தேடுகின்றனையோ அன்றி
குறிதவறாதுயிர் பறிப்பதெப்படியென
அறியத் துடிக்கின்றனையோ? நண்பா!
ஆயுதம் விடுத்து அன்பை நாடு
தீர்வு தானே கிட்டிடும்

**ந.தனுபதன்**, பொருமாள் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

அமெரிக்காவுடன் போரிட்ட
ஆப்கானிஸ்தான் போராளியே
கொலைப்பசிக்கு சமாதி கட்ட
உன் துப்பாக்கியை தூர வீசியெறி
அறிவுப்பசிக்கு தீனிபோட
ஆயிரம் புத்தகங்கள் உனக்குப் பின்னாலே
ரஷ்யா உக்ரைன் நாட்டுத் தலைவர்களே
ஆப்கானைப் பார்த்து அறிவுக்கண் திறந்திடுவீர் !

**வே.பார்த்திபன்**
லிங்கநகர், திருகோணமலை

புரட்சிப்பாதையில்
கைத்துப்பாக்கிகளை
விட கரம் கொடுக்கும்
நூல்களே சிறந்ததென
ஒவ்வொரு வீரர்களும்
அறிந்திருக்க வேண்டுமெல்லோ

**ஜீவா சஞ்சய்**
யா/ இந்துக்கல்லூரி

இருள் சூழ்ந்த போதும்
கரங்களில் நூல் ஏந்தி
ஆவலுடன் கற்றிடும்
ஆயுதனே உன்
வாழ்வில் வசந்தம் வீச
பற்பல பனுவல்களை
பண்புடனே உரமாய்
தப்பாது கற்றிடடா

**எஸ்.உமாசிவம்**
ஏழாலை மேற்கு

புத்தகத்தைக் கையில் எடு
ஆயுதங்கள் தானாக கீழ் இறங்கும்
இதை புரிந்தால் – உலகில்
யுத்தத்துக்கு என்ன வேலை?

**பவித்திரா**
களபூமி , காரைநகர்

நிற்க இடமின்றி இருந்தவரெல்லாம் நிலைதடுமாறி
நிற்கமுடியாத மனிதனாய் உயிர் வழிகாட்டி
கற்க கல்வியையும் காசு பணத்தையும் படைப்புக்கள்
தேடிக்கண்டான் புதியதோர் வாழ்வு

**என்.கிஷானிகா**
யாழ்.இந்து மகளிர் கல்லூரி

தீவிரவாதி எனும் மரத்தில் விதைக்க மறந்த
மனித நேயத்தை விதைக்கும் உரமாய் புத்தகம்!
அவன் கையில் ஏறிய திறந்த புத்தகம்
மௌனமாக மனதில் மனிதநேயத்தை திறக்கும் சாவியாய்
ஆயுதத்தையே கீழிறங்க செய்தது!

**பா.மதுஷனா**
யாழ். இந்து மகளிர் கல்லூரி

வயது போன நிலையிலும்
ஊன்று கோலுடன்
நூலகத்திற்கு சென்று
வாசிப்புப் பழக்கத்தை
எதிர்கால சிறுவர்களின்
மனதில் திடமாய் விதைத்திடு

**மு.பிரணவி**, பருத்தித்துறை

**ஊனமுற்ற நிலையில்**
**ஊன்று கோலை ஊன்றி**
**வாசிப்பு மனிதனை பூரணமாக்கும்**
**என்பதற்கமைய**
**வாசிக்க புத்தகசாலைக்கு நீ வருவது**
**படிக்காத இளஞ்சிறுவர்களுக்கு**
**படிக்க ஆர்வம் வரும் உனைப்பார்த்து**

**மு.ஹவிசானி**
யா/ உடுவில் மகளிர் கல்லூரி

**கால் இல்லையென்றால் போகட்டும்**
**அறிவுச்சிகரம் எனக்கு வரட்டும்**
**என்று போனவன் இவன்**
**சோம்பலாய் இணையத்தில் படிப்பவனே**
**இவனைப் பார்த்துக் கற்றுக்கொள்**

**வி.ஐஸ்வர்யா**
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

பலம் மட்டும் இருந்தால் பலசாலி ஆகலாம்
அறிவும் பலமும் இருந்தால் போராளி ஆகலாம்
அடக்கு முறை செய்தாலும் அடிபணிய வைத்தாலும்
அவர்களை ஆட்டிப்படைப்பது கல்வி ஒன்று தான்
வாசிப்பால் தான் மனிதன் உயிர்வாழ்கிறான்
இல்லையேல் எல்லோர் கையிலும் ஆயுதங்கள் தான்
தினமும் வீடுகளில் மரண ஓலங்கள் தான்
இவ்வுலகம் நிறைவுபெற உதவுவது கல்வி தான்

**ஆர்.மலர்**, மல்லாவி

மனித அறிவு ஆறும் துப்பாக்கியில்
உயர் சன்னங்கள் ஆறும் இன்று தலை தூக்கி நிற்கிறது
மூன்று புள்ளி ஆயுத எழுத்து உச்சரிக்கையில் நாக்கில் ஒரு தடங்கல்
ஆயுதம் ஏந்தியதால் நிறைய சடலங்கள்
புத்தகம் கையில் ஏந்தியதும் வெட்கத்தில் தலைகுனிந்து
ஆயுதம் விடுதலைபெற்று கீழ் விழுந்ததே

**லோ.கம்சனா**, யாழ்ப்பாணம்

**துப்பாக்கி துணையுடனே**
**இருண்ட யுகத்திலே**
**நூல்கள் கற்றிடும்**
**ஆயுததாரியே உன்**
**வாழ்வில் வசந்தம் சூடிட**
**மதியை சீராக தீட்டிட**
**நூலகம் சென்றிட்டால்**
**மாசுதனைக் கொன்றிடலாம்**

**தமிழ்பித்தன்**, பண்டாரிக்குளம்

இந்த கால் இயலாத நிலையிலும்
ஊன்றுகோலை ஊன்றி நூல்களை
வாசிக்க உன் வேலைதனை நீ சிறிதும்
யோசிக்காமல் வாசிப்பை நேசித்து
நூலகத்திற்கு வருவதோ வியக்கத்தக்கதே

**எம்.டிலக்சனா**
யா/இந்து மகளிர் கல்லூரி

**புரியாத வயதில் தூக்கிய புத்தகம்**
**இன்றுவரை புரியவில்லை**
**தெரியாது தூக்கிய ஆயுதத்தை**
**வைக்க வழி தெரியவில்லை**
**கேட்கப்பட்ட உரிமைகள்**
**மறுக்கப்பட்டால் மீண்டும்**
**தூக்குவேன் என் கைகளில்**
**ஆயுதத்தை**

க.புவனேஸ்வரி
மட்டுவில், சாவகச்சேரி

படித்து நல்ல பெயர் எடுப்பர், பலர்
தீவிரவாதி எனும் பெயர் எடுத்த பின்
நவீன ஆயுதங்கள் தேவை இல்லை
புதிதாய் படிக்க புத்தகங்கள் தேவை
பொறுத்திருந்து பாருங்கள்! படித்த பின்
பயங்கரவாதியாக மாறி விடுவேன்

**என்.தீபன்**

**இருந்து படிக்க நேரமில்லை**
**அவசரமாக அழைக்கும்**
**அவசியக் கடமை காலடியிலே**
**இருந்த போதும்**
**விட்டுப்போக மனமின்றி**
**கவர்ந்திழுக்கும் கவிவரிகள்**
**கைகளிலே**
**வைக்கவும் மனமின்றி**
**தூக்கவும் மனமின்றி**
**இருதலைக்கொள்ளியாய்**
**நகரும் போராளி**

**ரதி தில்லை**

நூல்கள் தேடிக் கற்பதிலே ஆர்வம்
நுண்ணறிவை வளர்த்திடவே தாகம்
ஊன்றுகோலின் துணையோடு வாழ்ந்திட்டாலும்
கருத்தூன்றி வாசிப்பதால் ஞானம்
பகட்டு வாழ்வை விரும்பாத தோற்றம்
தெருவிளக்கில் கற்றுயர்ந்த
ஆபிரகாம்லிங்கனைப் போல் என்றோ
மாமனிதர் ஆகிடலாம் திண்ணம்

**க.கண்ணகை**
பிரம்படி உப ஒழுங்கை, கொக்குவில்

**களங்களில்**
**உயிர் காத்தவன்**
**கணப்பொழுதில்**
**வெட்கினேன்.**
**கரங்கள் நூலடி பற்றியதும்**
**நான் காலடி**
**சாய்ந்தேன் என்று**
**துப்பாக்கி**

**எஸ்.சனோ**
**வவுனியா**

அறிவுப்பசிக்கு
சொந்தமாக நூல்களை வாங்கி
அளவுத்தீனி கொடுப்பதை விட
நூலகம் சென்று
இரவலாக நூல்களை வாங்கி
விருந்துச் சாப்பாடு கொடுக்கும்
நீ தான் சிறந்த அறிவாளி

**கே. கனிஷன்**
ஓட்டுமடம் வீதி யாழ்ப்பாணம்

**பரிசு பெறும் கவிதை**

**துர்ப்பாக்கிய நிலையில்**
**அப்பாவி இவன்**
**துப்பாக்கியுடன்**
**தப்புவதற்கான**
**துப்புக்களை**
**புத்தகமதில்**
**படிக்கின்றான்**

**இ.சிவசிறிதரன்**
அராலி மத்தி
வட்டுக்கோட்டை

ஓ உக்ரைன் போராளியே
எமை அழிக்க நீ உதவினாய்
முள்ளிவாய்க்காலில் அன்று
உமைக்காக்க உதவி
கேக்கிறாய் இன்று
ஒற்றைக்காலில் நின்று
நன்று நன்று வாழ்வு
ஒரு வட்டம் என்பதனை படி

சி.பாவனா
அராலி முருகமூர்த்தி
வித்தியாசாலை

ஒரு கையில் நூலும்
மறுகையில் ஆயுதமும்
புத்தகங்களே!
பார்க்காமல் எப்படி
பல நாட்கள் கடத்துவது
புரியவில்லை எனக்கு
காணக் கிடைக்குமோ
கிடைக்காமல் போகுமோ
எதர்வு கூறிட முடியாமல்
நூல்களின் நினைவுகளுடன் நான்

**ச.துஸ்யன்**
அத்தியடி யாழ்ப்பாணம்

**உங்கள் கவிதைகள் எங்கள்**
**கதவைத் தட்ட**
**வேண்டிய கடைசி நாள்:**
**11.03.2022**

*அனுப்ப வேண்டிய முகவரி:*
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
Sanjeevi@uthayan.com
0773165555

## 74




இந்த ஒளிப்படத்தைப் பார்த்ததும் உங்கள் சிந்தனையில் உதிக்கும் கவிதைகளை 8 வரிகளுக்கு மேற்படாமல் உடனே எழுதி தெளிவாக முகவரியை குறிப்பிட்டு அனுப்புங்கள். மிகச் சிறப்பான ஒரு கவிதைக்கு ரூபா. 1000/ பரிசாகக் காத்திருக்கிறது. பாராட்டுப் பெறும் ஏனையவை மௌனமொழி பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நத்தை வயிறு



சஞ்சீவி சிறுகதை

கனக. பாரதி செந்தூரன்

அந்த நிழல்மரவள்ளியின் எல்லா இலைகளும் கரும் பச்சை நிறத்தில் சின்னக் கூடாரம் போல நிழல் கொடுத்துக்கொண்டிருந்தன. ஆனாலும் ஒரு சில இலைகளைத் தாண்டி, சூரியனின் கதிரூற்று கசிந்து கொண்டுதானிருந்தது. கிளிநொச்சி நகரமும் காலைச் சூரியனின் பயணம் போல வேகமெடுத்துக் கொண்டிருந்தது. பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு ஏற்றிச் சென்ற கவனம் மிக்க பெற்றோர், நரைவிழுந்த பறவைகள் போல் சீரான வேகத்தில் அலுவலகங்களுக்குப் போய்க்கொண்டிருந்தனர். சித்திரைக் காற்று வீதியின் புழுதிகளை விரும்பிய போதெல்லாம் விசிறிக் கொண்டிருந்தது. அது சைக்கிள் உழக்கியவர்களின் தலைகளில் தன் இஷ்டத்துக்கு வகிடெடுத்து நடந்து சென்றது. வண்டில் வடைக்காரர் வேலியோடு சாய்த்து வைத்த வடை வண்டியை வீதிக்கரைக்குத் தள்ளிக் கொணர்ந்தார். விரித்துப் போர்த்தி வைத்திருந்த வெண்படங்குத் தறப்பாள் சாக்கை பனையோலைப் பாயைச் சுருட்டிப் பரணில் வைப்பதைப் போல மேலே சுருட்டியவாறு தனது கடையைத் திறந்தார் செல்லத்துரை.

எப்போதோ கட்டிவைத்த நாலு வரிப் பூச்சில்லாச் சிமெந்துக் கட்டு. ஒருவருக்கு மேல் உள்ளே உட்கார முடியாத சிற்றறை. சிமிலி விளக்குப் போல் விளங்கும் அந்தப் பெட்டிக்கடையை, பெட்டிக்கடையென்றும் சொல்ல முடியாது வேண்டுமென்றால் குச்சிக் கடை என்று சொல்லலாம். கடைக்குக் கைப்பையில் தான் கொண்டு வந்த நித்திய கல்யாணிப் பூக்களை, கலண்டராலான சாமிப் படத்தின் முன் வைத்து வாய்க்குள் நாலுவரிகளை முணுமுணுத்துத் தோப்புக்கரணமும் போட்டெழுந்தார். கிழிந்த குடையொன்று சரிந்து கிடக்க அதனை நிமிர்த்தியவாறே தன் இருக்கையில் அமர்ந்தார். கல்லாப் பெட்டியை இரு கைகளாலும் ஒரு வழி வழித்து நெட்டிமுறித்துக் கும்பிட்டார். தனக்குச் சோறு போடும் ஆயுதங்களையும் கண்ணில் ஒற்றிக் கும்பிட்டார். முதல் வியாபாரத்துக்காக காத்திருந்தவருக்கு உடனேயே அது கிடைத்தது. சைக்கிளில் வந்த ஒருவன் சைக்கிளை ஸ்டாண்டில் சாய்த்துவிட்டுத் தான் கொண்டு வந்த செருப்பை நின்றபடியே நீட்டி,

"அடியால விட்டுட்டு, சுத்திவரத் தைச்சுத் தர எவ்வளவு முடியும்?" கேட்டான். அவன் கேள்வியில் பணிவில்லை. மாறாக ஒரு மிதப்பு இருந்தது. இத்தனை கால வாழ்க்கையில் இதுபோல எத்தனை பேரைப் பார்த்திருப்பார். விலையுயர்ந்த அந்தச் செருப்பை வாங்கிப் பார்த்துவிட்டு 'நூறு ரூபா' என்றார் செல்லத்துரை.

"என்ன,ஒரு சுத்து சுத்தித்தர நூறு ரூபாயோ? " ஆச்சரியமாக கேட்டான். "கஷ்டமெண்டால் விடு தம்பி, முதல் யாவாரம் எண்டுதான் நூறு ரூபா கேட்டனான். இல்லாட்டில் இதுக்கும் கூடத்தான் எடுக்கிறனான்" கறாராகச் சொல்லிமுடித்தார். அவன் அமைதியாக இருந்தான். ஒரு சில கணங்கள் மௌனமாகக் கழிந்தது. தூரத்தில் இரண்டு காக்கைகள் மாறிமாறிக் கரைவது காதில் விழுந்தது.றோட்டுக் கரையாக ஒரு பசுமாடு கண்ணில் பட்ட வீதியோரப் பச்சைகளை மென்றபடியே சாணியைப் போட்டுக்கொண்டு நடந்து போவது தெரிந்தது. வந்தவன் சுற்றும் முற்றும் வேறுகடைகள் கண்ணில் படுகின்றனவா என்று நோட்டமிட்டான்.

"என்ன தைக்கவோ?"

"ம்ம் ..கொஞ்சம் குறைக்கேலாதோ?"

"இல்லத்தம்பி. நூறுதான் வேற ஆக்கள் எண்டால் இன்னும் கூடத்தான் கேப்பாங்கள்.." சொல்லிக்கொண்டே நூற்கட்டைகள் சிலவற்றை எடுத்துப் பார்த்துச் செருப்போடு ஒட்டும் நிறத்து நூலைக் கண்டுபிடித்தார். மரப்பிடி வைத்த ஒரு நீள மூக்கு ஊசியால் தைக்கத் தொடங்கினார். முசுறுக் கூட்டத்தின் வரிசையைப் போல நூல், ஊசியைப் பின் தொடர்ந்தது. பார்ப்பதற்கு அது அழகாயும் இருந்தது. ஒவ்வொரு குத்துக்கும் ஒவ்வொரு தடவை தன் அகலக் கண்களால் வீதியைத் துழாவி, போவோர் வருவோர் மீது கண்வைத்தார். பழக்கப்பட்ட கைகள் தானே விரைவாகச் சுற்றி முடித்துப் பின் கத்தரிக்கோலால் நூலை வெட்டி முடித்து வைத்தார்.

"எல்லாரும் கத்தரிக்கோலால வெட்டித் திறந்து வைப்பாங்கள். நீங்க முடிச்சு வைக்கிறியள்" சிரிப்பை வரவழைக்கச் சொல்லிக் கொண்டே நூறு ரூபாத் தாளை நீட்டினான் அவன். வாங்கியதும் கண்களில் ஒற்றிக் கல்லாவில் அதனை அடைத்தார். அவருடைய சேர்ட்டின் முதல் பொத்தான் அறுந்து போயிருந்தது. கரேலென்ற மார்பு தெரியும் படியாகச் சேர்ட் அங்காத்துக் கோணிக் கிடந்தது. அதன் நெஞ்சுப் பையுக்குள் நிறைத்துக் கிடந்த வெற்றிலைச் சருகைப் பிரித்து ஆட்காட்டி விரலோடு பெருவிரலையும் சேர்த்துச் சில துண்டுப் பாக்குகளைப் பொறுக்கி வாய்க்குள் போட்டுக் கொறித்தார். முதலில் ஊறி, வாயை நனைத்த பச்சை எச்சிலை அப்படியே இருந்த இடத்திலேயே இருந்து செத்தையைக் கிளப்பி வெளித்தள்ளினார். ஓரிரு எச்சில் துமிகள் மீசையை நனைக்க அதனை அப்படியே உள்ளங்கை [illegible] பறங்கையால் ஒரு துடையல் துடைத்து ஒத்திக்கொண்டார்.

கடைக்கு முன்னால் கந்தசாமியார் வருவது தெரிந்தது. அவரின் அந்தக் கால ஜப்பான் மோட்டார் சைக்கிளின் முன் கரியல் அன்றைய நாள் பத்திரிகையை ஏந்திக்கொண்டிருந்தது. நிழல் இருக்கும் இடமாகப் பார்த்து மோட்டார் சைக்கிளை நிறுத்திக் கொண்டே. "வணக்கம், என்ன இண்டைக்கு கடை திறக்க லேட் போல ?" என்றுகுரல் வைத்தார்.

"ஓமண்ணை, மகளைப் பள்ளிக்கூடம் கொண்டுபோய் விட்டுட்டு வரக் கொஞ்சம் சுணங்கிட்டு"

"ஆ.. ஆ..! பறவாயில்ல பிள்ளையளைப் படிக்க மட்டும் வைக்காமல் கொஞ்சம் கரிசனை எடுக்கிறாய். அதுவும் நல்லதுதான் சொல்லிக்கொண்டே தான் வழமையாக இருந்து செல்லத்துரையோடு ஊர்ப்புதினங்கள் கதைக்கும் அந்தத் தனித்த சிமெந்துக் கல்லில் குந்தினார். நகர்ந்து கொண்டிருக்கும் அந்த மரவள்ளி நிழல் அவருக்கும் வாகாய் இருந்தது. "பேப்பரில் என்னவாம்? ஏதாச்சும் புதினங்கள் ?" செல்லத்துரை கேட்டார்.

"இன்னும் வாசிக்கேல "சொல்லிக்கொண்டே கையில் வைத்திருந்த பத்திரிகையை விரிக்கத் தொடங்கினார். செல்லத்துரையரிடம் இரண்டு மூன்று பேர் வந்து செருப்பினைத் தைத்துப் போவது தெரிந்தது. முழுப் பக்கங்களையும் அலசி முடிக்கும் போது சூரியன் உச்சிக்கு வேகமெடுத்துக் கொண்டிருந்தான்.

"என்னவாம் பேப்பரில?" மீண்டும் கேட்டார் செல்லத்துரை.

"புதுசா ஒண்டுமில்ல வழக்கம்போல தான்" சுவாரசியக் குறைச்சலோடு சொன்னார். பதிலைக் கேட்டுக்கொண்டே தேத்தண்ணீக் கடைத் தம்பையாவை எட்டிப் பார்த்தார். தம்பையா யாருடனோ பேசிக் கொண்டிருந்தான்.

"தம்பையா, சீனி குறைச்சு இஞ்சி போட்டு ஒண்டு வரட்டும் "சொல்லிக்கொண்டே கைச்சைகை செய்தார். சொன்ன சூடு ஆறும் முன்னே தம்பையா தேநீர் கொண்டுவந்து நீட்டினார். வெற்றிலையைத் துப்பி விட்டுத் தண்ணீர் கொஞ்சம் ஊற்றி வாயை மீண்டும் அலம்பிச் செத்தைக்குள்ளால் கொப்புளித்து விட்டுத் தேநீரை உறிஞ்சத் தொடங்கினார்.

கந்தசாமி போன வருசம் தான் பென்சன் எடுத்தவர். பென்ஷன் காசில செருப்பைக் கொண்டு வந்து தைக்கக் கொடுத்த இடத்தில்தான் இப்பிடியொரு சிநேகிதம் வளர்ந்தது. கச்சேரில நல்ல பொஷிஸன்ல இருந்த இவர் இப்பிடி இது வழிய குந்துறது அவற்ற மனைவிக்கோ பிள்ளையளுக்கோ பிடிக்கிறேல. ஆனாலும் காலையில மனுசி, பிள்ளையளப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிப்போட்டு பெரும்பொழுதொன்றை இங்க வந்து குந்தியிருந்து கழித்து. ஊர்ப்புதினங்களை அளந்து விட்டுத்தான் போவார்.அப்பிடிப் போனால்தான் மனுசனுக்கும் செமிக்கும். பாசமோ இல்லாட்டில் பிஸினஸோ தெரியாது . தம்பையா தவறாமல் செல்லத்துரைக்குத் தேத்தண்ணி கொடுப்பதை மட்டும் இந்தக் காலங்களில் கந்தசாமி அவதானித்திருந்தார். தம்பையாவும் செல்லத்துரையரும் கிட்டடி வழியில உறவென்பதும் கந்தசாமிக்குத் தெரிந்ததுதான். ஆனால் தம்பையாவிடம் ஒரு நாள் கூடத் தேநீரைக் குடிக்க கந்தசாமி விரும்பியதில்லை, வாங்கிக் குடித்ததுமில்லை. ஆரம்பத்தில் தம்பையாவுக்கு, கந்தசாமி தேத்தண்ணி வேண்டாம் என்பதன் அர்த்தம் புரியவில்லை. ஆனால் போகப் போகப் புரிந்துகொண்டான். றோட்டுக் கடைச் சுத்தம், சுகாதாரப் பிரச்சினையாகக் கூட இருக்கலாம், அல்லது மனைவி பிள்ளையள் கண்டால் கிழி விழும் என்பதாகக் கூட இருக்கலாம். அவரின் படிப்பும் பிள்ளைகளின் படிப்பும் கூட ஒரு காரணமாக இருக்கலாமென்று எண்ணிக்கொண்டான். ஒரு பொம்பிளைப் பிள்ளை டொக்டரா எடுபட்டிருக்காம் ,ஒரு மகன் ஏலெவல் சயன்ஸ் படித்துக் கொண்டிருக்கிறானாம் என்று அடிக்கடி அவர் சொல்லிக் கேட்டதுண்டு. எத்தனை படித்தாலும் கந்தசாமியருக்கு வீட்டில் எத்தனை மதிப்பென்பது அவருக்குத்தான் வெளிச்சம்.

செல்லத்துரையரின் முன்னால், மக்கார்ட்டுக்களில் கறள் ஏறிப்போன சைக்கிளில் ஒரு பெடியன் இறங்கி வந்தான். கந்தசாமியைப் பார்த்து மெலிதாக கூடவே அன்போடு சிரித்தான். அதில் ஒரு தேஜஸ் குடிகொண்டிருந்தது. கந்தசாமியாருக்கு அது யார் என விளங்கவில்லை. ஆனாலும் தலையசைத்து மழுப்பிச் சிரித்தார். யாரோ பெடியன் ஏதோ அலுவலுக்காக வந்திருக்கவேண்டும் என நினைத்துக்கொண்டார். பெரும்பாலும் தன் சப்பாத்தையோ, செருப்பையோ தைக்க வந்திருக்கலாம் என்று நினைத்துக்கொண்டார். சற்றைக்கெல்லாம் தான் கையிலிருந்து கொண்டுவந்த மதிய உணவுப் பார்சலை செல்லத்துரையரிடம் அவன் நீட்டினான். கந்தசாமிக்கு இப்பொழுதுதான் விளங்கியது. அவன் செல்லத்துரையரின் மகன் என்பதற்கு முக ஜாடைகளும் எடைபோட்டுக் கொடுத்தன. ஒன்றும் பேசவில்லை .ஏனோ மனம் கேள்விகளும் கேட்க விரும்பவில்லை. செல்லத்துரை, மகனுக்கு ஒரு இருபது ரூபாத் தாளைச் செல்லமாக நீட்டினார்.

"இந்தா வைச்சுக்கொள்"

"வேணாமப்பா, என்னட்ட காசிருக்கு"

"பரவாயில்லயடா . வைச்சுக்கொள் "

சரி என்று வாங்கிப் பொக்கற்றுக்குள் செருகினான். நிறுத்தி வைத்த சைக்கிளைத் திருப்பினான். கந்தசாமியாரை மறுபடியும் திரும்பிப் பார்த்து ஒரு தலையசைப்புடன் கூடிய மெல்லிய சிரிப்பை உதிர்த்து விட்டு சைக்கிளை மிதித்தான். மதிய நேர உஷ்ணத்தில் ஒரு சின்னச் சிட்டு சைக்கிள் மிதிப்பதாகப்பட்டது கந்தசாமிக்கு.

"யார்? செல்லத்துரை மகனோ?

"கந்தசாமி கேட்டார்.

"ஓமண்ணை"

"உனக்கு இவ்வளவு வளர்ந்த பொடியன் இருக்கெண்டு எனக்கு இத்தனை நாள் தெரியாது"

"அவன் பெருசா இங்கால வாறதில்ல"

'ஏன்டாப்பா பெடியன் வளந்தால் உனக்கு ஒத்தாசையா இருக்கும் தானே. இந்தக் காலத்தில வேலை வெட்டியில்லாமத் திரியுறதுக்கு அப்பருக்கு உதவியா இருந்தால் கூட ஒருவிதத்தில நல்லதுதான் " தீர்க்கதரிசனமாகச் சொல்லிமுடித்தார் கந்தசாமி.

"ம்ம் .. அண்ணை, மனுசி சுடச்சுட அனுப்பியிருக்கிறாள். மீன் வாசம் இப்பவே நாசியில அடிக்குது. சாப்பிட்டுக் கொண்டே கதைக்கவா?"

"ஓம் .ஓம். நீ சாப்பிடு சாப்பிடு. நான் இனித்தான் வீட்ட போய்ச் சாப்பிடோணும். இவள் மனுசியும் பள்ளிக்கூடத்தால கொஞ்ச நேரத்தில வந்திடுவாள். அவளை ஏத்திக்கொண்டு வரோணும். பிறகு பிள்ளையள ஏத்தோணும்..அதுக்கப் பிறகுதான் மனுசி காலம்பிறை போகேக்க சமைச்ச, ஆறிப்போனதைச் சாப்பிடோணும்" காற்றில்லாக் கால கடல் அலைபோல அமைதி கலந்த ஏற்ற இறக்கத்தோடு கந்தசாமி சொன்னார்.

"உன்ர பொடியனுக்கு எத்தின வயசிருக்கும்?"

"வர்ர ஆடி வந்தால் இருபது"

"கொஞ்சமாச்சும் படிச்சிருக்கானோ?"

"ஓமோம்.."

"என்ன படிச்சிருக்கிறான்?"

"போனவருசம் உங்கட மகளோடதான் படிச்சு கம்பஸ் கிடைச்சது"

"யார் உவனுக்கோ? " கந்தசாமி கண்களை அகல விரித்தார்.

"ஓ..மண்ணை"

"என்ன பேர்?"

"கமலநாதன்"

"அடேய் பொறு. போன வருசம் முதல் ராங்கில மெடிசின் கிடைச்ச அந்தக் கமலநாதனா?"

"ஓமண்ணை"

.சில கணங்கள் கந்தசாமியால் ஒன்றும் பேச முடியவில்லை.

"அப்ப ஏன் எனக்கு இத்தனை நாளா நீ உதைச் சொல்லேல?"

"நீங்க கேட்டதில்ல, நானுஞ் சொல்லேல"

"அடேய் இதுகளச் சொல்லாமல் பின்ன எதுகளையடாப்பா வெளியில சொல்லுறது?"

"அப்பிடிச் சொல்லக் கூடாதெண்டில்ல அண்ண. என்ர பிள்ளை நாளைக்கு டொக்டரா வந்து நிக்கேக்க அவனுக்கு நான் ஒரு தடையாக இருக்கக் கூடாதல்லோ? அதுதான் சொல்லேல"

"உன்னை நான் ஸ்கூல் மீட்டிங்கிலயும் காண்றேலயே செல்லத்துரை?"

"அவன் வாங்கோப்பா எண்டுதான் கூப்பிடுறவன். நான் தான் இவள் மனுசிய அனுப்பி விடுறனான். இன்னாற்ற மகன் எண்டு தெரிஞ்சால் சிலர் அக்கறைப்படுவினம் . சிலர் அசிங்கப்படுத்துவினம். அவன் இன்னாற்ற மகன் எண்டு தெரியாமலிருக்கிறது தான் நல்லது எண்டு நினைச்சன். ஆராவது அப்பா என்ன வேலையெண்டு கேட்டால் கூலியெண்டு சொல்லச் சொல்லுறனான்" அடிமனதிலிருந்து வார்த்தைகளெனும் ஆலாபனையை சில கணங்கள் மீட்டிக்காட்டினான்.

"அப்ப படிப்புச் செலவெல்லாம் யார் பார்த்தது?"

"ஏன்? நான்தான் அண்ணை" கந்தசாமி ஒன்றும் பேசாமலிருந்தார்.

"இந்த உடம்பில உயிர் ஒட்டியிருக்கிற வரைக்கும் நான் உழைச்சு என்ர பிள்ளையளப் படிப்பிப்பன்" அந்தத் தோரணையில் கந்தசாமிக்கு ஒரு ஒளி தெரிந்தது. யாரந்தக் கமலநாதன்? யாரந்தக் கமலநாதன்? என்று தேடித்திரிந்த கமலநாதன் இவன்தானா?, தன் மகளை முந்திய அந்தக் கமலநாதன் இவன்தானா? அப்போதுதான் தோன்றிய ஆழ்மனதின் பேரலைகள் ஆரவாரமின்றி அடங்கிப்போக வீதியைத் திரும்பிப் பார்த்தார்.

அவன் தூரத்தில் மறைந்து கொண்டிருந்தான். அவன் முக ஜாடையை மீண்டும் அசைபோடத் தொடங்கினார். அவன் வெள்ளை நிற ஜீன்ஸ் கோட்டு, கையில் ஸ்டெதஸ்கோப்போடு முன்னுக்கு நிற்பதாகப்பட்டது அவருக்கு. கேள்விகளைக் கேட்கவேண்டும் போலிருந்தது. ஆனால் நாக்கு வழிமறித்தது. செல்லத்துரையரைப் பார்த்தார். அவர் கையைக் கழுவி விட்டு வெற்றிலைச் சரையைப் பிரித்து அதனுள் சீவல் பாக்குகளைத் தேடிக்கொண்டிருந்தார்.

"மகனுக்குக் கம்பஸ் கிடைச்சதுக்குப் பார்ட்டி ஒண்டும் இல்லையோ?"ஒரு தந்தையாக மகிழ்ந்து கேட்டார் கந்தசாமி.

"நானோ? உங்களுக்கோ?"

"ஏன் தரக்கூடாதோ?" சிரித்தார்.

"சரி, என்ன வேணும் சொல்லுங்கோ..!"

"தம்பையாட்ட எனக்கொரு ரீ சொல்லு.. அது போதும்.."

"தம்பையா, கந்தசாமியண்ணருக்கு ஒரு ரீவரட்டும் "உரக்கக் கத்திச் கைச்சைகை காட்டினான். கந்தசாமியோ செல்லத்துரையரை புதிதாகப் பார்க்கத் தொடங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பரமண்ணை

# போட்டாச்சோ கையெழுத்து?

அண்ணை கையெழுத்து போட்டிட்டியளே?'
'என்ன கையெழுத்தோ? என்ன கையெழுத்து? என்னத்துக்கெடா தம்பி கையெழுத்து? ஒரு கையெழுத்திலை எத்தினை விசயம் இருக்கு தெரியுமே? சும்மா கண்ட நிண்டபடி கண்டதுக்கெல்லாம் கையெழுத்து போட்டப்பிடாது?'

"உங்களுக்கு விசயம் தெரியாதே? நீங்கள் எங்கடை பேப்பர்கள் ஒண்டும் பாக்கிறேல்லையே? இல்லாட்டி எங்கடை வெப்சைற்றுகள் ஒண்டும் பாக்கிறேல்லையே?"

"எங்கையடா தம்பி பேப்பர் பாக்க நேரம் கிடக்கு ? விடியப்பிறம் தோட்டத்துக்குப் போனா,பேந்து வந்து உதுகளை ரியூசனுக்கும் பள்ளிக்கூடத்துக்குக் கொண்டு திரியத்தான் நேரம் சரி. இப்ப நாலுநாளா பேப்பர் பாக்கேல்லை. என்னட்டை கிடக்கிற போனும் உந்த மூவாயிரம் ரூவா போன்தான் . எப்பவேன் உவளவை பெடிச்சியள் ஏதேன் முக்கியமான விசயம் 'நெற்'றில வந்தா எனக்கும் சொல்லுவாளவை. மற்றும்படி நான் எங்கை போறது வெப்சைற் பாக்க?"

"அண்ணை எங்கடை சுமந்திரன் சேர் எல்லே வேட்டையாடத் துவங்கியிருக்கிறார், வேட்டை எண்டா முந்தின காலத்திலை ராசாமார் வேட்டைக்குப்போற மாதிரி அம்பு வில்லோட போற வேட்டை எண்டு நினைச்சிடாதேங்கோ. இது கையெழுத்து வேட்டை.

இலங்கை முழுக்க கையெழுத்து வேட்டை நடக்குது அண்ணை. தமிழர், சிங்களவர், முஸ்லிம் எண்டு வித்தியாசம் இல்லாமல் எல்லாரும் கையெழுத்துப் போட்டிட்டினம். எங்கடை முந்தின சனாதிபதி சந்திரிகா கூட கையெழுத்து போட்டிட்டா. பிக்குமார் கூட எல்லாரும் போட்டிட்டினம், எங்கடை முந்தின எதிர்க்கட்சித்தலைவர் சம்பந்தன் அய்யா கூட இந்தத் தள்ளாத வயதிலையும் போய் போட்டிட்டார். பேப்பரிலை படம் எல்லாம் வந்தது. நீங்கள் ஒண்டும் தெரியாமை கிணத்துத் தவளை மாதிரி இருக்கிறியள். நேற்று நான் உதாலை பலாலி றோட்டாலை வரேக்கை, என்னையும் மறிச்சு கையெழுத்து போடச்சொன்னவை. நானும் வடிவா இங்கிலிசாலை தொடுத்தெழுதி என்ரை கையெழுத்தைப் போட்டிட்டு வந்திட்டன் . இப்பத்தை பெடியள் பெட்டையளுக்குக் கையெழுத்து போடவே தெரியாதண்ணை. எனக்கு முன்னம் கையெழுத்துப் போட்ட பெட்டை இங்கிலிசாலை ஒவ்வொரு எழுத்தா எழுதினது. நான் சொன்னனான், "பிள்ளை கையெழுத்து போடுறதெண்டா இப்பிடி தனித்தனி எழுத்தா எழுதப்பிடாது. தொடுத்தெழுதவேணும்" எண்டு . அதுக்கு அந்தப்பெட்டை சொல்லுது "நான் இங்கிலீஸ் லிற்றேச்சர் படிச்சனான் அதென்ன தொடரெழுத்து? எங்களுக்கு லிற்றேச்சர் படிப்பிச்ச மிஸ் தொடரெழுத்து சொல்லித்தரேல்லை" எண்டு சொல்லிச்சுது. நானும் சரி எனக்கேன் தேவையில்லாத விசயம் எண்டிட்டு என்ரை பாட்டிலை வந்திட்டன்."

"ஓமடா தம்பி, நீ சொல்லுறதும் சரி தான். சுமந்திரன் சேர் வேட்டையாடத் துவங்கினா அதுக்குப் பின்னாலை முக்கியமான விசயம் ஏதேன் இருக்கும். அவர் சனாதிபதி சட்டத்தரணி எல்லே. முந்தின காலத்திலை ராணி அப்புக்காத்து எண்டு இருந்தவை. எங்கடை செல்வநாயகம், ஜி.ஜி. திருச்செல்வம் எல்லாரும் ராணி அப்புக்காத்துமார்தான் . உனக்குத்தெரியுமோ தெரியாது. அது மாதிரித்தான் இப்ப இலங்கை குடியரசான பிறகு சனாதிபதி சட்டத்தரணிமாரும்.

அதோடை பிக்குமாரும் கையெழுத்துப் போட்டிருக்கிறாங்கள் எண்டா அதிலை கட்டாயம் ஏதேன் விசயமிருக்கும். ஏனெண்டால் அவர்கள் பஞ்சசீலத்தை பின்பற்றுற ஆக்கள். பஞ்சசீலம் எண்டா என்னெண்டு தெரியுமோ? உனக்கு தெரியாட்டி ஆறுமுகநாவலற்றை சைவ வி[illegible]யை ஒருக்கா எடுத்துப்பார். நாங்கள் பஞ்சமா[illegible] எண்டு சொல்லுறதைத் தான் சிங்களவர் [illegible] சொல்லுறாங்கள்.

அது சரி, நீ இன்னும் விசயத்தைச்சொல்லேல்லை. என்னதுக்காண்டி உந்த வேட்டையிலை இறங்கியிருக்கிறார் சுமந்திரன் சேர்? தசரதன் வேட்டைக்குப்போன கதை, அருச்சுனன் வேட்டைக்குப்போன கதை எல்லாம் நான் படிச்சனான். முந்தி ஹன்ரெர் (Hunter) எண்டு ஒரு இங்கிலீஸ் படம் வந்தது. அதுகும் நான் பள்ளிக்குடம் கட் பண்ணிப்போட்டு றீகல் தியேட்டரிலை போய் பாத்தனான்.

ம்ம்.....இப்ப றீகல் தியேட்டருமில்லை, ஒண்டுமில்லை. அதெல்லாம் ஒரு காலம். சரி, விஷயத்தைச்சொல்லு. இப்ப என்னதுக்காண்டி சுமந்திரன் சேர் உந்த வேட்டையிலை இறங்கியிருக்கிறார்?'

"அதண்ணை உந்த பயங்கரவாதத் தடைச்சட்டத்தாலை எங்களுக்கு எவ்வளவு பாதிப்பு. எத்தினை பேர் வரிசக்கணக்கா ஜெயிலுக்கை இருக்கினம். அதுதான் உந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கச்சொல்லித்தான் கையெழுத்து வேட்டை நடக்குது.."

"எடே தம்பி. நானும் உன்னை ஏதோ அரசியல் தெரிஞ்ச ஆள் எண்டு நினைச்சன். ஆனா உனக்கு ஒரு சாம்பிராணியும் தெரியாதுபோல. உதுக்குத்தான் சொல்லுறது முதல் வரலாறு படிக்கவேணும். உலக வரலாற்றை படிக்காவிட்டாலும் எங்கடை வரலாற்றையாவது நாங்கள் படிக்கவேணும்.

எடே உந்தப்பயங்கரவாதத்தடைச்சட்டத்தை ஜே.ஆர். கொண்டு வரேக்கை எங்கடை அமிர்தலிங்கம் தான் எதிர்கட்சித்தலைவரா இருந்தவர் . ஆனா அவர் உந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை எதிர்க்கேல்லை. ஏனெண்டா ஜே.ஆர். கூப்பிட்டு வெருட்டிப்போட்டான்.

"நீ இதை எதிர்த்தால் நான் பார்லிமென்றை கலைச்சுப்போடுவன். உன்ரை எதிர்க்கட்சித் தலைவர் பதவி இல்லாமபோயிடும். அதோடை புலியளை வளர விட்டா அது உனக்கும் ஆபத்து" எண்டு வெருட்டிப்போட்டான் .பின்னை அமிர்தலிங்கமும் சரி எண்டு சொல்லி "பார்லிமென்றிலை இருந்து நாங்கள் வெளிநடப்பு செய்யிறம்" எண்டு வெளிநடப்பு செய்தவை. சம்பந்தன் அய்யா அப்பவும் எம்.பியா இருந்தவர் . நான்



சொல்லுறதை நம்பாட்டி போய் சம்பந்தனிட்டைக்கேள். அப்பிடியில்லாட்டி உதிலை கிளிநொச்சியிலை சங்கரி இருக்கிறார் அவரும் அப்ப எம்.பியா இருந்தவர். வேணுமெண்டா போய் கேட்டுப்பார், பரமண்ணை சொல்லுறது சரியோ எண்டு. அவ்வளவு ஏன் இப்ப வேட்டையாடுற உந்த சுமந்திரனாலேயே பத்துப் பதினைஞ்சு பேர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தில பிடிபட்டு உள்ளுக்க இருக்கினம். இவர் "அவை என்னைக் கொல்லத் திட்டம் போடேலை, விடுங்கோ" எண்டு அரசாங்கத்துக்கு அறிவிச்சாலே அவையை விட்டுடுவாங்கள். அப்பிடி தன்னால உள்ளுக்க போனவையை விடுவிக்ககூட மனமில்லாத [illegible] வேட்டை[illegible] றாய்... போடா தம்பி. போய் பிள்ளையளை பள்ளிக்கூடம் அனுப்பிற வழியைப் பார்'



# தடுப்பரண் தகர்ந்தது!

ஆர்.லயனல்

கிட்டத்தட்ட 10 வருடங்களுக்குப் பின்னர், புஜாராவின் பெயரைப் பரிசீலிக்காமல் இந்திய அணி, டெஸ்ட் தொடரொன்றில் களமிறங்கியுள்ளது. இலங்கைக்கு எதிராகத் தற்போது நடைபெற்றுவரும் டெஸ்ட் தொடரில் இந்திய டெஸ்ட் அணியில் புஜாராவின் பெயர் பரிசீலிக்கப்படவேயில்லை. ரகானே மற்றும் புஜாரா என இருவரும் இந்தத் தொடருக்கான அணியில் இடம்பெறவில்லையாயினும் புஜாராவின் நீக்கம் கொஞ்சம் பெரியதுதான்.

ராகுல் ராவிட்டின் ஓய்வின் பின்னர், இந்திய டெஸ்ட் அணியில் ஏற்படலாம் என்று கருதப்பட்ட பெரும் பின்னடைவை சரிசெய்து அணியைப் பல இடங்களில் தூக்கி நிறுத்தியவர் புஜாரா. குறிப்பாக வெளிநாட்டு ஆடுகளங்களில் இந்திய அணி பல ஆட்டங்களைப் புஜாராவின் தற்காப்பு நடவடிக்கையால் சமன் செய்ததுண்டு. இதனால், இந்திய அணியின் இரண்டாவது தடுப்புச்சுவர் என்று அழைக்கப்பட்டார் புஜாரா.

ஆனால், இன்று அந்தத் தடுப்புச் சுவர் தமக்குத் தேவையேயில்லை என்று தனித்து நடைபோட ஆரம்பித்துள்ளது இந்திய அணி.

புஜாராவின் நீக்கத்துக்கு இரண்டு காரணங்களைக் குறிப்பிட்டுக் கூறலாம். முதலாவது,புஜாரரவின் மந்தமான ஆட்டம். டெஸ்ட் ஆட்டங்களே மந்தமானவைதான். அதிலும் புஜாராவின் ஆட்டம் இப்போதெல்லாம் ஆகத் தொய்ந்துபோயுள்ளது. தற்காப்பு என்பதை ஆரம்பத்திலேயே அவர் கைக்கொள்கின்றார். இந்திய அணி ஆதிக்கம் செலுத்தி வெற்றிபெறும் என்று கருதப்பட்ட ஆட்டங்களில்கூட அவர் அதீத தற்காப்பை வெளிப்படுத்தி அணியை இக்கட்டுக்குள் தள்ளிவிட்ட சம்பவங்கள் கடந்த இரண்டு வருடங்களில் கொஞ்சம் கூடுதலாகவே இடம்பெற்றுள்ளன. புஜாராவின் இந்த மந்தகதி ஆட்டத்தால்தான் கோலிக்கு முன்வரிசையில் கூடுதல் அழுத்தங்கள் வந்து சேர்கின்றன என்றும் சொல்லப்பட்டதுண்டு. ஆதலால், புஜாராவால் வலிந்து ஏற்படுத்தப்படும் 'ஓட்டச் சராசரி' அழுத்தங்களில் இருந்து வெளியேற வேண்டுமென்பதால் அவரையே அணியில் இருந்து வெளியேற்றியுள்ளது நிர்வாகம்.

விளையாட்டு

இரண்டாவது, கோலி பதவி விலகிய பின்னர், டெஸ்ட் அணியின் தலைவராக ரோகித் நியமிக்கப்பட்டார். வெளிப்படையாகக் கூறவேண்டுமாயின் கடந்த வருடம்வரை டெஸ்ட் அணியில் நிரந்தர இடமின்றித் தவித்த ரோகித், இப்போது அணித் தலைவர். அணித் தலைவர் என்பதால் அவர் விளையாடும் பதினொருவர் கொண்ட குழாமில் இனி இடம்பிடிப்பார். அப்படியாயின் யாரை நீக்குவது? ரோகித்தின் இடத்தை எவரை வைத்து சரிசெய்வது? இதனால்தான் கொஞ்சமும் தயங்காமல் வயது மற்றும் அடுத்த தொடர்களைக் கருத்திற்கொண்டு புஜாராவில் கைவைத்துள்ளது நிர்வாகம்.

இந்திய அணிக்கு இந்த வருடத்தில் உள்நாட்டு டெஸ்ட் தொடர்தான் அதிகம். புஜாரா இல்லாவிட்டாலும் உள்நாட்டுத் தொடர்களில் இந்திய அணி சிறப்பாகவே செயற்படும். 35 வயதாகும் புஜாரா இன்னும் இரண்டு வருடங்கள் முழுமையாக விளையாடுவதும் சந்தேகம்தான். ஆக, அனைத்தையும் கூட்டிக்கழித்து தருணம் பார்த்து அவரை ஓரங்கட்டியுள்ளது அணி. இந்திய டெஸ்ட் அணியின் நிரந்தர இடத்துக்காகப் போராடிவரும் மயங்க் அகர்வால், ஹனுமா விகாரி ஆகியோருக்கு இனி தொடர்ச்சியான வாய்ப்புக்கள் வழங்கப்படும். மயங்க் அந்நிய மண்ணிலும் சிறப்பாகச் செயற்பட வல்லவர் என்பதால் அவர்தான் ரகானேவுக்காக மாற்றுத் தெரிவாகவும் ஹனுமா விகாரி புஜாராவுக்கான மாற்றுத் தெரிவாகவும் இருக்கப்போகிறார்கள்.

"புஜாராக்கள் கழிதலும்
மயங்க், ஹனுமா புகுதலும்.."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சாறு கொண்ட களம் போல
வேறு வேறு பொலிவு தோன்றக்
குற்றனா உலக்கையால்" (புறம். 22)

"மிளகெறி உலக்கையின்" (பதிற்றுப்பத்து. 41)
"பொருப்புலக்கை யுற்றல மரவரிந்தவன்" (பாரத. 18 : 50)
"முடிப்பன் என்று முசலம் கொடு மொய்ம்பில்" (கந்தபுராணம்; யுத். 350)



# உலக்கை



○ தி.செல்வமனோகரன்

உரலின் உடன் பிறப்பே எனினும் தமிழர் பண்பாட்டசைவியக்கத்தில் உலக்கைக்குத் தனியிடம் உண்டு. தொன்மைக்கால மனிதர்களில் வேட்டையாடச் செல்லமுடியாத நிலையிலுள்ள பெண்கள் தமக்குக் கிடைத்த விதைகளைக் கொண்டு உணவினை உற்பத்தி செய்ய முற்பட்டனர். அந்தச்செயற்பாட்டின் ஒருகட்டத்தில் பாறைக்குழிகளில் விதையையிட்டு மரக்கட்டைகளால் விதைகளை இடித்து உள்ளேயுள்ள பருப்புக்களை உணவாக்கினர். இடிக்கப் பயன்பட்ட மரக்கட்டை= மரக்கொப்பானது= கைபிடித்து இடிக்கக் கூடிய அளவினதாக, உருளை வடிவினதாக, இடிக்கும் போது உடையாத வைரம் பாய்ந்ததாகத் தேர்வு செய்யப்பட்டது. அந்தக்கட்டையின் தோல் இடிக்கப்படும் பொருளினுள் விழுந்து கலக்காது இருக்கவும் அந்தக்கட்டை உழுத்துப்போகாதிருக்கவும்; நெருப்பில் வாட்டப்பட்டு பட்டை உரிக்கப்பட்டது. அதுவே உலக்கை ஆயிற்று. உலக்கைக்கு முசலம், விசிகம் எனும் மறு பெயர்களும் உண்டு.

தானியங்களை உரலினுள் இட்டு இடிக்க அல்லது குற்றுவதற்குப் பயன்படக்கூடிய, உருளை வடிவ, முனையில் இரும்புப்பூண் பூண்ட நீண்ட மரச் சட்டமே உலக்கை எனப்படுகிறது. ஏறத்தாழ ஐந்தடி நீளமும் இரண்டரை தொடக்கம் மூன்று அங்குலத்துக்கு இடைப்பட்ட விட்டமும் உடையது. இதன் இருநுனிகளும் சற்றுப் பள்ளமாக்கப்பட்டு ஏறத்தாழ மூன்று அங்குல நீளமுள்ள இரும்புப் பூண் இடப்படும். சிலர் வெண்கலப்பூண் இடுவதுமுண்டு. ஒருமுனையில் சமமானதும் மறுமுனையில் சிறிது குழிந்த நிலையிலான பூண்களையும் பூட்டும் வழக்கமுண்டு. இடிக்கும் போது உலக்கை முனை சிதையாது பாதுகாக்க இவை உதவின. காலப்போக்கில் பூணின் மேற்புறத்துக்கும் உலக்கைக்கும் இடையில் சில துண்டுகள் (மர) உடைந்து பிசிறாவதும் உண்டு. மாவிடிக்கும் போது உரலிலிட்ட உலக்கையைத் தூக்கும்போது மா உரலைவிட்டு வெளியே சிந்தும். உரல் விளிம்பில் சிந்திய மாவை உள்ளே தள்ளியிடிப்பர். அரிசியை அல்லது ஏனைய தானியங்களைத் தீட்டுவதற்கு பூண் உலக்கையைப் பயன்படுத்தினால் அரிசி உடைந்து "குறுணி" ஆகிவிடும். ஆதலால் பூண் இல்லாத உலக்கையைப் பயன்படுத்துதலுமுண்டு. இது கழுந்துலக்கை எனப்படும். பாக்கு முதலானவற்றை இடிக்கக் கையுரலும் சிறு உலக்கையும் பயன்படுத்தப்படுகிறது.

உலக்கைகளை 'கடம்பம், தேக்கு, பாலை, மருதம், புளி' போன்றவற்றில் செய்வதுண்டு. ஆயினும் கருங்காலியில் செய்யும் உலக்கைக்கே அதிக மவுசு உண்டு. தானியங்களை முடிவுப் பொருட்களாக்கவே - உணவுப் பொருட்கள் ஆக்கவே- உலக்கை உருவாக்கப்பட்டது. எனினும் அதன் பயன்பாடு பலவிதமானது. ஆடுகின்ற கதவுக்கு.சரியும் பொருளுக்கு.முட்டுக் கொடுக்கவும், தானியங்களை, அவித்த நெல்லைக் காயவிடுவதற்காகப் படங்குகளை விரிக்கும்போது அவை காற்றில் பறந்து விடாமல் பாரம் வைக்கவும் பாரமான தூக்க முடியாத மரக்குற்றிகளை உருட்டுவதற்கு குற்றியின் கீழே வைக்கவும் சுளுக்குப் பார்க்கவும் வீட்டுக்கு வந்து சண்டித்தனம் விடுபவரை வெருட்ட அடிக்கக் கையிலெடுக்கும் ஆயுதமாகவும் எனப் பற்பல தேவைகளுக்கு உலக்கை பயன்படுத்தப்படுகிறது.

அன்றாடத் தேவைக்கு மட்டுமன்றி வாழ்வின் பல்வேறு வகையான மங்கல, அமங்கலச் சடங்குகளிலும் உலக்கையின் செல்வாக்கு பயன்பாடு காணப்படுகிறது. பொங்கலுக்குப் புதிர் நெல் குற்றித் தீட்டி அரிசியாக்குதலிலிருந்து அதிகாலை மெழுகப்பட்ட நிலத்தில் நேராக உலக்கையை வைத்து கோல மாவைத்தூவி சதுரமாகக் கோலம் போடுதல் வரை தைப்பொங்கலில் அதன் வகிபாகம் உண்டு. தமிழகத்தில் துண்டு போட்டுத் தாண்டுதல் போல இங்கு உலக்கையை வைத்துத் தாண்டிச் சத்தியம் செய்யும் மரபு உண்டு.



## அற்றைத் திங்கள்

## 9

சூலம், கல், கத்தி முதலானவற்றைக் கடவுளாக்கி வணங்கிய காலகட்டத்தில் உலக்கையும் கடவுளாக வணங்கப்பட்டது. 'பொல்லு' வைத்து வழிபடும் மரபு இதன் நீட்சியாக இருக்கலாம். ஆகமமயப்பட்ட ஆலயங்களில் தீர்த்தோற்சவம் அன்று அதிகாலை திருப்பொற்சுண்ணம் இடிக்கப்படும். உலக்கையும் உரலும் நன்றாகக் கழுவப்பட்டு, பட்டு, மாவிலை கட்டப்பட்டு, திருநீறு பூசி, சந்தனப்பொட்டு இடப்படும். மாணிக்கவாசகரின் திருப்பொற்சுண்ணப்பாட்டுப் பாடப்பாட, உலக்கையைத் திருவிழா உபயகாரர் பிடித்து இடிப்பர். இது தமிழ்க் கலாசாரத்தோடு இணைந்த மரபாக இருப்பது கவனிக்கத்தக்கது. "வையமெல்லாம் உரலதாக, மாமேரு என்னும் உலக்கை நாட்டி" என்றும் "செய்ய திருவடி பாடிப்பாடிச், செம்பொன் உலக்கை வலக்கை பற்றி" என்றும் உலக்கை பற்றிய பதிவுகளை மாணிக்கவாசகர் சுண்ணப்பாட்டில் பதிந்துள்ளார்.

'தீட்டு' தொடர்பான செயல்நிலைகளில் உலக்கை முதன்மை பெறுகிறது. சாதாரண வீடுகளில் பருவமடைந்த பெண்ணைக் குறித்த பகுதியில் தங்கவைத்து முன்னே கரித்துண்டால் கோடு கீறி அருகே உலக்கையை வைப்பர். பெண்களின் மாதவிடாய்க் காலத்திலும் இவ்வாறே செய்தலுண்டு. அதைத்தாண்டி அந்தப்பெண் வரக்கூடாது என்பதும் உலக்கைக்குள் வேறு யாரேனும் செல்லுதல்கூடாது என்பதும் எழுதப்படாத விதியாக இருந்து வந்துள்ளது. பண்டைய வாழ்வில் மாதவிடாய் வருதல் தொடர்பான அச்சம், புரியா இயல்பு என்பன பெண்களை வெளியே செல்ல விடாது செய்திருக்கும் என்றும் மாதவிடாய்க் காலத்தில் ஏற்படும் இரத்தப்போக்கினால் வரும் வாடை விலங்குகளை ஈர்த்திருக்கும் என்றும், அதில் இருந்து தம்மைக் காக்க ஒரு மரக்கட்டையை வைத்து அவற்றைத் துரத்தி இருப்பர் என்றும் நிரந்தரக்குடியிருப்பு, நாகரிக வளர்ச்சியின் வழி இது மாற்றமுற்று அதன் குறியீடாக உலக்கை வைக்கும் முறை வந்திருக்கலாம் என்றும் நாட்டுப்புறவாய்வாளர் கருதுவர். மேலும் அந்தப்பெண்ணைப் பேய்கள் பிடிப்பது சுலபம் என்பதனால் உலக்கை, கரி என்பனவற்றை வைத்து அதனைத் தடுக்க முடியும் என்ற நம்பிக்கையும் காணப்பட்டது. பேயோட்டுதலில் விளக்குமாற்றைப் போல உலக்கைக்கும் முக்கிய இடம் வழங்கப்படுகிறது.



மரணச்சடங்கிலும் திருப்பொற்சுண்ணம் இடிக்கும் வழக்கம் உண்டு. இந்தச்சுண்ணம் இடித்தல் பற்றி எண்பதுகளில் யாழ்ப்பாணத்தில் பெரும் வாதங்கள் நிகழ்ந்திருப்பினும் இன்றுவரை இது நிகழ்கின்றது. மேலும் சுடலையில் பிணம் எரித்து விட்டு வீடு திரும்பும் போது வாசலில் வேப்பிலையிட்ட மஞ்சள் நீரால் கால்கழுவி வேப்பிலையை வாயிலிட்டுச் சப்பி குறுக்கே இடப்பட்ட உலக்கையைத் தாண்டி வரும் வழக்கம் காணப்படுகிறது. உலக்கையைத் தாண்டுதல் ஊடாகத் துக்கத்தினின்றும் அல்லது சுடலையின்றும் விடுபடுதல் மற்றும் சுடலையிலிருந்து கூடவே வந்திருக்கக்கூடிய காத்துக் கருப்பை (பேய்) உள்ளே வரவிடாது உலக்கை தடுக்கும் என்னும் நம்பிக்கை என்பன இதனூடாகப் பேணப்படுகின்றன. இவற்றை 'உளவியல் சடங்கு' என நாம் குறிப்பிடலாம். யாழ்ப்பாணத்தில் உலக்கையை வைத்துச் சாத்திரம் சொல்லும் 'உலக்கைச் சாத்திரியாரும்' இருக்கிறார்.

நாட்டார் இலக்கியங்களில் சிறுவர்பாடல், சடங்குப்பாடல், தாலாட்டு, ஒப்பாரி, காதல் முதலான பாடல்களிலும் உரல், உலக்கை பற்றிக் கூறப்படுகிறது.

காகம், உலக்கையைத் தூக்கும்போது அதன் மேல் இருக்கவும் முடியாது, உரலில் இருப்பதை எடுக்கவும் முடியாது என்பதை உணர்த்தும் 'உலக்கை மேல் காக்கையாக' எனும் மரபுத்தொடர் உணர்த்தும். 'அவலை நினைச்சு உரலை இடிக்காதே' எனும் பழமொழியும் 'அக்காள், சப்பாணி, தங்கை நர்த்தனப் பெண் இந்த இருவரும் இல்லாவிட்டால் குடித்தனப் பெண் சிணுங்குவாள்' எனும் விடுகதையில் அக்காள், தங்கை என்பன முறையே உரல், உலக்கை என்பது, அவை சாதாரண மனிதரது வாழ்வில் பெற்றிருந்த முக்கி யத்துவத்தைக் காட்டுகின்றன. புறநானூறு, குறுந்தொகை, சிலப்பதிகாரம் போன்றவற்றில் 'வள்ளைக்கூத்து', வள்ளைப் பாட்டு' என்பன இடம்பெற்றுள்ளன. இவை உரற்பாட்டு, உலக்கைப்பாட்டு, என்றும் கூறப்படுகின்றன. "பா அடி உரல பகுவாய் வள்ளை, ஏதில் மாக்கள் நுவறலும் நுவல்ப" (புறம்.22) எனப் புறநானூறில் வள்ளைக் கூத்து கூறப்படுகிறது.

ஜெந்திக்குமார் சேர் "நீயொரு உலக்கப் பயலப்பா" எண்டுதான் யாரையும் ஏசுவார். எனக்கு அப்ப விளங்குறேலை. உலக்கைக் கொழுந்து என்பதற்கு 'புத்திக் குறைவுள்ளவன்' என மெட்ராஸ் தமிழகராதி விளக்கம் கூறுகிறது. அம்மம்மா பொரிச்சமிளகாய்ச் சம்பலிடிச்சு முடிச்சுக் கிண்ணத்தில் சம்பல எடுத்துக் கொண்டு போக, உலக்கையையும் உரலையும் வழிச்சுச் சாப்பிட நாங்கள் சண்ட பிடிப்பம். அந்தச் சந்தோசத்தையும் 'கிரைண்டர்' பறிச்சுப்போட்டுது.

ம்ம்ம்.........!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார்வோ எனும் நாய்க்குட்டிகளின் காலன்




Dr.எஸ்.கிருபானந்தகுமாரன்
கால்நடை மருத்துவர்
செட்டிகுளம், வவுனியா

உலகெங்கிலும் நாய்களில் குறிப்பாக நாய்க் குட்டிகளில் பார்வோ (parvo viral gastroen teritis ) என்னும் இரத்தக் கழிச்சல் நோய் அதிகளவு உயிரிழப்பை வருடாந்தம் ஏற்படுத்துகிறது. இலத்தீன் மொழியில் பார்வோ என்றால் 'மிக நுண்ணிய' என்று பொருள். 20 நனோ மீற்றர் அளவேயான மிக மிகச் சிறிய டி.என்.ஏ வைரஸான பார்வோ [ Canine parvo virus 2 CPV2] ஆறு வாரம் முதல் ஆறு மாதம் வரையான வயதுடைய நாய்க்குட்டிகளை அதிகமாகத் தாக்கும் .அதே வேளை நடைமுறையில் ஆறு வாரத்துக்கும் குறைவான மற்றும் ஆறு மாதத்துக்கு மேற்பட்ட நாய்களையும் பாதிப்பதை அவதானிக்க முடிகிறது.

முறையான தடுப்பூசிகளை சரியான நேரத்தில் செலுத்தாத நாய்க்குட்டிகள் பார்வோ தொற்றுக்கு உள்ளாகுவதோடு நோய் வந்த பின் முறையான சிகிச்சை செய்யப்படாத மற்றும் சிகிச்சை பெறப்படாத நாய்கள் அதிகளவு இறக்கின்றன.


1970 களில் அமெரிக்கா மற்றும் சில ஐரோப்பிய நாடுகளில் பூனைகளுக்கு ஏற்படும் Feline panleuko penia என்ற வைரஸினை ஒத்த 'பார்வோ வைரஸ்' நோய் கண்டறியப்பட்டது. அதன் தொடர்ச்சியாக உலகெங்கிலும் பல இடங்களில் மரபணு ரீதியில் வேறுபட்ட பார்வோ நோய் நிலைகள் [ CPV2a,CPV2b,CPV2c] அவதானிக்கப்பட்டிருந்தன இந்த நோயை பொறுத்த வரையில் இரண்டு வகைகள் உள்ளன.



**1.குடலினை / உணவு கால்வாய் தொகுதியை பாதிக்கும் வகை [ intestinal form]**
**2.இதயத்தைப் பாதிக்கும் வகை.[ Cardiac form]**

குடலினை அல்லது உணவுக் கால்வாயைப் பாதிக்கும் வகைதான் பொதுவாக உலகெங்கிலும் காணப்படுகிறது. நோய்த் தொற்றுடனான கழிவுகளை உண்ணும் நாய்களில் இந்த வைரஸ் தொற்றிக் கொள்வதுடன் தொண்டைப் பகுதியின் நிணநீர்க் கணுக்களில் பெருகி இரத்தத்தில் கலக்கிறது. நிணநீர்க் கணுக்கள்,என்பு மச்சை மற்றும் மிக விரைவாக பிரிவடையும் சிறுகுடல் பகுதிகளிலும் இந்த வைரஸ் தாக்குகிறது. சிறுகுடல் பகுதியில் காயங்கள் ஏற்படுவதுடன் வாந்தி, வயிற்றோட்டம் போன்ற அறிகுறிகளும் தோன்றுகின்றன. என்புமச்சை பாதிப்படைவதால் குருதி அணுக்களின் உற்பத்தியும் பாதிப்படைகிறது.

காயங்கள் மற்றும் குருதி அணுக்களின் அளவு குறைவதால் காற்று மற்றும் காற்றின்றி வாழும் நுண்ணுயிர்களும் பெருகி நிலையை மோசமாக்குகின்றன. தொடர்ச்சியான அதிகளவு வாந்தி வயிற்றோட்டம் காரணமாக நீர் இழப்பு (dehydration/ hypovolemic shock] ஏற்பட்டு மரணம் சம்பவிக்கிறது. அதிக புரத [ hypo protenemia] மற்றும் எரி சக்தி [hypo glycaemia]இழப்பும் ஏற்படுகிறது. இதயத்தை பாதிக்கும் நோய்த் தொற்று மிகக் குறைவாகவே அவதானிக்கப் படுகிறது. தாயின் கருப்பையில் இருந்து இந்தத் தொற்று ஏற்படுகிறது.பிறந்தது முதல் எட்டு வாரங்களில் இந்த நிலை ஏற்படுகிறது. மிக விரைவாகப் பிரிகையடையும் இதயத் தசைகள் பாதிக்கப்பட்டு [heart faiiure] குட்டிகள் இறக்கின்றன.இலங்கையைப் பொறுத்தவரை விட்டு விட்டு பெய்யும் மழைக்காலங்களில் குறிப்பாக வடக்கு, கிழக்கில் ஏப்ரல், மே, ஜூன், ஜூலை மாதங்களில் இந்த நோயின் தாக்கத்தை அவதானிக்க முடிகிறது. எனது அனுபவத்தின் அடிப்படையில், எனது சிகிச்சை ஆயத்தங்களை இந்தக் காலப்பகுதியில் செய்து வருகிறேன். நாட்டின் ஏனைய பகுதிகளில் வருடத்தின் ஆரம்பத்திலேயே இந்த நோய் நிலையை அதாவது ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களில் அவதானிக்க முடிகிறது. அண்மைய நாள்களில் நாட்டின் ஒரு பகுதியில் இருந்து இன்னொரு பகுதிக்கு நாய்க்குட்டிகளை அதிகளவில் கொண்டுவந்து பலர் விற்பதால் இந்த நோய் மிக விரைவாக காலம் கடந்தும் பரவலடைகிறது.




இந்த நோய் பொதுவாக ரொட்வைலர்[ Rottweiler] ,லப்ரடோர் [ Labrador] கோல்டன் ரெட்ரேவர்[ Golden retriever] டோபர்மான் [ Doberman] ஜேர்மன் செப்பெர்ட் [ German Shepard] போன்ற வெளிநாட்டு இன நாய்களையே அதிகளவு பாதிக்கின்ற அதேவேளை அண்மைக் காலமாக நாட்டு இன நாய்களையும் பாதிப்பதைக் காணமுடிகிறது. நோய் ஏற்படும் காலத்தில் தடுப்பூசி செலுத்தப்படாத குறித்த வயது பருவத்துக்குள் வரும் நாய்கள் பார்வோ ஆபத்தை எதிர் கொள்கின்றன. நான் மேலே சொன்ன உயர்வகை வெளி நாட்டு நாய்களுக்கு சிகிச்சையளிப்பது மிக மிகக் கடினம். அவை தப்பும் விகிதமும் மிக மிகக் குறைவு. ஓரளவு வயதான உள்ளூர் நாய்க் குட்டிகள் சிகிச்சையின் பின் சரியாகின்றன.அவற்றின் குணமடையும் விகிதம் மிக அதிகம். நான் முன்பு கூறியது போல பெரும்பாலும் சிறிய நாய்களையே முதலில் இந்த வைரஸ் பாதிக்கின்றது. பின்னர் நோய் பாதித்த சிறிய நாய்களுடன் இருக்கும் தடுப்பூசி போடப்படாத பெரிய நாய்களும் பாதிப்புக்கு உள்ளாகின்றன. குறித்த பகுதியில் ஏற்பட்டுள்ள வைரஸ் வகை, நாயின் நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் ஏனைய சமாந்தரமான நோய்கள் [ உண்ணிக் காய்ச்சல் ] காரணிகளின் அடிப்படையில் இந்த நோயின் தீவிரத் தன்மை வேறுபடுகிறது. இந்த நோய் நாய்களை மட்டுமின்றி நரி, ஓநாய்களையும் பாதிக்கின்றது.

பார்வோ நோயுள்ள ஒரு நாயிலிருந்து இன்னொரு நாய்க்கு அவற்றின் கழிவுகளை உட்கொள்வதன் மூலம் [ Fecal -oral route] ,நோய் உள்ள நாய்களை தொட்ட நபர்களின் உடைகள், காலணிகள் மூலமும் நாய்குட்டிகள் விற்கும் இடங்கள் , சரியாக பராமரிக்கப்படாத கால்நடை வைத்திய நிலையங்கள் மூலமும் விரைவாகப் பரவலடைகிறது. அண்மைக் காலங்களில் இலங்கையில் அதிகரித்துள்ள 'petshops' எனும் நாய்க் குட்டி விற்கும் கடைகளில், சரியான தடுப்பூசித் தகவல்கள் இல்லாத இடங்களில் இருந்து குட்டிகளை கொண்டு வந்து விற்பதை காணமுடிகிறது. பல நாய் குட்டிகளை ஒரு இடத்தில் வைத்திருக்கும் போது மிக இலகுவாக தொற்று ஏற்படுகிறது. அத்துடன் சில கால்நடை வைத்திய நிலையங்களில் நோயுள்ள மற்றும் நோய் இல்லாத நாய்களை ஒரே மேசையில் வைத்து சிகிச்சையளிப்பதையும் காணமுடிகிறது.

அத்துடன் நாய்க் குட்டிகள் எடுக்கும் வாந்தி மற்றும் வயிற்றோட்டம் சரியாக அகற்றப்படாமல் இருப்பதையும் காண முடிகிறது. இந்த மாதிரி இடங்களுக்கு கொண்டு செல்லும் சுகதேகி நாய்கள் கூட தொற்றுக்கு உள்ளாகின்றன. தடுப்பூசிக்குச் செல்லும் நாய்களை மிகவும் பிரத்தியேகமாக கவனிக்கும் சுகாதாரமான கால்நடை வைத்திய நிலையங்களை தேர்ந்தெடுப்பது மிகவும் பாதுகாப்பானது.

சில வேளைகளில் வீட்டில் ஒன்றாக வளர்க்கப்படும் நாய்களில் ஒன்றுக்கு வெளிப்படையாகத் தொற்று ஏற்பட்டிருக்கும் அல்லது இறந்திருக்கும். ஏனைய குட்டிகள் அறிகுறிகளை வெளிப்படுத்தாது [sub clinical] இருக்கலாம்.இந்த நிலையில் நாய்களைக் கொண்டு வந்து வைத்தியருக்கு எதுவுமே சொல்லாது தடுப்பூசி போடுவார்கள். அது போல சில நாய்கள் ஆரம்பத்தில் சிறிது சிறிதாக நோய் அறிகுறிகளைக் காட்டும். அதனையும் மறந்து அவசர அவசரமாகத் தடுப்பூசியைப் போடுவார்கள்.இதன் காரணமாக நாய்கள் ஓரிரு நாட்களில் நோய் அறிகுறியை முழுமையாக ,அதுவும் கடுமையாகக் காட்டும். அப்படியான நாய்களின் உயிரைக் காப்பாற்றுவது சிரமமாக இருக்கும். கட்டாயம் கால்நடை வைத்தியரிடம் மேற்படி வேறு நாய்கள் நோய் தொற்றுக்கு உள்ளாகியதை சொல்ல வேண்டும். அப்படிச் சொல்லும் பட்சத்தில் அந்த நாய்களுக்கு தொடக்கத்திலேயே தீவிர சிகிச்சையை வழங்கி , அவற்றின் உயிரைக் காப்பாற்ற முடியும்.

அண்மையில் ஏற்பட்டிருக்கும் கொரோனா நிலை காரணமாக இலங்கையில் நாய்களுக்கு செலுத்தப்படும், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதியாகும் தரமான தடுப்பூசிகள் கிடைப்பது குறைவாக இருக்கிறது. ஒரு சில பெரிய கால்நடை வைத்திய நிலையங்களில் மாத்திரமே தரமான தடுப்பூசிகளின் இருப்பு காணப்படுகிறது.

இந்த நிலையில் பல இடங்களில் தரம் குறைந்த தடுப்பூசி ரகங்களை ஏற்றுவதையும் காணமுடிகிறது.குறிப்பாக தடுப்பூசிகள் விற்கும் மருந்தகங்களில் இவ்வாறு தரம் குறைந்த தடுப்பூசிகள் விற்கப்படுகின்றன. மேற்படி தரமற்ற ஊசிகளைப் போட்ட நாய்களுக்கு, தடுப்பூசி போடாத நாய்களுக்கு ஏற்படும் நோயை விட அதிக வீரியத்துடன் நோய் அறிகுறிகள் தோன்றுகின்றன.

நாய்க்குட்டிகளை விற்பவர்கள் மிகக் குறைந்த நாட்களில், அதாவது ஒரு மாத வயதுக்கும் குறைந்த குட்டிகளை மொத்தமாக கொள்வனவு செய்து, மக்களிடம் விற்று விடுவார்கள். தாயிடம் சரியாக தாய்ப்பாலை அருந்தாத அந்தக் குட்டிகளிடம் சரியான நோய் எதிர்ப்பு சக்தி [Immunity] கிடைத்திருக்காது. அவை இலகுவில் நோய்த் தொற்றுக்கு உள்ளாகும் வாய்ப்பு உள்ளவை. அத்துடன் ஒரு மாத வயதுக்குள் சிலர் அவற்றுக்கு முதல் பார்வோ தடுப்பூசியையும் போட்டு விடுகிறார்கள். -இது மிக ஆபத்தானது. சரியாக தடுப்பூசி செலுத்தப்பட்ட தாய்நாயிடம் இருந்து கிடைக்கும் பிறபொருள் எதிரிகள் [Maternal antibodies] அந்தக் குட்டிகளில் அதிகளவில் ஆறு வாரம் வரை காண்படுவதால் மிகக் குறைந்த காலத்தில் தடுப்பூசி செலுத்தப்படும் போது அந்தப் பிறபொருள் எதிரிகள் தடுப்பூசியைச் செயலிழக்க [ neutralization]செய்து விடும். இதனால் எந்த நோய் எதிர்ப்பு சக்தியும் இல்லாது புதிய பார்வோ தொற்று ஏற்படும் வேளையில் நாய்கள் பாதிப்படைகின்றன. மிகக் குறைந்த வயதில் ஏற்றும் தடுப்பு மருந்துகள் சில இடங்களில் கிடைக்கின்றன. அதாவது தாயின் பிறபொருள் எதிரிகளை அந்தத் தடுப்பூசிகள் இடையூறு செய்யமாட்டா. எனினும் அந்தத் தடுப்பூசிகள் சற்று விலைகூடியவை. அண்மையில் கொரோனா காலத்தில் மக்களின் செல்லப் பிராணி வளர்ப்பு மோகம் அதிகரித்ததை பயன்படுத்தி,நாய்க்குட்டிகளை அதிகவிலையில் விற்கும் கடைக்காரர்கள் , சரியான தடுப்பூசிகளை சரியான வயதில் செலுத்தச் சொல்வதில்லை. அல்லது தாங்களே தரம் குறைந்த மருந்துகளை சட்ட விரோதமாக பெற்றும், செலுத்தியும் விடுகின்றனர். இது மேலும் நோய் நிலையை அதிகரிக்கிறது.




(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அரிமாநேத்ரன்

# துப்பறியும் AK67

16

'காமிக்ஸ் தொடர்'

சித்திரம் – எஸ்.விநோபா
கதை – இ.சு.முரளிதரன்






# உளார்ந்தினம்

○ இராகவன்

29

குலமக்கா வீட்டால வெளிக்கிட்டு வரேக்குள்ள வலதுபுறமிருக்கிற முதலாவது வீடுதான் வைத்திலிங்கமண்ணை வீடு. நான் இதற்கு முன்னம் துரைமாமாவைப் பற்றிச் சொல்லேக்குள்ள சாடையாய் வைத்திலிங்கமண்ணையைப் பற்றியும் சொல்லியிருக்கிறன். அது உங்களுக்கு நினைவில்லாட்டிலும் பரவாயில்லை. இப்ப அவரைப் பற்றிப் பாப்பம். நரைச்சதலை, நீள்வட்ட முகம். கோல்ட் பிறேம் மூக்குக் கண்ணாடி எப்பவும் போட்டிருப்பார். உள்ளொடுங்கின அடக்கமான குரல். நல்ல கறுத்த நெடுவல். ஒரு 'செல்ல வண்டி'. எப்பவும் வெள்ளைச் சாறத்தைச் சண்டிக்கட்டாய்க் கட்டியிருப்பார். அநேகமாய் வெறும் மேலோடைதான் திரிவார். சேர்ட் போட்டிருந்தால் ஒரு கைக்கு மட்டும் போட்டுத் தொங்க விட்டுக் கொண்டு திரிவார். கதை குறைவு. அளந்தளந்து கதைக்கிற மாதிரித்தான் கதைப்பார். அவரோட மனிசிக்காரியை நாங்கள் ரத்தினமக்கை எண்டு கூப்பிடுவம். நல்ல முசுப்பாத்தியான மனிசி. என்னோட்டச் சின்னப் பொடியளக் கண்டால் குரலை மாத்திக் கதைச்சுப் பகிடிவிடுவா. வைத்திலிங்கண்ணையின்ரை இடுப்பளவு உயரந்தான் ரத்தினமக்கை இருப்பா. நல்ல கட்டை. சின்ன மனிசி. கீச்சிட்ட குரல். எப்பவும் மெல்லிய நீலக்கலரில வலு நீற்றாய் சீலையுடுத்துக் கொண்டுதான் திரிவா. இரண்டு பேருக்கும் பிள்ளையளில்லை.

வைத்திலிங்கமண்ணையோட நெருக்கமான ஆக்கள் அவரை முதலாளி எண்டுதான் சொல்லுவினம். அப்ப எங்கடையூருக்குள்ளயிருந்த ஒரேயொரு முதலாளி அவர்தான். விசாலமான வளவுக்குள்ளயிருந்த பெரிய கல்வீடும் அவரின்ரதான்.

நாலைஞ்சு அறையள். எல்லாத்துக்குள்ளயும் மூடை மூடையாய்த் தவிடு அடுக்கியிருக்கும். வீட்டுக்கு முன்னால கிளிசிறியா மரங்கள் அடர்ந்து போயிருக்கும். அதோட ஒரு பெரிய தொட்டி. அதுக்குள்ள தராசுப்படிகளிருக்கும். அதுகளையெல்லாம் என்னோட்டப் பொடியள் இரண்டு கையளச் சேர்த்தாலும் தூக்கேலாது. அவ்வளவு கனம். எல்லாத் தராசுப் படியளுக்கும் கைப்பிடியளிருக்கும். அங்கால ஒரு பென்னம்பெரிய தராசு கட்டியிருக்கும்.

எந்தப் பக்கம் பாத்தாலும் கொத்துவிறகு குவிக்கப்பட்டிருக்கும். பின்னேரங்களில தவிடு வாங்கிறதுக்கும் விறகு வாங்கிறதுக்குமெண்டு சனங்கள் குவியும். நான் ஏற்கனவே சொன்னமாதிரி வைத்திலிங்கமண்ணை இரண்டு மூண்டு லொறியளும் ஒருகாரும் வைச்சிருந்தவர். இந்த லொறியளுக்குத் துரைமாமா தான் தனிப்பெரும் றைவர்.

வவுனியா, மதவாச்சி, அநுராதபுரம் எண்டு போய் தவிடும், விறகும் ஏத்திக் கொண்டு வாறது அவர்தான். சில நேரம் துரைமாமாவோடை வைத்திலிங்கமண்ணையும் லொறியில் ஏறி, முன்னுக்கிருந்து போறதைக் கண்டிருக்கிறன்.

வைத்திலிங்கண்ணை வீட்டில் இன்னுமொரு விசேசமிருக்கு. அவரின்ர உயரமான வீடு எண்டதால அங்கை நிற்கிற புறாக்கள் எப்பவும் கூடியிருந்து குறுகுறுத்துக் கொண்டிருக்கும். அப்பெல்லாம் புறா வளர்க்கிறது நடைமுறைக்கு வரேல்ல. அதால எங்களுக்கது புதினமாயிருக்கும். வைத்திலிங்கமண்ணை வீட்டிலயிருக்கிற பெரிய தராசின்ர தட்டுக்களில் ரெண்டு ரண்டு பேராய் நாலுபேர் ஏறி நிக்கலாம். தராசுத் தட்டுகளின்ர நாலு மூலையிலயும் பெரிய சங்கிலி கோத்து மேலை பிணைச்சிருக்கும். நாங்கள் தராசு சும்மா கிடக்கேக்குள்ள அதில யேறிவிளையாடுவம். வைத்திலிங்கண்ணை அதைப் பாத்துச் சிரிச்சுக் கொண்டு போவார். ஒண்டும் பேசமாட்டார். அந்த வீட்டுக்குள்ள நுழைஞ்சால் தவிடும் கிளிசிறியாக் குழையும் சேர்ந்து ஒரு மணமடிக்கும். இப்பவும் அந்த மணம் என்ரை நாசிக்குள்ள தேங்கியிருக்கு. இப்பவும் எனக்கு எங்கை கிளிசிறியா மரத்தைக் கண்டாலும் உடனை வைத்திலிங்கமண்ணையும் துரை மாமாவும்தான் முன்னுக்கு வந்து நிப்பினம்.

○ ம. மயூரபாலன்

# உணர்ந்த பின் நம்புக!



ஒரு இளைஞன் கடவுளிடம் மிகவும் கடுமையாகப் பிரார்த்திக்கிறான். கடவுளும் அவன்முன் தோன்றி "உனக்கு என்ன வரம் வேண்டும்?" என்று கேட்க, அவனும் தனக்கு நல்ல வேலை வேண்டும் எனக் கேட்கின்றான். நல்ல வேலையும் அவனுக்கு கிடைக்கிறது. சில வருடங்கள் கழிந்த பின்னர் அவன் மீண்டும் பிரார்த்தனை செய்கின்றான். அப்பொழுதும் கடவுள் அவன்முன் தோன்றி "உனக்கு என்ன வரம் வேண்டும்?" எனக் கேட்க, அவன் தனக்கு நல்ல மனைவி அமைய வேண்டும் எனக் கேட்கின்றான். அதுவும் அவனுக்கு அமைகிறது. அவ்வாறு அவன் வீடு, குழந்தைகள், வேலையில் பதவி உயர்வு என காலத்துக்குக் காலம் கேட்கின்றான். இறுதியாக மிகவும் வயது முதிர்ந்த நிலையில் கடவுளைப் பிரார்த்திக்கின்றான். அப்பொழுது கடவுளும் அவன்முன் தோன்றி "உனக்கு என்ன வரம் வேண்டும்?" எனக் கேட்கின்றார்.

அதற்கு அவன் "இப்பொழுது எனக்கு வயது முதிர்ந்து, உடல் நலம் குன்றி மிகவும் அவஸ்தைப்படுகின்றேன். எனக்கு நிம்மதியையும் அமைதியையும் ஆனந்தத்தையும் தாருங்கள்" எனக் கேட்கின்றான். அதற்கு கடவுளும் "இதனை நீ முதல் முறை என்னைச் சந்தித்த பொழுது கேட்டிருந்தால் அப்பொழுதே உனக்கு அதனைத் தந்திருப்பேனே" எனக் கூறுகின்றார்.

இது ஒரு கற்பனைக் கதையாக இருந்தாலும் எமது வாழ்க்கையுடனும் இது ஒத்திருப்பது போல தெரிகின்றதல்லவா. நாமும் எமக்குத் தேவையான நிம்மதியையும் ஆனந்தத்தையும் வெளியில் தேடுகின்றோம். ஆனால் அவை வெளிப்பொருட்களில் தங்கி இருப்பதில்லை என்பதை இறுதியில் தான் அறிகின்றோம். கடவுள் பற்றிய கேள்விக்கும், அவ்வப்போது 'கடவுள் இருக்கிறார் என நம்பினால் போதும்' என்று நினைக்கிறோமே தவிர, கடவுளின் இருப்பை உறுதி செய்யத் தவறுகிறோம்.

நீங்கள் ஒரு கடைக்கு புடைவை வாங்கச் செல்கிறீர்கள். கடைக்காரரிடம் நல்ல தரமான துணிகளை காட்டச் சொல்கிறீர்கள். கடைக்காரரும் தனக்கு தெரிந்த அளவுக்குத் துணிகளை எடுத்துப் போடுகின்றார். அப்பொழுது நீங்கள் என்ன செய்வீர்கள்? துணியை தொட்டுப் பார்ப்பீர்கள். ஏன் அதனைத் தொட்டுப் பார்க்க வேண்டும்? கடைக்காரர் நல்ல துணி என்று கூறினாலும் அதை தொட்டுப் பார்த்தால்தான் உங்களுக்கு ஆறுதல் வருகிறது. 'ஆமாம் நல்ல துணிதான்' என்ற திருப்தி ஏற்படுகிறது.

உங்களது மகன் பாடசாலையில் இருந்து வருகிறான். நீங்களும் "தேர்வு முடிவுகள் எப்படி?" எனக் கேட்கிறீர்கள். அதற்கு மகனும் "நான் தேர்வு அடைந்து விட்டேன் " எனக் கூறுகிறான். அப்பொழுது நீங்கள் என்ன செய்வீர்கள்? "ரிப்போர்ட் கார்ட்டை காட்டு" என்பீர்கள். உங்களது கண்களால் பார்த்தால் தான் உங்களுக்கு நம்பிக்கை உண்டாகிறது.

இவ்வாறு நாம் உலகத்து விடயங்கள் எல்லாவற்றையும் தொட்டுப் பார்த்து நுகர்ந்து உறுதி செய்து கொள்கிறோம். ஆனால் யாராவது கடவுள் உங்களின் உள்ளே உள்ளார் என்று கூறினால் "ஆமாம் கடவுள் என்னுள்ளே உள்ளார்" என்று கூறிவிடுகிறோம். அதற்கும் அப்பால் சென்று "கடவுள் என்னுள்ளே உள்ளார் என்றால் அவரை நான் தரிசிக்க வேண்டும் உணர வேண்டும்" என்று எண்ணுவதில்லை. பசி எடுக்கும் போது உணவு தேவை. தாகம் எடுக்கும் போது தண்ணீர் தேவை. களைப்பு ஏற்படும் போது ஓய்வு தேவை. இவ்வாறான உடல் ரீதியான தேவைகளைப் பூர்த்தி செய்ய தெரிந்த நாம், எமது உள்ளத்தின் தேவையை பூர்த்தி செய்ய மறந்து விட்டோம் அல்லது அதனை பூர்த்தி செய்வதை பிற்போடுகிறோம். இந்த உள்ளத்தின் தேவை என்ன? உள்ளம் அமைதியை அனுபவம் செய்ய விரும்புகின்றது. உள்ளத்தில் உள்ள தெய்வீகத்தை உணர விரும்புகின்றது. இவற்றைப் பற்றி உரையாடுவது மிகவும் இலகு. கடவுள் எல்லா இடமும் நீக்கமற நிறைந்துள்ளார் என கூறுவது மிகவும் சுலபம். ஆனால் உள்ளத்திலே வீற்றிருக்கும் கடவுளை உணர விரும்பினால் அதற்கான முயற்சியை நாங்கள் தான் போட வேண்டும். அதற்கான தேடல் எங்களில் இருந்துதான் ஆரம்பிக்க வேண்டும். ஒரு விடயத்தைப்பற்றி படிப்பதால், எழுதுவதால் நாம் அதனை கொள்கையளவில் அறிந்து கொள்ளலாம். ஆனால் அதன் மூலம் அனுபவம் ஏற்படாது. நாங்கள் சைக்கிள் ஓடக் கற்றுக்கொள்ள வேண்டும் என்றால் மணிக்கணக்காக எவ்வாறு பெடலை அழுத்த வேண்டும், எவ்வாறு நேரே பார்க்க வேண்டும் என்றெல்லாம் கேட்டு அறியமுடியும். ஆனால் ஒரு சைக்கிளில் ஏறி அமர்ந்து அதனை ஓட முயற்சிக்காத வரை அது எவ்வாறு இருக்கும் என்பதை நாங்கள் புரிந்து கொள்ளமாட்டோம்.

இந்த மூச்சு வந்து போகும் வரை நாங்கள் மனிதர்களாக இருப்போம். மனிதன் என்ற ரீதியில் நாங்கள் பல விடயங்களை செய்யலாம். ஆனால் நாங்கள் ஒரு விடயத்தை நிட்சயம் செய்ய முடியும். அதுதான் எங்களின் உள்ளத்தில் வீற்றிருக்கும் எல்லையில்லாத தெய்வீகத்தை அனுபவம் செய்ய முடியும். . எப்பொழுது நாங்கள் அதனை அனுபவம் செய்கிறோமோ அன்று எங்கள் வாழ்வு பயனுள்ளதாகும். முதலில் உணருங்கள் பின்னர் நம்புங்கள்.

**"கடவுள் எல்லா இடமும் நீக்கமற நிறைந்துள்ளார் என கூறுவது மிகவும் சுலபம். ஆனால் உள்ளத்திலே வீற்றிருக்கும் கடவுளை உணர விரும்பினால் அதற்கான முயற்சியை நாங்கள் தான் செய்யவேண்டும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

# ரஷ்ய மக்களும் ஈழத்தமிழர்களும்



ரஷ்ய மக்களைப் புறக்கணித்த உக்ரைன் டான்பாஸ் பகுதி ரஷ்ய மக்கள் 1994ஆம் ஆண்டு தம் பகுதிக்கு உரிய அதிகாரப்பகிர்வைக் கோரினர். தங்கள் ரஷ்ய மொழி ஆட்சிமொழியாக வேண்டுமென்றும் வாதிட்டனர். கூட்டாட்சி முறை கொண்டு வரப்பட வேண்டுமென வற்புறுத்தினர். இதற்காகப் பொது வாக்கெடுப்பும் நடத்தப்பட்டது. அந்தப் பொதுவாக்கெடுப்பு 90 வீதம் வெற்றியடைந்தது. ஆனாலும் அந்த மக்களின் அனைத்துக் கோரிக்கைளும் உக்ரைன் அரசினால் புறக்கணிக்கப்பட்டன. டான்பாஸ் பகுதியின் பொருளாதார வளர்ச்சி நிராகரிக்கப்பட்டது. உக்ரைன் அரசு,ரஷ்ய மக்கள் வாழும் டான்ஸ்பாஸில் எந்தவொரு அபிவிருத்திகளையும் செய்யவில்லை. உக்ரைனின் தேசியவாத, பெரும்பான்மை மன ஆதிக்கநிலையே இதற்குக் காரணமானது. உக்ரைன் இனவாதக் குழுக்கள் மேலும் மேலும் பெருகி, டான்பாஸ் பகுதி ரஷ்ய மக்களை அச்சுறுத்த ஆரம்பித்தன. அந்த இனவாதக் குழுக்களுக்கு உக்ரைன் அரசு ஆதரவும் கொடுத்தது. ஆனால் அமெரிக்கச் சார்பு மேற்குலக மற்றும் ஐரோப்பிய ஊடகங்கள் ரஷ்யாவின் படைக் குவிப்புகளை மாத்திரமே ஊதிப் பெருப்பித்தன. ரஷ்ய இனமக்கள் மீது உக்ரைன் நடத்திய இன அழிப்பை அமெரிக்கா= இங்கிலாந்து போன்ற நாடுகள் பார்த்துக் கொண்டிருந்தன. எதுவுமே பேசவில்லை. தடுக்க முற்படவுமில்லை. 1990 களில் ஆரம்பித்த இந்த மோதலைத் தீர்க்கவே 2015 இல் ஒப்பந்தம் செய்யப்பட்டது.ஆனால் OSCE எனப்படும் பாதுகாப்பு ஒத்துழைப்புச் சங்கம் உரிய முறையில் செயற்படத் தவறியது. பிரித்தானியா, ஜேர்மன்,பிரான்ஸ் உள்ளிட்ட அமெரிக்கச் சார்பு ஐரோப்பிய நாடுகளை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட அந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த அமெரிக்காவும் விரும்பியிருக்கவில்லை. இதுவே உக்ரைன் படைகள், ரஷ்யமக்களை இன அழிப்புச் செய்யும் நடவடிக்கைகளில் கடந்த ஏழு ஆண்டுகளாக ஈடுபட வசதியாக இருந்தது. அமெரிக்கச் சார்பு நாடுகளினால் ரஷ்யமக்கள் பாதுகாக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் பலமாக எழுந்தன.

## ஈழத்தமிழர்களுக்கும் இதே துரோகமே!

இதன் பின்னணியிலேயே உக்ரைன் மீது ரஷ்யா படையெடுக்க ஆரம்பித்தது. ஆனால் இந்தக் காரணங்கள் அனைத்தும் மூடி மறைக்கப்பட்டு, உக்ரைன் அமெரிக்காவை மையப்படுத்திய நேட்டோ அணியில் இணையவுள்ளதாலேயே ஆத்திரமடைந்து ரஷ்யா போரை ஆரம்பித்ததாக அமெரிக்கச் சார்பு சர்வதேச ஊடகங்கள் செய்திகளை வெளியிடுகின்றன. இதேபோன்ற நிலைதான் ஈழத்தமிழர்களுக்கும் 2002 ஆம் ஆண்டு நடந்தது.

அதாவது 2002 ஆம் ஆண்டு நோர்வேயின் ஏற்பாட்டில் இலங்கையில் இடம்பெற்ற சமாதானப் பேச்சுக்களின் போது இலங்கை இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான போர் நிறுத்தத்தைக் கண்காணிக்க உருவாக்கப்பட்ட போர் நிறுத்தக் கண்காப்புக்குழு, உரிய முறையில்செயற்படத்தவறியமையே 2006 ஆம் ஆண்டு மீண்டும் போர் உருவாகக் காரணமாகியது.

போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவில் அங்கம் வகித்திருந்த அமெரிக்கச் சார்பு நாடுகளான நோர்வே, சுவீடன், நெதர்லாந்து. உள்ளிட்ட நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கை அரசாங்கத்துக்குச் சாதகமாகச் செயற்பட்டனர்.ஆனால் மீண்டும் போர் ஆரம்பித்ததும் புலிகள் மீதே பழிவிழுந்தது. புலிகள் சமாதானத்தை விரும்பவில்லை என்று அமெரிக்கச் சார்பு மேற்குலக ஊடகங்கள் குற்றம் சுமத்தியிருந்தன.

2009 இல் வன்னிப் பிரதேசத்தில் இறுதிப் போர் ஆரம்பமானபோது. அங்கிருந்த ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகம் மூடப்பட்டது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்கூட தனது அலுவலகத்தை மூடிவிட்டு வன்னிப் பிரதேசத்தில் இருந்து வெளியேறி, கொழும்புக்குச் சென்றது. சர்வதேச் சாட்சியங்கள் இன்றி வன்னியில் போர் நடத்தப்பட்டது.

இதேபோன்றுதான் 1992 ஆம் ஆண்டு இஸ்ரேல்- பலஸ்தீன போர் நிறுத்தப்பட்டு நோர்வேயின் ஊடாகச் சமாதான முயற்சிகளை ஆரம்பித்திருந்த அமெரிக்கா, பின்னர் பலஸ்தீனத்தைக் கைவிட்டது. இதனால் மீண்டும் போர் ஆரம்பித்தது. பலஸ்தீனத் தலைவர் யாசீர் அரபாத்தும் முடக்கப்பட்டார்.




## பேசுவது ஜனநாயகம், செய்வதோ சர்வாதிகாரம்

இதனால் ஹமாஸ் இயக்கம் எழுச்சி பெற்று போரில் வெற்றியீட்டி, பலஸ்தீனத்தில் ஆட்சியும் அமைத்தது. ஆனால் இன்றுவரைகூட அமெரிக்கச் சார்பு ஐரோப்பிய நாடுகள் பலஸ்தீனப் பிரச்சினைக்கு உரிய தீர்வை வழங்கவில்லை. வெறுமனே இஸ்ரேல் அரசைக் கண்டித்துக் கொண்டு மாத்திரம் இருக்கின்றன.

ஆகவே அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகளும் பிரித்தானியா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளும் தங்களை ஜனநாயகவாதிகளாகக் காண்பித்துக் கொண்டு பேரரசுக்குரிய இன ஒடுக்கல் அணுகுமுறைகளையே உலகத்துக்கு விதைக்கின்றன. இதனையே இலங்கை போன்ற சிறிய நாடுகளும் பின்பற்றுகின்றன. இஸ்ரேலும் அதற்கு விதிவிலக்கல்ல.

ரஷ்யாவை கொம்யூனிச நாடாக வர்ணித்து, அங்கு ஜனநாயகம் இல்லை எனக்கூறிக் கொண்டு உக்ரைன் மூலம் நகர்த்தப்படும் அணுகுமுறை, எதிர்கால உலகத்துக்குப் பிழையான அரசியல் சித்தாந்தங்களையே போதிக்கின்றன. உக்ரைன் அரசை ரஷ்யாவுடன் போருக்குத் தூண்டி, உக்ரைன் மக்களையும் பலிக்கடாவாக்கி, ரஷ்யாவிடம் என்னென்ன ஆயுதங்கள் இருக்கின்றன என்பது பற்றிய கணக்கெடுப்பு ஒன்றைத் தற்போது செய்து கொண்டிருக்கின்றது இந்த அமெரிக்கா. உக்ரைனில் பாதிக்கப்பட்ட ரஷ்ய மக்கள் மற்றும் ஈழத் தமிழர்கள் போன்று தமது தேசிய அங்கீகாரத்துக்காக உலகில் ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கும் ஏனைய தேசிய இன மக்கள் பற்றியும், இந்த அமெரிக்கச் சார்பு நாடுகளுக்கு அக்கறையே இல்லை. தமது பூகோள அரசியல், பொருளாதார லாபங்கள் மாத்திரமே அமெரிக்கச் சார்பு நாடுகளுக்கும் அதன் ஊடகங்களுக்கும் அவசியம்.இதனை உக்ரைன் புரிந்துகொள்ள வேண்டும்.

ரஷ்யப் பிராந்தியத்தில் ஆதிக்கத்தை உறுதிப்படுத்திய பின்னர் உக்ரைனையும் இந்த அமெரிக்கச் சார்பு நாடுகள் கைவிட்டு விடும் என்பதை உணர வேண்டும். ஈழத்தமிழர்களும் இந்த அரசியலை அறிய வேண்டும். வெறுமனே அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகளை நம்பிக் கொண்டிருக்காமல் உலக அரசியல் ஒழுங்கை அறிந்து தமிழ்த் தேசியத்தின் சுயமரியாதைக்காக அகிம்சை வழியில் பேராட வேண்டும் என்பதையே ரஷ்ய- உக்ரைன் போர் உணர்த்தி நிற்கின்றது. ■

உதயனின் ஊடகப் பயிற்சிப் பட்டறை 2022

ஊடகத்துறையில் சாதிக்கத் துடிக்கும் இளையோரே! உங்கள் கனவுகளுக்கு களம் கொடுக்கிறது உதயன்

ஒருவார காலப் பயிற்சி

- நெஞ்சில் உரமும்,
- நேர்மைத் திறமும்,
- சமூகப் பொறுப்பும்,
- எழுத்தில் வலிமையும் ,
- தேடலும் ஆர்வமும் கொண்டுள்ள
- இளையோரே உங்களுக்கு ஒரு வாய்ப்பு!
- இவையே விண்ணப்பிப்பதற்கான தகுதிகள்.

NEWS

விண்ணப்ப முடிவுத் திகதி: 12.03.2022

திறமையானோருக்கு உடனடி வேலைவாய்ப்பு

உதயனின் ஊடகப்பயிற்சி பட்டறை– 2022 க்கு இப்போதே சுயவிபரத்தோடு விண்ணப்பியுங்கள்!

தபால் முகவரி:
உதயனின் ஊடகப்பயிற்சி – 2022
உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மின்னஞ்சல்:
editor@uthayan.com

வட்ஸப் /வைபர்:
0773165555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org